# திருவைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்

T. 2691

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
28 JAN 1960
MADRAS

பதிப்பாசிரியர்:

ஆழ்வார்திருநகரி, பெரியன்-வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்

திருஞானமுத்திரைக் கோவை: எண் - 11.

T. 2691
GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS 28 JAN 1960
31/1/60
Acc. No. 1384

# திருவைகுந்தநாதன் :: :: :: :: பிள்ளைத்தமிழ்

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்காரவர்கள்

பரிசோதித்தது.

பதிப்பாசிரியர்:

பெரியன் - வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

1933

ஸ்ரீ:

# பதிப்பாளர் முன்னுரை

நவ திருப்பதிகளுள் ஒன்றாகிய ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமி கள்ளப்பிரான்மீது பாடப்பெற்றது இப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம். இதன்பிரதி யொன்று சென்னை அரசாங்கத் தொன்னூல் நிலயத்திலுள்ளது. இந்நூலைப் பிரதி செய்வித்து அச்சிட வேண்டுமென்னும் அவாவுண்டாயிற்று. இதனைப் பிழையறப் பரிசோதித்துக் கொடுத்தருளவேண்டுமென்று சென்னைத் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராக விளங்கும் ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்கார் சுவாமிகளைப் பிரார்த்தித்துக்கொண்டேன். அவர்களும் மனமுவந்து எனது வேண்டுகோளுக்கு இணங்கி நூலைப் பரிசோதித்துத் தந்ததோடு ஓர் அரிய முகவுரையும் எழுதி யளித்துள்ளார்கள். அவர்கள்பால் மிக்க நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்.

திருஞான முத்திரைப்
பிரசுராலயம்,
ஆழ்வார் திருநகரி.
10—3—'33

பேரியன்: வே. நா. ஸ்ரீநிவாஸன்,
பதிப்பாசிரியன்.

Acc No. 1384

ஸ்ரீ :

# முகவுரை

பிள்ளைத் தமிழ் என்பது பெருஞ்சிறப்பு வாய்ந்த மகவொன்றினை அதன் குழவிப்பருவத்திலேக் கேற்பக்கொண்டு பாராட்டிச் செந்தமிழ்ப் பாக்களாற் புனைந்துபாடும் பிரபந்த வகையாகும். இங்ஙனம் பாடும் முறை தமிழ்மொழிக்குரிய புறத்திணையுள் பாடாண்பகுதியைச் சார்ந்ததாம். ஆசிரியர் தொல்காப்பியனார்—

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் மருங்கினு மென்மனார் புலவர்"
"குழவி மருங்கினுங் கிழவ தாகும்"

என்ற புறத்திணையியற் சூத்திரங்களால்—'விளையாட்டு மகளிரோடு பொருந்துமிடத்துக் குழவிப்பருவத்தும் காமப் பகுதி கூறப்பெறும்"—என்று கூறுவர். ஈண்டு அவர் காமப்பகுதி என்றது, அரும்பெறற் சிறப்புவாய்ந்த ஆண்மக வொன்றினிடத்து மானிடப் பெண்டிர் நயந்த காதற்சிறப்பையாகும். அச் சூத்திரங்களில், மானிடர் கடவுளர்களிடத்துக் காமப் பகுதி கொள்ளப் பெறும் என்ற ஆசிரியர், குழவிமருங்கினும் அஃது உரியதாம்—என்று அடுத்துக் கூறினமையின், அக் காமப்பகுதி மக்கட்குந் தேவர்க்கும் உரிமையானவாறே, மானிடமுந் தெய்வமுமாகிய குழவிகட்கும் உரியதாம் என்பதும், அவை தம்முளும் ஆண்பாலான தெய்வமும் தெய்வக்குழவியுமே அக்காமப் பகுதிக்குப் பெரிதும் ஏற்பவை என்பதும்

அவர் கருத்தென்பது தெரியலாம்*. பெண்பாற்றெய்வமுந் தெய்வக்குழவியும் மானிடரான ஆண்பாலார் காதல்செலுத் தற்கு ஏற்பனவாகா. இவ்வாறு காதலித்தற் குரியதாகத் தொல்காப்பியனார் கருதிக்கூறிய தெய்வக்குழவி கண்ணபிரான் போன்ற அவதாரமூர்த்தியே என்று கொள்ளல் தகும். "மாயோன் மேய காடுறை யுலகமும்" என்று, முல்லைநிலத் துக் கடவுளாக அவ்வாசிரியர் நினைந்த திருமால், கண்ண பிரானே யாவர். மாயோன் என்பதும் கண்ணன என்பதும் ஒத்த உறுப்புப் பொருளுடையனவாதலும் அறியத்தக்கது. முல்லை நிலத்து ஆயர்பாடியில் வளர்ந்தருளிய அப்பிரானே அந்நிலத்தவரான ஆயர் ஆய்ச்சியர்களால் வணங்கப்பட்ட தெய்வமென்பது முன்னூல்களினும் கண்டது. எனவே, கண்ணபிரான் குழவிநிலையில் அந்நிலத்து மகளிருடன் காமக் குறிப்புற நிகழ்த்திய பாலசரிதைகள் பலவும் தங்காலத் துக்கு முன்பே செய்யுள்வழக்கில் அமைந்திருந்ததை உள்ளத்துக் கொண்டே தொல்காப்பியனார் மேற்குறித்த சூத்திரங்களைக் கூறியவராகலாம் என்று தோற்றுகின்றது. சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையினும், பிற சங்கச்செய் யுட்களினும் கண்ணபிரானது அவ்விளமைச் செய்திகள் பலபடப் புனைந்து கூறப்பட்டும், அவை 'வால சரிதை

---

* சூத்திரப் போக்கினையும், இளம்பூரண ருரையினையு நோக்குமிடத்து இக்கருத்தே அமைவுடையதாதல் விளங்கும். நச்சினார்க்கினியர்—குழவி மருங்கினும் காமப்பகுதி யுரிய என்பத னுள், குழவி என்பது மக்கட் குழவியே என்றும், காமப்பகுதி யென்பது பயனோக்கிய விருப்பம் என்றும் கொண்டு, காப்பு, தால் செங்கீரை முதலாகப் பிள்ளைமைநிலைகளைச் சிறப்பித்தல் போன்ற வற்றை இதற்குக்காட்டுவர். அவ்வுரை, உரையாசிரியர் கருத்தா காமை காண்க.

நாடகம்' என்று வழங்கப்பட்டும் வந்ததினின்று, முற்காலத்தே அப்பிரானது குழவிச்செயல்களில் தமிழ்மக்களுள்ளம் ஈடுபட்டிருந்தமை புலனாம். இவற்றால், கடவுளும் மக்களுமாகிய குழவிகளிடம் மானிடப்பெண்டிர் வேட்கைக் குறிப்புற நயந்த காமப்பகுதியும் தொல்காப்பியனார் காலத்துச் செய்யுள் வழக்குக்கு உரியதாயிற்று என்பது விளங்கும். அங்ஙனம் அமைந்த காமப்பகுதி பற்றிய செய்யுட்களுள் ஒரு சிலவே இப்போது அறியப்படுவன. அதனால், முற்காலத்தே அப்பகுதிபற்றிய புலனெறிவழக்கு எம்முறையில் அமைந்திருந்தது என்பது விளங்கக்கூடவில்லை. ஆனால், தெய்வத்தன்மை வாய்ந்த அடியார்கள் காலத்தே இத்தகைய காமப்பகுதிக்கு அமைந்த இலக்கியங்களை நாம் காணலாகும். அவற்றுட் சிறப்புடையவை, ஸ்ரீ ஆண்டாளும் அவர் திருத்தமப்பனரான பெரியாழ்வாரும் அருளிய திருமொழிகளேயாம். இவர்கள் திருவாக்குக்களில், இளஞ்சிறுமியரது வேட்கைக் குறிப்பேயன்றி, அன்புடைத் தாயரும் முதுபெண்டிரும் தெய்வக் குழவியிடத்துக் காட்டிப்போந்த பிரேமைப்பெருக்கும் புனைந்து கூறப்படுகின்றன. பிள்ளைமைநிலைகளைப் பல பருவங்களாகப் பகுத்துக்கொண்டு, அவ்வப்பருவத்தமைந்த குழவிச்செயல்களில் தாயர் முதலியோரும் இளம்பெண்டிரும் மனங்கவிந்து நிற்கும் பேரழகை, அப்பெரியார்களிருவரும் பாடியவாறு வேறெவரும் பாடியவர் அல்லர். இங்ஙனம் அமைந்த அவ்வடியார்க ளருளிச்செயல்களை, தொல்காப்பியனார் கூறியபடி, குழவிமருங்கினமைந்த காமப்பகுதியை நன்கு விளக்கிநிற்கும் பழைய இலக்கியமாக நாம் கொள்ளலாம். ஆயின், ஈண்டுக்கூறும் காமப்பகுதி, தாயர் முதலியோரது பிரேமையையும் இளஞ்சிறுமியரது காதலையும் பொதுவாகக்

குறிப்பதாகும். முன்னதான பிரேமைக்குப் பெரியாழ்வார் திருமொழியும், பின்னதான காதற்கு நாய்ச்சியார் திருமொழியும் ஏற்ற இலக்கியங்களாகக் கொள்ளற்பாலன.

இவ்வாறு, ஒப்புயர்வற்ற தெய்வ மானிடக் குழவிகளிடம் மகளிர் கொண்ட பிரேமை காதல்களே பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தங்களிற் பிரதிபலித்தல் காணலாம். முற்காலத்தே, புறத்திணைத் துறைகளிற்பலவும் தனிச்செய்யுளிற் பாடப்பட்டு வந்தது என்பது சங்கநூல்களால் நன்கறிந்தது. அத்துறைகளில் ஒவ்வொன்றை எடுத்துக்கொண்டு தனித் தனிப் பிரபந்தமாகப் பாடிவந்த வழக்கும் பண்டு தொட்டே உண்டு. உதாரணமாக பத்துப்பாட்டிற் கண்ட ஆற்றுப்படைகளும், களவழி முதலியனவுங் காண்க. பிற்காலத்தமைந்த தொண்ணூற்றாறு பிரபந்தங்களுட் பல புறத்துறைபற்றியனவேயாம். அம்முறையே குழவிமருங்கினமைந்த காமப்பகுதி பற்றிய புறத்துறையும் தனிப் பிரபந்தமாகப் பாடப்பெறும் வழக்குற்றது. அதன்வகையே பிள்ளைத்தமிழ் என்பது; பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி என்றும் இது வழங்கப்படும். இப்பிரபந்தத்தில் வகுத்துக் கூறப்படும் பிள்ளைப்பருவங்கள் பத்தாம். ஆண்மகவாயின்—

"சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து."

என்றும், பெண்மகவாயின் இறுதி மூன்றுக்கும் பிரதியாகக் கழங்கு அம்மானை ஊசல்கள் சேர்வன என்றும், பிறந்த மூன்றாந் திங்கள்முதல் ஏழாம் ஆண்டுவரை பிள்ளைக்கவி பாடப்பெ

றும் என்றும், பிறவும் விதிக்கப்பெற்றுள்ளன. சிற்றில்போன்ற ஆண்பாற்பருவங்களில் இளஞ்சிறுமியாது வேட்கைக்குறிப் பும் புலப்படப் பாடப்படுதலால், தொல்காப்பியங் கூறுமாறு, காமப்பகுதிக்குரியதாகவும் தெய்வமானிடக்குழவிகள் அமை வனவாதல் காண்க. பிள்ளைப்பருவங்கள் பத்தே இப்பிரபந் தங்களிற் கூறப்படுவனவாயினும், இவற்றுடன் தளர்நடை, அச்சோவச்சோ, புறம்புல்கல், அப்பூச்சி காட்டல், நீராட் டல், பூச்சூட்டல், காப்பிடல், அம்மமூட்டல் முதலியவற்றை யும் சேர்த்துப் பெரியாழ்வார் பாடியருளுதல் அறியத்தகும்.

இங்ஙனம் பெறலருஞ் சிறப்புவாய்ந்த தெய்வமானிடக் குழவிகளைப்பற்றி முன்னோர் பாடிப்போந்த பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பலவாகும். அவற்றுள், தெய்வம்பற்றியவற் றில், பகழிக்கூத்தர் பாடிய திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ் அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், வேப்பத்தூரர் பாடிய அழகர் பிள்ளைத்தமிழ் களையும் மானிடம்பற்றியவற்றில் குலோத்துங்கன் பிள்ளைத்தமி ழையும் பழைமையுடையனவாகக் கூறலாம். இவை யெல் லாம் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் போன்ற நூல்கள் கூறும் இலக்கணமுறைப்படி சிறுமாறுபாடுகளுடன் அமைந்தவை. இத்தகைய பிரபந்தங்களுள் ஒன்றே இத் திருவைகுந்தநாதர் பிள்ளைத் தமிழும்.

இப்பிரபந்தம், தென்பாண்டிநாட்டிலே பிரபலம் பெற்ற நவதிருப்பதிகளுள் ஒன்றான ஸ்ரீ வைகுண்டம் என்ற தலத்தே திருக்கோயில் கொண்டருளும் ஸ்ரீ கள்ளப்பிரான் என்ற திருமால் விஷயமாகப் பாடப்பெற்றதாகும். இத் திருப்பதி யெம்பெருமான்—

"புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை யிருந்து
வைகுந்தத்துள் நின்று
தெளிந்தவென் சிந்தையகங் கழியாதே
என்னை யாள்வாய்"

என்று ஸ்வாமி ஸ்ரீ நம்மாழ்வாரால் மங்களாசாஸனஞ் செய்யப் பெற்றருளியவர்.

"வானிளவரசு வைகுந்தக் குட்டன்
வாசுதேவன் மதுரை மன்னன்"

என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படி 'வானிளவரசு' என்றும் இந்நகர்ப்பெருமான் வழங்கப் பெறுவர். வெண்ணெய் களவு கண்டருளிய ஸ்ரீ கண்ணபிரானே இக்கள்ளப்பிரான் ஆதலால், அப்பிரானது ஸௌசீல்ய ஸௌலப்யாதி குண விசேடங்களே மிகுதியாக இப்பிள்ளைத்தமிழிற் புகழப்படுவன. இது "கள்ளப்பிரான் பிள்ளைத் தமிழ்" என்றும் வழங்கப்பட்டு வந்ததென்பது, இதன் பிரதியிலிருந்து அறியப்படுகின்றது.

இப்பிரபந்த வாசிரியரது பெயர்குல முதலிய வரலாறுகளில் ஒன்றுமே தெரியக்கூடவில்லை. இது பெரிதும் வருந்தத்தக்கது. ஆயினும் இவர் பாடல்களினின்று, தம் காலத்தே உயர்ந்த கவியாக விளங்கியவர் என்பதும், திருமாலடிமையிற் சிறந்தவரென்பதும், வைஷ்ணவ சமய நூல்களில் ஆழ்ந்த அறிவும் அச்சமயத்தில் மிக்கபற்றும் உடையவர் என்பதும் தெரியலாம். இவர் ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்து, அத்தலத் தெம்பெருமானுக்குத் தொண்டுபுரிந்து வந்தோரின் குலத்தவர் என்பது "என் குடியை மனதுகந் தடிமை கொள்ளும்" (2,3,64) என்பது போன்ற தொடர்களிலிருந்து அறியப்படும்.

ஸ்ரீ மணவாள மாமுனிகளின் பெருமைகளை இரண்டிடங்களில் இவர் சிறப்பித்துப் பாடுதலால் இவர் தென்னுசாரிய ஸம்ப்ரதாயஸ்தர் என்பது விளங்கும். ஸ்ரீ மஹாபூர்ணர் என்ற பெரியநம்பிகள் திருவமிசத்தில் உதித்த பராங்குதாசர் என்ற ஆசாரியரின் திருவடி சம்பந்தம் பெற்றவர் இவர் என்பது 11-ம் பாடலால் வெளியாகின்றது. இவற்றோடு எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சொன்னயமும் பொருட்சுவையும், ஓசையின்பமும் பெருக ஆற்றொழுக்காகப் பாடும் ஆற்றல் பெரிதும் படைத்தவர் இந் நூலாசிரியரென்பதனை 5, 23, 46, 74 முதலிய செய்யுட்களிற் காணலாம். இத்தகைய வாக்குடைய பெரும்புலவர்களைப் படைத்துதவும் பெருமை ஸ்ரீவைகுண்டத்துக்கு எப்போதுமே உண்டு. ஸ்ரீமீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களையியற்றியவரும், சிறந்த கவியுமாகிய குமரகுருபரமுனிவரது பிறப்பகம் இத்தலமே என்பது பலரும் அறிவர். வேதந் தமிழ் செய்த காரிமாறப்பிரானது அவதாரஸ்தலத்தை அடுத்துள்ள இத்திருப்பதி தமிழ்மணங் கமழ்தற்குரியது என்று கூறுவதும்வியப்பாமோ?

ஆழ்வார் திருநகரி, ஸ்வாமி நம்மாழ்வார் ஸந்நிதி ஸ்தானீகரும், அந்நகரித் தேவஸ்தானங்கள் சிலவற்றின் சொந்தக்காரரும், தமிழருமையறிந்து அதனிற் பழகுதலையே பொழுது போக்காக உடையவருமான ஸ்ரீமான். பெரியன். உ. வே. வே. நா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, தம் சொந்த வேலையாக இந்நகர் வந்திருந்தபோது, இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையில் இவ்வரிய பிள்ளைத்தமிழ்ப்பிரதி யொன்றிருந்ததைக் கண்டு மகிழ்ந்து உடனே அதனைப் பிரதி செய்வித்து அச்சிற் பிழையறச் சோதித்துத் தரும்படி விரும்பினார்கள். அருங்கலை விநோதரான அவர்கள் விருப்பின்படி, இந்நூல்

ஒருவாறு ஒப்புநோக்கி என்னுற் பரிசோதிக்கப்பெற்றது. தல புராணச் செய்திகள் சில அவசரத்தில் தெரியவிடமில்லாமை யால், இரண்டோரிடத்துப் பொருள் செவ்வனே புலப்படவில. கிடைத்த ஒரு பிரதியே கொண்டு அச்சிடநேர்ந்தமையின், ஏட்டில் விடப்பட்ட எழுத்துக்கள் [ ] இக்குறிக்குள் அடக்கிக் காட்டப்பட்டன. ஏட்டிறுதியிற் கண்ட சுவடி யொன்றில் "1064-ம் ஆண்டு அற்பசிமீ 20உ சனிவாரம் அஸ்த நக்ஷத்திரமதில் ஸ்வாமி கள்ளப்பிரான் பிள்ளைத்தமிழ் எழுத வாரம்பித்தது. ஸ்ரீ கள்ளப்பிரான் பாகவதன் சீதா ராமதாசன் குமாரன் கோவிந்தன் ஏடு" என்ற வாக்கியங் காணப்படுகின்றது. இதனுல், இற்றைக்கு 45 வருஷங்கட்கு முன் இவ்வேடு எழுதப்பட்டது என்பது விளங்கும். திரு வேங்கடசதகக் காப்புச் செய்யுளும் இதனுடன் உள்ளது. இவற்றினின்று, இப்பிள்ளைத்தமிழ் அப்பிரதேசத்தில் தமிழ் மாணவரால் விருப்புடன் எழுதிப் படிக்கப்பட்டு வந்ததென் பது தெளிவாம். உத்தேசமாக 100, 150 வருடங்கட்கு முன் இந்நூல் பாடப்பட்டதாகவே நாம் கொள்ளலாம்.

புலவர்பெருமக்கள் தம்மன்பினுற் பாடிப்போந்த இத்தகைய நூல்கள் சிதல்வாய்ப்பட்டுப் போகாமல் ஸ்ரீமாந். பெரியன். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்ஸ்வாமி செய்துவருவதுபோன்ற தமிழ்த்தொண்டினை நம் நாட்டுச் செல்வர்பலரும் செய்ய முற்படுவார்களாயின், தமிழணங்கு வளம் பெற்றுப் பொலி யத் தடையுண்டோ? தமிழ்த்துறையில் ஆர்வங்கொண்டு திளைக்கும் ஆண்டிற்சிறியரான பெரியன் ஐயங்காரவர்கட்கு எல்லாநன்மைகளு முளவாக, ஸ்ரீ காரிமாறப்பிரான் கருணை பெருகுவதாக.

திருவல்லிக்கேணி,<br>21—3—'33.

இங்ஙனம்,<br>மு. இராகவையங்கார்.

ஸ்ரீ

திருவைகுந்தநாதன்

# பிள்ளைத் தமிழ்

காப்பு

## க. தெய்வ வணக்கம்

1. செம்பொன்னி னின்பநிறை சதுமறை பழுத்தொழுகு
தெள்ளமுத சார மென்னுந்
திவ்யப் பிரபந்தநா லாயிரமு நாதமுனி
தேறவருள் செய்து கந்து
தம்புகழ் விரித்ததைக் கண்டுலகெ லாந்தொழத்
தகைமேவு குருகை தன்னிற்
றயவுட னுதித்தமகிழ் மாறனு வீறனிரு
சரணமல ரடிபணிகுவாம்
தும்பிமுரல் சோலைசூழ் பலவினிடை முதிர்கனிச்
சுளைநறவு தோய்த்து மதமாத்
தொடர்பிடிக் குதவிமகிழ் திருவழுதி நாடனுயர்
தூயபிர மன்வணங்கும்
நம்பரமன் வைகுந்தை நாதன்மணி வண்ணன்மால்
நவநீத சோரன் மாயன்
நாரணன் சீர்பரவு பிள்ளைத் தமிழ்க்கவிதை
நவிலுமென் சொற்றழைபவே. (க)

2. முப்பரஞ் சோதிகனி மூர்த்திதிரு நாபிதன்
முளரிவந் தவதரித்த
முனிவனின் புறநர்வி னுறைவாணி கலைமாது
முத்தர்புகழ் காயத்திரி

செப்பரிய பனுவலா ளூர்பூர வாகினி
செழுந்தமிழ்க் குதவி செய்யுஞ்
செல்விபா ரதியுலக மாதா வெனுந்தேவி
செம்பொற்ப தம்பணிகுவாம்
மைப்புயல் முழங்கவரி யிபமென்று குதிபாயும்
மலைபாவு களிகூர்ந்திடும்
மகிமைபெறு தென்வழுதி நாடனென் குலமுழுது
மனதுகந் தடிமைகொள்ளும்
அப்பன்வேங் கடவாணன் வைகுந்தை நாதனிணை
யடியேத்து பிள்ளைக்கவி
ஐந்தி லக்கணமு மதனுட் பொருளும் [வாய்ந்தினி
த]மைந்தெனது சொற்றமிழையவே. (௨)

3. அண்டர்தவ வேதியர்கள் பூசுரர்கள் மன்ன[வ]ர்க
ளனைவரு மிறைஞ்சி யேத்தும்
அம்புவி புகழ்ப்புதுவை மேவியுறை பட்டர்கோ
னருமைமக ளெனவு தித்து
வண்டுளவ மணியரங் கேசர்மகிழ் பாமாலை
வாய்மலர்ந் தருளி யினிய
மதுவொழுகு பூமாலை சூடிக் கொடுத்தசெக
மாதாவி னடிபரவுவாம்
கொண்டல்கடல் மொண்டுமலை சென்றுபொழி கின்ற
குடவளைக் குலமதனொடும் [புனல்
குஞ்சரக் கோடுசந் தகில்கனக முத்தங்
கொழித்துலவு பொருநைநதித்
தண்டுறை வளம்பெருகு தென்றிருவை குந்தைநகர்
தன்னில்வள ரெங்கள் பெருமான்
சலசையணி மார்பணிசை பரவுபிள் ளைக்கவிதை
சாற்றுமென் சொற்றமிழையவே. (௩)

4. செய்யதே மாப்பல வரம்பைமுத லியகனித்
தேனுமலர் பொழியு நறவுஞ்
சேர்ந்துசெந் நெற்கழனி பாய்ந்துபைங் கூழ்வளர்
திருக்கச்சி தனிலு தித்தோன்
வையகத் தகழிமிசை வார்கடலை நெய்யிட்டு
மாத்தாண்ட தீப மேற்றி
மங்கலச் சொன்மாலை செங்கண்மால் கழல்புனையு
மறைமுனி பதந்து திப்பாந்
துய்யகம லத்தன்வந் தடிதொழுது சுருதிமுறை
சொல்லியா ராதனைசெயச்
சுகமுனியை நிகர்பரம பாகவதர் பல்லாண்டு
துங்கமுட னோதி நிற்பப்
பையரவின் விடமுண்ட பண்ணவன் முதற்கடவுள்
[1]பார்மீ திறைஞ்சி யேத்தப்
பாவாணர் புகழுந்தென் வைகுந்தை நாதனிசை
பகருமென் சொற்றழையவே. (௪)

5. ஓங்மோ நாராய ணாவென்னு நாமத்தை
யுச்சரித் துள்ளங்களிப்
புறுமன்பு தகழியா வார்வநெய் பெருகவின்
புருகுநெஞ் சிடுதிரியென
ஞானதீ பச்சுட ரெடுத்தா தரித்தமுனி
நற்சர ணிதம்பரவுவாம்
நறைவண்டு குழல்மொய்ப்ப வதுபொரூ திடைட துவளு
நடைகண்டு பிடியொதுங்கும்
மானனையர் வேல்விழியர் மையல்கொள் வனப்புநிறை
மைந்தர்பொருள் மேலாசையால்
மருவிப் பிரிந்தவரை வரவுகண் டுள்ளமகிழ்
மாதர்முக முறுவ லெனவே

(பிரதி) 1. தறைமீ.

கானமர் செழுங்கமல முல்லைமல ரெங்குமலி
காவுசூழ் திருவை குந்தைக்
கள்ளப் பிரான்சரிதை யின்புற்ற நவிலுமென்
கவிதையின் சொற்றமையுமே. (ரு)

6. திருவும்பொன் மேனியு மருக்க னிறமுஞ் செவ்வி
திகழாழி யுஞ்சங்கமுஞ்
சிந்தையுட் கண்டுவந் தேத்தியந் தாதிமொழி
செய்துமகிழ் பரம யோகி
தருவனு மலிந்தளிக ளிசைபாட மஞ்ஞையுத்
தண்டலைகண் மீதி லாடுந்
தண்கமல வாவிசூழ் மயிலைப்பி ரான்தமிழ்த்
தவமுனிவ னினிது காக்க
பருவமுகில் சொரியுமிரு நிதியுநவ மணிகளும்
பணிலம துயிர்த்த முத்தும்
பகலொளி பரப்புதென் வைகுந்தை நகர்மேவு
பண்ணவனை வேத நாலுங்
கருதரிய முததிக்கு வித்தான தேவனைக்
கருணைபொழி புண்ட ரீகக்
கண்ணனைப் பொற்பூவை வண்ணனைப் புகழுமென்
கவிதையின் சொற்றமையுமே. (சா)

7. நான்முகனை நாரா யணன்படைத் ததுவுமந்
நான்முகன் முன்முகமதாய்
நக்கனை யளித்ததுவு மிக்கான தேவனந்
நாரண னென்ப தனையும்
மாநிலத் தோரறிய வோதவென் றின்பமொடு
மழிசைவந் தவதரித்தோன்
மதிலரங்கத் துறையு மமலனைக் கண்டகண்
மற்றொன்று காணதெனக்

காணிசை பொருந்துக்கவி யீரைந் துரைத்துமால்
கழலிணை புனைந்து மகிழ்வோன்
கனகமணி யாரத்தை யன்பர்கவ ராரென்று
கட்செவித னிற்கையிடுந்
தேன்மூரா று மாலையணி சேரர்கோ னிம்மூவர்
சேவடிப் போது பணிவாந்
தென்வைகுந் தைக்கள்வர் தம்புகழ் விரிக்குமென்
செந்தமிழ்ப் பாத்தழையவே. (எ)

8. ஈரெழு.பெரும்புவன மெங்குநிறை கின்றதோ
ரீசனு ரணனென்பதை
யிருக்குமறை யோதியுந் தெரியாத நுண்பொருளை
யிவ்வுலகு ளோரறியவே
வீரநெடுவன் றிறல்கள் சேர்வழுதி மன்னவன்
வியப்புறக் கிழியறுத்து
மேன்மைதிகழ் பல்லாண்டு பாடிடுகிழ் பட்டர்கோன்
மெய்ப்பதப் போது தனையும்
சீர்கொண்ட திருமாலை யாலரங் கேசனே
தெய்வமென் றறிவை யுணருஞ்
செல்வனிரு கழலிணையு முன்னிமுடி சூடியனு
தினமுமஞ் சலிசெய்குவாம்
பாரதிக் கிறைவனு ராதனைசெய் தடிதொழும்
பங்கே ருகக்கண்ணனைப்
பார்புகழ்தென் வைகுந்தை மேவியுறை மாயனைப்
பகருமென் சொற்றழையவே. (அ)

9. மன்னுயிர்க ளுய்யவே தத்தினுறை நுண்பொருளை
வாய்த்ததிரு வாய்மொழியென
மாறன் பணித்தகற் காறங்க முரைசெய்ய
வையகத் தவதரித்தோன்

பன்னுமுத் தமிழினல் நாற்கவிதை யுரைசெய்து
பரமனடி கண்டு வந்த
பரகாலன் மங்கைதிரு மணவாள னிருசரண
பங்கே ருகப்போதையும்
நன்னெறியி லுய்ப்பதற் கிந்நிலந் தனில்வந்த
நாவீற னேயலாது
நான்வேறு தெய்வங்க ளறியே னெனுங்கவிதை
நாட்டிமகிழ் மதுர கவியின்
பொன்னெழில் பொருந்துகழ றன்னையு நிதந்தொழுது
புங்கமுடனேதுதிப்பாம்
பொங்குபுகழ் வைகுந்தை தங்கியுறை கள்வனைப்
புகலுமென் சொற்றழையவே. (௯)

10. செகமீது சேதனர்க ளுய்ந்துகரை யேறிடச்
செவ்விபெறு ரகசியத்தைச்
செப்பிநா ராயணன் பரனெனக் காட்டியே
தெளிவித்த கருணை வள்ளல்
இகபர மிரண்டினுங் கதியுதவு மாறனடி
யிணைமலரின் வாழு மன்பன்
யின்பநிறை பூதூரில் வந்துமகி ழெதிராச
னிருசர ணிதம்பரவுவாம்
ககனத்தை மூடிவளர் கதலியின் கனிதனைக்
கமழ்புதிய நறவு தோய்த்துக்
கடுவன்முசு வுக்குதவு நாடனெழி லந்தருக்
காமன்வந் தேவணங்கும்
புகழ்மருவு வைகுந்தை நாதனிசை போற்றுநற்
பொலிவுமிகு செந்தமிழ்க்குப்
பொருந்துமீ ரைந்தழகு மேய்ந்துமன தின்புறப்
புகலுமென் சொற்றழையவே. (௰)

11. சந்தனக் காவுதிகழ் செம்பதும வாவிசூழ்
சாந்தூரி லவதரித்தோன்
தண்குருகை மேவும்ப ராங்குசன் வியந்தொரு
தாசனெனு நாம முறுவோன்
எந்தமிரு புயமதிற் சங்காழி தமையணிந்
திம்மையினு மறுமை தனிலும்
ஏழேழ் பிறப்பினு முவந்துவிலை கொண்டிங்கி
ழிறையவன் பெரிய நம்பி
கந்தமரு வுஞ்சரண பங்கயப் போதையுங்
கருதுததி யர்க்கு முத்தி
காட்டுமணவாளமுனி தாட்டுணை யிரண்டையுங்
கவினுட னிதம்பணிகுவாம்
செந்திருமடந்தையருள் சந்தத நிறைந்துலவு
தென்வைகுந் தைக்கள்வனைத்
தேவாதி தேவனெனு மூவர்க்கு முதல்வனைச்
செப்புமென் சொற்றமிழையவே. (யக)

தெய்வவணக்கம் முற்றும்.

---

## உ. செங்கீரைப் பருவம்

12. பூமாது கருணைபொழி சீர்மருவு வயிணவர்கள்
புனிதமறை யோதி நிற்பப்
போதக முகக்கடவு ளாறுமுகன் மாதவர்கள்
புத்தேளி ரனைவருடனே
காமாரி வந்தடி பணிந்துமன தார்வமொடு
கைதொழுது புடைநெருங்கக்
கஞ்சமல ராசனன் வணங்கியெப் பொழுதினுங்
கருதியா ராதனைசெயக்

கோமா னெனுந்தலைவர் பாவர்ணர் சூழ்ந்துகவி
கொண்டுநின் கழலி லணியக்
குவளைவிரி மலர்தனை நிகருமிரு விழிகொண்ட
கோசலை பெறுங்கண் மணியே
தேமா வெனுஞ்சொன்மொழி மாமேவு மணிவண்ண
செங்கீரை யாடி யருளே
தென்றிருவை குந்தைநகர் நின்றுநித மகிழ்கள்வ
செங்கீரை யாடி யருளே. (க)

13. ஆவுரு வமைந்துபுவி மாதுதவ மேகருதி
யன்புட னியற்று மந்நாள்
யருள்கொண் டளித்தவட் பாலனஞ் செய்வதற்
கவதரித் தோங்கு பொழுதிற்
பூவையொளி பைப்பொருவு மேனியெழி லுங்கமலை
பொற்பிலகு மணிமார்பமும்
புரிசங்கு நேமிகதை வாள்தனுவொ டைம்படை
பொறித்தவொரு நான்கு கரமுங்
கோவையின் கனிநிகர்செவ் வாயுமிரு காதிலணி
குண்டலமு மந்த காசக்
குறுமுறு வலும்பதும விழியுமணி மகுடமுங்
குல்லைமல ருங்கணுற்றுத்
தேவகி யுகந்துபுகழ் தேவாதி தேவனே
செங்கீரை யாடி யருளே
தென்றிரு வைகுந்தைநகர் நின்றுநித மகிழ்கள்வ
செங்கீரை யாடி யருளே. (உ)

14. மேதினிப் பாரமது தீரமன தெண்ணிநீ
மேவுபா லாழி நீங்கி
மேதாவி யானவசு தேவர்க்கு மகனாகி
மெல்லிய லசோதை யென்னும்

மாதுமுலை யுண்டுகளி கூர்ந்துசக டாசுரனை
மாய்ந்துவிழ வேயுதைத்து
மங்கையென வந்ததொரு பேய்ச்சியுயிர் கொண்டமா
மணிநிறப் பொற்கொண்டலே
காதுவேற் கண்ணினார் பாதநூ புரவொலிகள்
கருதியன மென்று சேவல்
காமுறுந் திருவழுதி நாடநங் குலநாத
கங்கைநதி யொழுகு பாதச்
சீதரா மலரின்வரு கோதைபுகழ் மணவாள
செங்கீரை யாடி யருளே
தென்றிருவை குந்தைநகர் நின்றுநித மகிழ்கள்வ
செங்கீரை யாடி யருளே. (௩)

15. நந்தன்மனை வந்துகுடி கொண்டுவினை யாடவந்
நாகணை துறந்து பாடி
நகர்மேவி யெண்ணிரண் டாயிரந் தொகைகொண்ட
நங்கைகோ வியர்க ளென்னும்
இந்துநுத லார்களுறை சேரியிட மெங்குமே
யேய்ந்தகோ லங்க டம்மை
யிசைபயிலு மகரயாழ் நாரதன் கண்டடி
யிறைஞ்சவருள் செய்த முகிலே
சந்தகில் பீலிநவ மணிகளங் காடியின்
தன்மையென் றதிச யிப்பச்
சலஞ்சல நிறைந்திகழ் பொருநைமா நதிவளத்
தகைமருவு வழுதி நாட
சிந்துரத் திலதமணி யிந்திரை தன் மணவாள
செங்கீரை யாடி யருளே
தென்றிருவை குந்தைநகர் நின்றுநித மகிழ்கள்வ
செங்கீரை யாடி யருளே. (௪)

16. காவினுறை பூவையிசை கேட்டுக் களிப்புடன்
கமலமதில் வாழு மன்னங்
கருதுதன் பெடைதனை முயங்கிமன தின்பமொடு
கண்படை பொருந்து மெழில்சேர்
வாவியருகுற்றுவளர் கேதகை குரண்டமென
வாளைபுன லூரடொளிக்கும்
மாங்கனி பிதிர்ந்தொழுகு சாறுநற வம்பெருகு
மகிமைபெறு வழுதி நாட
மேவுசமர் மீதிரத மேல்வரு கிரீடிக்கு
மெய்ப்பொரு ளுரைத்த முகிலே
மேலான பலகோடி யண்டப் பரப்பினுள்
வேதன் புராரி முதலாந்
தேவர்க்கு மமுதின்வரு தேவிக்கு மணவாள
செங்கீரை யாடி யருளே
தென்றிருவை குந்தைநகர் நின்றுநித மகிழ்கள்வ
செங்கீரை யாடி யருளே. (ரு)

வேறு

17. காவுறை மந்தி யருந்திட முக்கனி
கடுவன ளிப்பதனைக்
கண்டிடு மள்ள ருராற்ற மறுத்தது
கனிகொடு விட்டெறியும்
பூவிரி வாவியொர் சாகர மெனமுகில்
புனலை நுகர்ந்திடுமே
பொன்னெழில் முத்தொடு சோனை வழங்கு
பொலன்றிகழ் வளநாட
தாவர சங்கம மெங்கு நிறைந்த
தயாபர நற்பொருளே
சங்கர னுக்குயர் கங்கை கொடுத்த
சரோருக பொற்சரணு

தேவர்தொ ழுங்கரு ணாநிதி ரகுபதி
செங்கோ செங்கீரை
தேனிசை துளவணி வானிள வரசே
செங்கோ செங்கீரை. (௬)

18. ஆத வனைத்தொழு நீண்மதி லும்புய
லண்ணிய சோலைகளும்
அம்பவ ளக்கொடி போலிள மங்கைய
ராட லரங்குகளும்
போதமு ரைத்திடு நங்குர வோர்கள்
பொருந்துநன் மாளிகையும்
பொற்றொடி மெல்லியர் வதுவையு மேவிய
புனித நகர்க்கிறைவ
மாது துரோபதி மாயவ னேயென
வன்றயர் கலையெனலும்
மன்னவை முன்னவள் கூறை யருவகை
வரம தளித்தருளும்
சீத மறைப்பொருண் மீதுறை கனியே
செங்கோ செங்கீரை
தேனிசை துளவணி வானிள வரசே
செங்கோ செங்கீரை. (எ)

19. பூவல யத்துள காவலர் விப்பிரர்
புகலரு மாமறையோர்
புங்கவ ரன்பொடு மின்விளை யாடல்
புகழ்ந்து பணிந்திடவே
மாவிரி பூநற வுண்டு களிப்பொடு
வண்டுக ளிசைபாடும்
மஞ்ஞைகள் தோகை விரித்து மதர்ப்பொடு
மாடம தனிலாடுங்

காவுறை யோதிம மங்கையர் மென்னடை
கண்டு நிதந்தொடரும்
கதலி நெருங்கிய முளரி வளஞ்செறி
கவின்மிகு வளநாடா
தேவகி மணிவயி றுவல்கொள் களிறே
செங்கோ செங்கிரை
தேனிசை துளவணி வானிள வரசே
செங்கோ செங்கீரை. (அ)

20. மங்கையர் கொங்கை சுமக்கரி தாய்மிக
மறுகுறு நுண்ணிடையை
வாளரி யாமென வேழ மருண்டு
வெருண்டு மறைந்துறையும்
பொங்கரின் மீது தவழ்ந்திடு திங்கள்
புடைக்கு மிறுலருவி
பொற்புறு சோலை வளர்க்கு நலந்திகழ்
பொதிய மலைக்கிறைவ
கங்கை தரித்தவ னங்கையில் வைத்த
கபால நிறைந்திடவே
கருணையு டன்பலி யன்று கொடுத்தருள்
கஞ்ச மலர்க்கரனே
செங்கமலத்திரு மேவுமின் னமுதே
செங்கோ செங்கிரை
தேனிசை துளவணி வானிள வரசே
செங்கோ செங்கிரை. (க)

21. அங்கண் விசும்புறை தேவர் தபோதனர்
அனைவரு மடிபரவி
யன்புட னின்றிரு லீலை தனைக்கண்
டகமது களிகூரப்

புங்கமு டன்புன லுஞ்சசி யுந்திகழ்
பூதி கடுக்கையிளம்
புல்லொ டெருக்கலர் சங்கு மணித்திரள்
புனைசிவ சம்புவெனுஞ்
சங்க ரனைப்பெறு பங்கய னைத்தரு
தாமோ தரமுகிலே
தனிமதி வெண்குடை புவண நெடுங்கொடி
தம்பி யிசைந்தவரச்
செங்கைகொ ளம்படை தங்கிய மாநிதி
செங்கோ செங்கீரை
தேனிசை துளவணி வானிள வரசே
செங்கோ செங்கீரை. (ம)

செங்கீரை முற்றும்.

---

## ௩. தாலப்பருவம்

22. மதியை நிகர்த்த திருநுதலின்
மறுப்போற் சாந்துத் திலதமிட்டு
வதியுங் களப முலைமடவார்
வாழு மணிமா ளிகைச்சிறப்பும்
உதய கிரணன் வலஞ்சூழ
வோங்கும் பொன்மா மேருகிரி
யொத்த நெடுந்தே ரணிவகுப்பு
முபரும் புரவித் திரட்செறிவு
முதிய தவத்தோ ருபயமறை
மொழியுங் கழகச் சாலைகளு
முகில்போ லொலிக்கும் வாச்சியரும்
முயற்சி யிருத்தும் பதிக்கரசே

கதிரோன் குலத்தி லுதித்தசெழுங்
கனியே தாலோ தாலேலோ
கற்றோர் துதிக்கும் வைகுந்தைக்
கனியே தாலோ தாலேலோ. (க)

23. சங்கத் தமரார்க் கிடையூறு
தவிர்க்கச் சலதி தனைமறந்து
சரயு வெனுமா நதித்துறைவன்
றனக்கு மகனென் றுதித்திடுநாள்
எங்க ளமுதே கண்மணியே
யிரவி குலத்துக் கொளிவிளக்கே
யிருமைப் பயனுந் தருநிதியே
யிமையோர் தவமே யிளங்களிறே
வங்கக் கடல்சூழ் புவித்தலைவா
மதலா யெனக்கோ சலைமடமான்
மகிழ்வுற் றிருத்தும் பொன்னூசல்
மருவித் துயிலு மணிவண்ணா
பங்கே ருகனும் பசுபதியும்
பணியும் பரனே தாலேலோ
பதின்மர் பரவும் வைகுந்தைப்
பதிவா ழரசே தாலேலோ. (உ)

24. முல்லை முறுவல் பவளவிதழ்
முளரி வதனங் குரும்பைமுலை
மூரிக் குழலார் நடைநிகர்த்த
முகில்போன் மருவும் பிடிக்குழுவுஞ்
செல்வின் முழக்க மெனவார்ப்புஞ்
சினமும் பொருந்து மதவேழத்
திரளுஞ் செறிந்த நெடுஞ்சாலை
திகழும் பதிவா னிளவரசே

வில்லை வளைத்துக் காத்து நின்ற
விசையன் றுயரந் துடைப்பதற்காய்
விளங்கு மறையோன் மைந்தர்களை
விருப்போ டளித்த பெருமானே
குல்லை நறுந்தா ரணிநீலக்
குன்றே தாலோ தாலேலோ
கோக னகைவாழ் *வைகுந்தைக்
கோவே தாலோ தாலேலோ. (௩)

25\. கலைசேர் சசியைப் பொருவுமுகங்
கனியைக் கடுக்கு மினியமொழி
காவி மலரைச் செறுத்தமொழி
கணிகை மடவார் காப்பேந்த
மலைபோற் புயத்து வயவேந்தர்
வணங்கி நெருங்கக் குருகையர்கோன்
வழங்குந் திருவாய் மொழிப்ரபந்த
மறையோர் நவில வாச்சியங்கள்
அலைபோ லொலிப்பச் சதுர்வேத
மார்ப்பக் கொடிகள் புடைதயங்க
அமரர் கரங்கள் குவிப்பவிழா
வணியும் பதிவா னிளவரசே
சிலைவா ணுதற்கோ சலைதவத்தின்
திருவே தாலோ தாலேலோ
செம்பொன் மதில்சூழ் வைகுந்தைத்
தேவே தாலோ தாலேலோ. (௪)

* இப்பாட்டிலும் பின்வரும் பாடல சிலவற்றிலும் 'தென் வைகுந்தை' 'திருவைகுந்தை' என்று ஏட்டுப் பிரதியிற் காணப்படி னும், ஓசைநயுங்கருதி 'வைகுந்தை' என்றே அவை உரியவிடங் களில் அமைக்கப்பட்டன.

26. இசையுந் திருவும் பெரும்படையு
மேய்ந்த மனக்கெம் பீரமுடன்
இரைக்குங் கடலை யுடுத்தபுவி
யெங்குந் தனிச்செங் கோல்செலுத்தி
அசையாப் புகழ்பெற் றரசாளு
மண்ணல் தனக்கு மகவெனவே
அயோத்தி நகர்வந் துதித்திடுநாள்
அன்னை யெனுஞ்சிற் றவைமனையில்
வசையார் கூனி கூன்புடைக்க
வரிவில் வளைத்துண் டையைத்தெறித்து
மகிழ்வோ டிருந்து மனமுவக்கு
மணியே யமரர் தொழுங்கள்வ
திசையா னனத்தோன் தினம்பணியுஞ்
செல்வக் கொழுந்தே தாலேலோ
செம்பொன் மதில்சூழ் வைகுந்தைத்
தேவே தாலோ தாலேலோ. (௫)

27. தண்டா மரைப்பூந் தவிசுறைவோன்
தருக்கா வலவ னுமைக்கதிபன்
சயிலந் துளைக்க வயிறுரந்தோன்
தபனன் சசியைங் கரன்முதலோர்
கொண்டாட் டங்கொண் டுளங்குளிர்ந்து
குனித்துத் தொழக்கோ வியருடனே
குடையும் புனலில் விளையாடுங்
கோவே யாயர் குலதிலகா
வண்டார் குழற்சத் தியபாமை
மார்பந் தழுவு மணவாளா
மருவுஞ் சீவ கோடியெலா
மகிழ்வோ டுன்றன் வயிற்றடக்கிப்

பண்டா விலையிற் கண்டுயிலும்
பரமா தாலோ தாலேலோ
பதின்மர் பரவும் வைகுந்தைப்
பதிவா ழரசே தாலேலோ. (௬)

28. செய்ய திருவாய்ப் பாடிநகர்ச்
சிறுவர் தம்மோ டொருகானஞ்
சென்று பசுவி னிரைமேய்த்துச்
சின்னா ளாடல் புரிந்ததற்பின்
வெய்ய சமரந் தனிற்பருதி
வெயிலை யாழி கொடுமறைத்து
விசைய னுயிரைக் காத்தளித்து
விளங்குங் கருணா நிதிக்கடலே
துய்ய தவத்தோ ருளத்துமறைச்
சிரத்துந் தொழும்பு பூண்டகுலத்
தொண்ட ரிடத்து மாறன்மொழி
சொல்லுந் தலத்து மயனாலும்
எய்தற் கரிய பெரும்பதத்தும்
இருக்கும் பொருளே தாலேலோ
இருக்கு முழங்கும் வைகுந்தைக்
கினிதா மமுதே தாலேலோ. (௭)

29. படவா ளரவம் பூங்கதலி
பசுந்தேன் குமுதஞ் செப்பெனவே
பகரு நிதம்பங் குறங்கிசைவாய்
பருத்த தனஞ்சே ரெழிலாயர்
மடவார் கூறை தனைக்கவர்ந்து
வளருங் குருந்த மரத்தேறி
வாழ்த்துங் குரவை தனைக்கேட்டு
மகிழ்வுற் றிருக்கு மணிவண்ணா

வடபத் திரமும் புளிங்குடியும்
மதில்சூ ழரங்க மாநகரும்
மறையோர் புகழு[ம் வெஃகாவு]
மதியை நிகர்த்த வெண்ணிறப்பாற்
கடலும் பொருந்திக் கண்டுயிலுங்
கருமா முகிலே தாலேலோ
கற்றோர் துதிக்கும் வைகுந்தைக்
கனியே தாலோ தாலேலோ. (அ)

30. பச்சை பொருந்துங் குழன்மடவார்
படிந்த புனற்போல் விரிதிரையின்
பரவைப் புலவு தனைநீக்கிப்
பகருஞ் சாந்தங் கமழ்நாடா
கொச்சை யாயர் குடில்வளர்ந்து
கோவி னிரையைக் காப்பதற்குங்
குன்ற மெடுத்து மழைதடுத்த
குழகா நந்தன் பெறுதவமே
பிச்சி தவனஞ் செறிமுட் டம்
பேரை குறுங்கை யிடபகிரி
பீடு கொழிக்குஞ் சேடமலை
பெரியோர் வழுத்து நெடுந்துவரை
கச்சிப் பதியு நின்றுவக்குங்
கனகாம் பரனே தாலேலோ
கற்றோர் துதிக்கும் வைகுந்தைக்
கள்வா தாலோ தாலேலோ. (கூ)

31. பஞ்சை நிகர்க்குந் தளிரடியும்
பணியைப் பழித்த வேள்மனையும்
படையைத் தூரத்து மயில்விழியும்
பகரு மொழிற்கோ சலைமடமான்

நெஞ்ச மகிழ வருங்களிறே
நித்தர் பரவு மெய்த்தவமே
நேமி நடத்துந் தெசரதன்ற
னிதியே நாளு முளங்கருதி
வஞ்ச மறலி யணுகாமல்
மயக்கு மிதர சமயநெறி
வாத ரிடத்திற் சேராமல்
வாழு மதியுந் தருங்கள்வா
கஞ்ச மலராள் தனமுயங்குங்
கருமா முகிலே தாலேலோ
கற்றோர் துதிக்கும் வைகுந்தைக்
கனியே தாலோ தாலேலோ. (௰)

தால் முற்றும்

---

## ௪. சப்பாணிப் பருவம்.

32. நங்கைபெறு மாறனிசை போற்றியுயர் பாகவதர்
நவிலும்ப்ர பந்த மொருபால்
நாவலர்கள் பாவினிசை வேதவொலி மாதர்சதி
நடனங்கள் புரிவ தொருபால்
பங்கயன் முதற்கடவுள் சங்கந் திரண்டடி
பணிந்துகை குவிப்ப தொருபால்
பாராளு மன்னவர்க ளோர்பால் வணங்கமகிழ்
பைந்துழா யணியு முகிலே
மங்கைகோ சலையினிரு கொங்கைவழி பாலுண்டு
• மதிவதன நோக்கி யவடன் •
மடிமீ திருந்தன்ப ருளமேவி விளையாட
வருமரக தக்குன்றமே

சங்கர னுவந்துபுகழ் செங்கமலை மணவாள
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைக்கடவுள்
சப்பாணி கொட்டி யருளே. (க)

33. நக்கனவன் மக்களனல் வெப்புமுது கிட்டுவழி
நண்ணமனை தெண்ணி யோடி
நாற்றிசையு முட்டியினி யாற்றலரி தெனவெண்ணி
நாரணு சரண மிருநால்
அக்கரத் துறைமூல காரணு சரணமறை
யாரணு சரண மெனவே
யன்புடன் வழுத்தவா ணன்பிழை பொறுத்துமகி
முச்சுதா பச்சை மாலே
இக்குமொழி மாதர்மனை சிக்கமுறு வெண்டயி
ரெடுத்துணவு கொண்ட சோதை
யிருகண்க ளிக்கவவ ளொக்கலை மருங்கினி
லிருந்துலவு செங்கனகமே
தக்கதரு வாசன்மேற் சக்கர நடாத்துமுகில்
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (உ)

34. பூமன்னர் திறையிடச் சோமவெற் றிக்குடை
பொருந்தமா கதர்க ளேத்தப்
பூசுரர்க ளாசிசொல வேழையர்கள் சாமரை
புரட்டவரி யாச னத்திற்
காமனெழில் கொண்டதென மேவியுல காண்டகளை
கண்ணனை மித்தசரதன்
காமுற் றியற்றுபெரு வேள்விப் பயன்பெறக்
கருதிவந் தருளு நிதியே

வாமமே கலையணியு மாதுகோ சலையிரு
மலர்க்கரங் கொண்டெ டுத்து
மஞ்சுதிகழ் பொன்மேனி நீராட்டி முத்தமிட
மகிழுங் குணக்குன்றமே
தாமரைப் போதிலுறை மாமருவு மணிவண்ண
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (௩)

35. அந்தணர்கள் விண்ணவர்கள் வன்றுயர் தவிர்க்கநீ
ளலைமோது திரைவீசுபா
லம்பரத் துயிலமர்ந் திம்பரிற் புகழ்திரு
வயோத்திமா நகர்வந்தநாட்
பந்துமுலை யிந்துநுத லிந்திரை யெனத்திகழ்
பசுந்தொடிப் புனைகை கேசி
பரதனிப் பாராள நீயடவி செல்லென்று
பார்த்திப னுரைத்த தெனலுஞ்
சிந்தையுண் மகிழ்ந்தனுச னோடுமிதி லைக்கண்வரு
செல்வியொடு நகர்க டந்து
தெண்டக வனத்துமுத் தண்டிக ளருஞ்சாலை
சென்றுமரு வுங்கொண்டலே
தந்தைமொழி கடவாத சுந்தரக் கடவுளே
சப்பாணி கொட்டி யருளே.
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (௪)

36. மாசற்ற வெண்ணிறப் பாற்கடலி னடுவிலொரு
மரகதக் கிரிபோலுநீ
வனமாலை சூடியிரு மாதரடி வருட[மா]
மலர்விழி [1]துயின்ற முகிலே

(பிரதி.) 1. யினிதுயின்ற.

ஈசற்கு முளரியிதழ் வாசற்கு மெட்டா
திருக்காதி யந்த நடுவும்
எம்மையிலை கொள்ளுமறை யோகிரா மாநுசனை
யேத்துநல் லோரிடத்துந்
தேசுபெற விளையாடி யானந்த நிர்த்தனஞ்
செய்யும் பரஞ்சோதியே
செகமீ தரக்கர்குல மடிவிப்ப தற்கென்று
சிலையேந்தி மகிழ்சிங்கமே
தாசரதி காகுத்த கோசலை பெறுங்கண்மணி
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (ரு)

37. மதிவதன முறுவலும் காவிநிகர் மேனியு
மட்டுநிறை குல்லை மலரும்
மலைபொருவு தோள்களுஞ் சிலைநுதற் சுட்டியும்
மார்பிலகு கனக வட்டும்
புதியநற வெனவொழுகு கனிவாயி னூறலும்
புங்கமுங் கண்ட சோதை
புளகித் தெடுத்துச்சி மோந்துகாப் பிட்டுமகிழ்
போதமே ஞான ரசமே
கதிபெறுவ தற்குதவு மிருமறையி னுற்றபொருள்
காட்டுமண வாள முனிவன்
கழலிணை பணிந்துபழ வினையற்று முத்திநெறி
கருதுபா கவத ரென்னுந்
ததியருள முறைகின்ற பதின்மர்தொழு மணிவண்ண
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் [1]தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (சா)

(பிரதி.) 1. தைக்கடவுள்.

38. மூலமறை யோதுபா வத்தநிலை தெரியவென
முனிபிருகு சென்று மருவி
முளரிமலர் பொருவுநின் மார்பத் துதைக்கவும்
முனியாது செங்க ரத்தாற்
காலிணைத் தடவியவன் மாலினை யகற்றியெக்
காலுநித் தியனென்பதைக்
கருதியடி தொழவவற் கருளுமா மணிவண்ண
கஞ்சனுயிர் கொண்ட களிறே
சீலக் குணத்துவசு தேவன் றனக்குரிய
தேவகிதன் மனதின்புறச்
சிறுவா றுவரையுமொரு நொடியிற் கொணர்ந்துதவு
சிங்கமே யமர ரேறே
தாலப் பெருந்துவச மாலிவென் றண்ணனே(?)
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (எ)

39. வம்பவிழ் மலர்க்குழ லசோதையில் வளர்ந்தாயர்
மகாருட னுத்தாரத்தி
வசுக்கொடு விளங்கனி யெறிந்துவிழ வதுகண்டு
[1]மகிழ்வுற் றிடும்பரமனே
அம்பரத் துறையமர ரிம்பரின் மனுத்தலைவ
ரனைவர்க்கு மிடர்செய்திடும்
அசுரப் பருத்திப் பொதிக்கொரு நெருப்பாக
வவனிவரு் பிரகலாதன்
கம்பலை யுறுதுமன தின்பங் குளிர்ந்தனது
கழலிணை வழுத்த வவனுற்
காட்டுந் தலந்தொறு முதிக்கவுள் ளங்கொண்டு
கனகனை வதைக்கு மந்நாள்

(பிரதி.) 1. வுற்றுமகிழும்.

தம்பத்து வந்துபே ரின்பங் கொடுத்தமுகில்
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (அ)

40. சீதச் செழுங்கமல வாவிக்கு ளொருமுதலை
செய்யவே தியனை யீர்க்கச்
சிலைவளைத் தம்முதலை தனைவென்று புகழ்பெற்ற
திறல்விசயன் முதலைவரும்
மாதர்க்கு ளெழின்மிக்க கோதற்ற கற்புடைய
மடமங்கை பாஞ்சாலியும்
மனதுகந் தடிபணிய வவர்மனங் களிகூர
மறைமுனிவர் தேவர் பிறரும்
நீதத் துடன்பரவு பாதஞ் சிவப்பெய்த
நெடுநகர்த் தூது செலுநாள்
நேசமுறு விதுரன்மனை நண்ணியமு துண்டுமகிழ்
நிமலா பரஞ்சோதியே
தாதவிழ் மலர்க்குழல சோதைபெறு சிங்கமே
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (கூ)

41. தினகர னுதித்ததெனை மணியழுத்துங் கனக
சிங்கா சனத்திருந்து
செங்கோல் செலுத்திமந் டாதிபதி தெசரதன்
செய்யுமுற் பயனினாலும்
மனநல முறும்பெரிய தவவிரத வேதியர்கள்
வானவர்கள் வேண்ட லாலும்
மாயவினை வஞ்சனைசெ யுங்கொடிய நிருதர்களை
மடிவிப்ப தற்குன்னியும்

நனிமிகு கருங்குழலி கோசலைதன் மகவென்று
நண்ணிவன மேவு மந்நாள்
நற்றவன் பன்னியன சூயைபிரு கையிஞு
ணகையணி யணிந்து வந்த
சனகியுடன் மருவியனு தினமுமகிழ் காகுத்த
சப்பாணி கொட்டி யருளே
தருமலர்க் காவுசூழ் திருவைகுந் தைச்சோர
சப்பாணி கொட்டி யருளே. (ம)

சப்பாணி முற்றும்.

## ரு. முத்தப்பருவம்

42. சித்தர்புகழ் கேசவா நாரணு மாதவா
சீர்மருவு கோவிந்தனே
திகிரியணி விண்டுவே மதுசூத ஞெடிய
திருவிக்ர மாவாமஞு
அத்திமரு விக்கண்வளர் சீதரா தொண்டருக்
கருள்புரியு மிருடி கேசா
அயனைப் பெறும்பதும ஞபதா மோதரா
அகிலகா ரண[னே]யெனக்
கொத்தவிழ் மலர்க்குழ லசோதைபணி மொழியிஞற்
கூவிமடி மீது வைத்துக்
கொஞ்சிமுலை யூட்டிநீ ராட்டிமகிழ் வதுகண்டு
குறுமுறுவல் கொள்ளு மணியே
பத்தருடன் விளையாடு நித்தமுகில் வண்ணநீ
பவளவாய் முத்த மருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (க)

43. துட்டவல் லசுரர்களை யட்டுப்புரி நேமியுஞ்
சுரிசங்க மும்பாய லுந்
துன்னுமிளை யோர்களென நண்ணி வருவோமென்று
சுரர்களுக் கபய நல்கி
யிட்டமொழி யெண்ணியே வட்டைநிகர் கொங்கைதிக
ழேந்திழை யெனுங்கவுசலை
யினிதுவகை கொள்ளவவள் திருவயி றுதித்துமகி
ழிறைவனே யெம்பிரானே
மட்டவிழ் நறும்போதை விட்டுச் செழுங்குல்லை
மருவிக் குழந்தை யாகி
மல்லிவள நாட்டினுயர் வில்லிபுத் தூர்வந்த
மாதினுக் கொருதந்தையாம்
பட்டர்கோ னடிகள்பணி சிட்டருள மேவுமுகில்
பவளவாய் முத்த மருளே
பன்னுமறையோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (உ)

44. நீர்த்தரங் கப்புணரி சூழ்புவியி லவர்க்கு
நிற்கவோ ரடியுங் கொடேன்
நீதூது வந்ததிற் பயனில்லை யென்றரவ
நெடியகே தனனி சைப்பப்
போர்த்தொழி னடத்திச் சயத்திரத னைக்கொலப்
புங்கமுறு கணைவாங்கவே
போகின்ற வழியிலுன் பாதமணி மலருமுன்
புண்டரிக னுல்விளக்குந்
தீர்த்தமுஞ் சிரசிலிட் டகமகிழ் கிரீசனைச்
செய்யவிசை யன்கணுற்றுச்
செப்புமவ் வரனுக்கு மீசனீ யென்றுணர்வு
தெளியவருளும்பரமனே

பார்த்தசா ரதியென்ற சீர்த்திபெறு கண்ணனின்
பவளவாய் முத்த மருளே
பன்னுமறையோர்தொழுந் தென்னவைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (௩)

45. சங்கையில் லாதகலை கற்றவே தியர்களுந்
தன்னைவந் தடிவணங்குந்
தவநெறி புரிந்துனது வரவுகண் டுள்ளமகிழ்
சவரிபூ சனையுகந்து
துங்கமுள மாருதி வணங்கவவ னுக்கருள்
சுரந்துவள[ர்] சோலை நண்ணிச்
சுக்ரீவ னுக்கபய மிக்குற வளித்தவன்
துயர்துடைத் திடவெண்ணியே
செங்கைவரி வில்வளைத் தொருபகழி கொண்டடற்
றிறல்வாலி தனைமடித்துத்
தினகரன் மகற்குமகு டங்கவித் தாட்கொண்ட
சிங்கமே யங்க ணரசே
பங்கய மலர்க்கண்வரு மங்கையுறை மார்பனின்
பவளவாய் முத்த மருளே
பன்னுமறையோர்தொழுந் தென்னவைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (௪)

46. குடவளை யடற்றிகிரி கொண்டகை யிரண்டினுங்
கோல்குழ லெடுத்தடவியிற்
கோவினிரை பின்சென்ற மாயவிளை யாட்டினது
கோலங்கள் காண வென்றே
மடல்விரி நறுங்கமல மலருறை யயன்கருதி
வசுவினை மறைக்க வதுபோல்
மறுபடி யமைத்தவைகண் மனைமருவ வுய்த்துமகிழ்
மதிவதன மதுசூதனே

கடகரி நெருக்கமென வுறமிரு ளகற்றவரு
கதிரவன் வயப்புரவியைக்
கட்டவிட வான்முகடு முட்டிவளர் சோலைசூழ்
கானகத் தொருமடுவினிற்
படவரவி னுச்சியிசை நடனமிடு பொற்சரண
பவளவாய் முத்த மருளே
பன்னுமறையோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (ரு)

47. வார்கெழுமு கொம்மைமுலை யேர்திக ழுமைக்கதிபன்
வாணியிறை யும்பர் தலைவன்
வாதநெடு வாருணி வசுக்களனல் திக்கதிபர்
வந்துலவு மிந்த்ர தவனன்
சூர்வகை தடிந்தகுக வேள்சுரர் முதற்கடவுள்
தூய்யமறை யோர்தவத்தோர்
துன்புற்று நைந்துருகி முறையிட்டு வந்துனது
துணையடி வழுத்தி யேத்த
நீரிலொரு கேழலென மேவியவ னுற்றெவரு
நிகரிலாப் பொற்கண்ணனை
நெஞ்சைப் பிளந்துயிரை மறலிக் களித்தவுட
னீண்டதிண் மருப்பி னிடையே
பார்மகளை வைத்துமகிழ் சீர்பெறு வராகனின்
பவளவாய் முத்த மருளே
பன்னுமறையோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (சா)

48. நச்சர வெனப்பொலி யிராவண னிலங்கைமா
நகரினிற் சிறையிருந்த
நங்கையனல் மூழ்கிவர நம்பிமுனி வைக்கண்ட
நானில நடுக்க முறவே

வச்சிர கரத்தலைவன் மூச்சிகை யயிற்கடவுள்
வானவர்கள் புண்டரீகன்
வந்துநீ முந்துமறை யோதுபர னிவளுலக
மாதா வெனத்தெரிகிலாக்
கொச்சை மதியுற்றநிரு தக்கிளை யெனுங்கடல்
குறைத்தெமது துன்ப நீக்குங்
கொண்டலே யிக்கத மினித்தவி ரெனக்கரங்
கூப்பிமகி ழுஞ்சிங்கமே
பச்சைமலை யென்னவொளி ரச்சுத மனுத்தலைவ
பவளவாய் முத்த மருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (எ)

49. விரதமறை யோரும்பர் மருவுசித் திரகூட
மேவியிளை யோனமைத்த
மேலான பரமபத மாலினிலை கடலென
விளம்புபன் னகசாலையின்
மருவளர் குழற்சனகி யருகே யிருப்பமன
மகிழ்வோடு விளையாடுநாள்
மணிமுடி கவித்துன்னை யரியணையில் வைத்தடி
வணங்கவென் றேகைகேசி
தருபுதல்வன் வருவதனை யமர்பொருவ தற்கென்று
தம்பிமுனி வுடனெழுந்து
தாரணி படைப்புணரி நீறெழ மடிக்கவிடை
தரவேணு மென்று கழறப்
பாதன்வரு கோலத்தை வரதபா ரென்றமுகில்
பவளவாய் முத்த மருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (அ)

50\. வஞ்சியிடை பஞ்சினடி மிஞ்சுமெழில் மங்கையுடன்
மருவுபாண் டவரு மேகி
வனமுறையு நாளிருடி யுணவி[னு]க் குதவிசெயு
மாமீது முதிர்ப ழத்தை
விஞ்சைநெறி கற்றவிறல் விசயனொரு கணையேவி
விழவுய்த்த தனையறிந்து
மிக்கமறை யோன்வெகுளு மென்றமொழி கேட்ட
வெருவியுன் னடிபணியவே [வுடன்
யஞ்சன்மி னெனப்புகன் றவரவர்க ளுற்றமன
வாசையினை யறையு மெனனும்
ஆதிமுத லீறவரை சொற்றபொழு தத்தருவி
லக்கனி பொருந்த வருளிப்
பஞ்சவர் சகாயனென மிஞ்சுபுகழ் பெற்றமுகில்
பவளவாய் முத்த மருளே
பன்னுமறையோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே. (௰)

முத்தமுற்றும்.

---

## ௬. வாரானைப் பருவம்

51\. திறையுங் கலைகள் மருவுஞ் சசியை
நிகர்த்த வதனன் வருகவே
நிருகன் சாபந் துடைத்து மகிழும்
நிமலன் வருக வருகவே
நறைவண் டுளப மாலை யணியு
நம்பன் வருக வருகவே
நாரி பாகன் வேத னவர்க்கு
நாதன் வருக வருகவே

யுறியில் வெண்ணெய் திருடி யுண்ட
வுதரன் வருக வருகவே
யுரல்பின் றொடரத் தவழுங் கனக
வோங்கல் வருக வருகவே
மறைகள் பரவு முபய சரண
வரதன் வருக வருகவே
வாசங் கமழுந் திருவை குந்தை
மாயன் வருக வருகவே. (க)

52. பாணி யமர்ந்த வேணி யுங்கா
பால மும்முழுச் சூலமும்
பணியுங் கடுக்கை மாலை யும்மழுப்
பாசுந் தரித்த கடவுளைப்
பேணித் தவசு புரியு மசுரன்
பீடு மகிழ்ந்து கொடுவரப்
பெருமை தெரிய வவன்பின் றொடரப்
பிழைக்கு மிடங்க ளுடியே
சேணிற் றிரிந்த சிவனுக் கபயஞ்
சிறப்புற் றளித்தவ் வசுரனைச்
சிதைத்து[த் து]யரந்துடைத்து நிவந்த
சீத ரப்பரஞ் சோதியே
வாணிக் கிறைவன் பூணும் பொற்பதன்
மாயன் வருக வருகவே
வாசங் கமழுந் திருவை குந்தை
மாயன் வருக வருகவே. (உ)

53. சீதத் திவலை துளிக்கு மகரஞ்
செறிந்த கடலி னடுவினிற்
றேவ ராலு மேவ வரிய
தென்னி லங்கை தன்னிலே

பூத மைந்து வேத நான்கு
புவன மூன்று விண்ணினிற்
போந்து கின்ற சுடரி ரண்டு
போத மொன்றிவ் வனைத்தையுந்
தாத விழ்ந்த பூவி யைந்து
தங்கு கின்ற வயனையுந்
தந்த வன்னை சனகி யான
தைய லைக்கண் டேனென
வாத மைந்தன் வந்து ரைக்க
மகிழு மாயன் வருகவே
வாசங் கமழுந் திருவை குந்தை
வரதன் வருக வருகவே. (௩)

வேறு.

54. முதியோ ரருந்தவர்கள் கதிசேர நங்கைசேய்
மொழியும்ப்ர பந்த மென்னும்
முன்னூலை யனுதினமு மோத்தியவ் வழிநின்ற
முமுட்சுக்க ளேயலாது
நதியார் செழுஞ்சடிலன் விதியோன் முதற்கடவு
ணண்ணுதற் கெட்டாததாய்
நவிலுதற் கரிதான பரமபத நாதநீ
நானிலம் புகழ்வை குந்தைப்
பதிமேவி யர்ச்சாவ தாரமென வந்ததைப்
பாரோ ரறிந்துய்ந்திடப்
பழமறையி லோதுதிரு மந்திரத் துட்பொருள்
பகர்ந்துவெளி யிட்ட சீமான்
எதிராச னடிபரவு மதியோர்க ளுளமருவும்
எங்கள்கண் ணன்வருகவே
இந்திரர்க் கருள்புரியு மெந்தைவா னிளவரச
னிருடிகே சன்வருகவே. (௪)

55. வன்புல நடத்துகரு மேந்திரிய மைந்துடன்
மருவுஞா னேந்த்ரிய மைந்து
மடங்காத விடையங்க ளைந்தினைச் சேர்ந்து
வளர்கின்ற கரண நான்கு
சொன்னவோ ரிருபத்து நான்கைப் பொருந்தித்
துலங்குஞ் சடத்தி னுள்ளே
சோதிமய மாகவுள தியாததுவு நீயென்று
சுருதிசொலு மெட்டெ ழுத்தின்
சின்மயப் பொருளோதி யுலகைத் திருத்திமகிழ்
தேசிகன் பெரிய நம்பி
சேவடி துதித்துத் தொழும்பரம பாகவதர்
சிந்தைமலர் மேவி யென்றும்
இன்பமொடு விளையாடு மிறைவமா தவகண்ண
எம்பெரும நீவருகவே
யிந்திரர்க் கருள்புரியு மெந்தைவா னிளவரச
னிருடிகே சன்வருகவே. (௫)

56. கருமுகின் முழக்கமென வருமிரத வோசையுங்
கடலெனத் திகழ்தானையுங்
ககனகோ ளங்கள்முதல் வெடிபட வுரற்றுநெடு
கைம்மதம் பொழிவேழமும்
பருதிவா னவன்வயப் புரவியை நிகர்த்தளவில்
பலகுதிரை யின்றிரள்களும்
பருவரையை யொத்தபுய வீரரு நெருங்கியெதிர்
பாரதப் போர்தன்னிலே
யருதியுட னுன்னடி பணிந்துமகிழ் பாண்டவர்க்
காருயிர் தரிக்க வுன்னி
யம்பவள வாயில்வெண் சங்குவைத் தூதியவ்
வமரைச் செயித்த மாலே

யிருநா லெழுத்திலுறை திருமா லசோதைதரு
மிருகண்ணின் மணிவருகவே
யிந்திரர்க் கருள்புரியு மெந்தைவா னிளவரச
னிருடிகே சன்வருகவே. (சு)

57. கொங்குகமழ் கோதைமலர் தங்குநற வுண்டுகளி
கொண்டுலவு வண்டு முரலுங்
கோகில நவிற்றுமிசை பாகினை யினைந்த[சொற்]
கோகனக மான்பொருட்டுக்
கங்குல்பக லற்றொளி பரப்புகக னத்திலுறு
கற்பகக் காவை மருவிக்
கந்தமலி கின்றதரு வொன்றினை யெடுக்கவது
கண்டகா வலர்கள் சூழ்ந்து
சங்கையற வந்தமர்பு ரிந்தவர்கள் சாய்ந்திடச்
சங்கினோ தையைமு ழக்கித்
தளமுகை நிறைந்துவரு பாரிசா தத்தினைத்
தரைமீது கொணரு முகிலை
யெங்கள்குடி முழுவதும் புங்கமுடன் விலைகொள்ளு
மீசநா ரணன்வருகவே
யிந்திரர்க் கருள்புரியு மெந்தைவா னிளவரச
னிருடிகே சன்வருகவே. (எ)

58. ஓராழி பூணிரத மேலேறி யுலகிருளை
யோட்டுமோத் தாண்ட கிரணத்
தொளிபரவு புவிமுழுது மரசினை நடாத்தியுய
ருத்தான பாத னென்னுந்
தாரார் புயத்தண்ணல் சீர்திகழ் மனைக்கிறைவி
சாற்றிய கடுஞ்சொல்லினாற்
றமரை நிகர்த்தவிழி நீர்பொழிய நெஞ்சிற்
சலங்கொண்டு கான மருவி

நாராய ணன்பரம னீரா்று நாமமே
நன்மைதரு மென்று துருவன்
நவிலுந் தவங்கருதி யகமகிழ்ந் தன்புபுரி
நம்பனே புருடோத்தமா
ஈரேழு புவியினையு மோர்பொழுதி னுண்டுமி
ழிருக்குமுதல் வன்வருகவே
யிந்திரர்க் கருள்புரியு மெந்தைவா னிளவரச
னிருடிகே சன்வருகவே. (அ)

59\. சீர்மருவு வெண்கயிலை மேவிவல முஞ்செய்து
தினமும் பணிந்து வருவோன்
செருச்செய வெதிர்த்தவர் வலத்திலொரு பாகமது
சேரவர முற்ற திறலோன்
நீர்கெழு பெரும்பரவை யேழுமவை சூழ்புவிக
ளேழுநெடு மலைக ளேழும்
நிலைமுகி லேழுமிவை போனுட லைமந்துரு
நிவந்தபுய வீர முடையான்
பாரில்வளர் பூதங்க ளைந்திணையு மிகல்செயும்
பண்புபெற் றுயர்வாலியாம்
பருவரை தனைக்கொல்ல விவனே தெனக்கருது
பருதிமகன் மைய லறவே
யேருலவு பகழிகொண் டோரெழு மரத்திணையு
மெய்தரா கவன்வருகவே
யிந்திரர்க் கருள்புரியு மெந்தைவா னிளவரச
னிருடிகே சன்வருகவே. (கூ)

60\. குயினறவு கற்கண்டு பாகுகனி யாழெனக்
கூறிய மிடற்றி னிசையுங்
குவளைகரு வண்டுகய லயில்பகழி யாமெனக்
கூர்விழியு நீர்மருவிய

புயலெனத் திரளளக பந்தியுங் கனகப்
பொருப்பைநிக ரிருகொங்கையும்
புண்டரிக வதனமும் புன்முறுவ லுங்கொண்ட
பொற்பிலை கசோதை குளிர
அயனரன் முதற்கடவு ளண்டகோ டிகள்பல
வனைத்துமுத ரத்தி னுள்ளே
யடங்குவதை யம்மாதி னுக்குமுன் காட்டியவ
ளகமகிழ வைத்த மணியே
யியல்கொண்ட வயிணவர்கள் பயிலுபய வேதமுத
லெம்பெரும நீவருகவே
யிந்திரர்க் கருள்புரியு மெந்தைவா ணிளவரச
ணிருடிகே சன்வருகவே. (ய)

வாரானை முற்றும்.

---

## எ. அம்புலிப் பருவம்.

61\. தெண்டிரையி லுற்பவித் தும்பொன்மக மேருவைத்
தினமுநீ வலமாகவே
திகைத்துத் திரிந்ததிலு நீங்காத முயன்மறுத்
தீரவொ ருபாய மதுகேள்
கெண்டைவிழி மாதர்குழல் கண்டுதம ரென்றுளக்
கெருவமுற் றனவரதமுங்
கேகய நடம்புரிதல் பார்த்துவந் தாசையாற்
கெம்பீர மோடெழுந்து
கொண்டல்கள் முழங்கிநெடு மாமலையி தாமெனக்
குலவுமெழின் மாட மேவிக்
கோமளம தாகநற் சங்குநிதி தாளங்கள்
குவியவள மதுசுரக்கும்

அண்டர்மனை சென்றுத்தி யுண்டமணி வண்ணனுட
னம்புலீ யாட வாவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (க)

62. உம்பர்தோ யிரவியின் புரவிதன் னயர்வினுக்
குரியநிழ லுதவி யாற்றும்
உயர்மரச் சோலைசூ ழிந்தக[ர்]ப் பொன்னனு
ருன்றனைப் பார்த்து நாளுஞ்
செம்பவள வாயினொளி காலிட நகைத்துச்
சிரிப்பதற் கஞ்சி யேகிச்
செய்யதழல் வேள்வியி லுதித்தும் பயோததி
செழிக்கக் கடைந்த வந்நாள்
தம்பமென வேநின்ற மிமையவர் குழாத்தினொடு
தண்ணமுத முண்டு மகலாச்
சாரபர பக்கமுறு தேய்தநீர்த் தருள்செயுந்
தகைபெறச் சமைய மிதுகேள்
அம்புலி புகழ்ந்துதொழு நம்பரந் தாமனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (உ)

63. எஞ்சலில் லாதபட வரவினது நிழலினு
லிதையமது வாட்ட முற்றே
யெண்ணிப் புலர்ந்துமன துட்குத றவிர்த்துநீ
யின்பமோ டுச்சிதமதாய்
மிஞ்சுபுகழ் கொண்டுனது தண்ணளி பரப்பியே
மேக்குற் றுயர்ச்சி யாகி
மிக்கான வேதியர்கள் தேவர்கள் துதித்திடும்
மேன்மைபெற வேண்டி லிதுகேள்

குஞ்சர மிளைத்தாதி மூலமென் றோலமிடு
குரலுக் கிரங்கி யங்காட்
குவலயத் தெவருநின் றதிசயித் தேத்திடக்
குருமணிப் புள்ளி லேறி
யஞ்சலென வந்துதவு செஞ்சக் கரத்தனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (ந)

64. காதுதோய்க் தேகுமிழ் மறித்திட வுலாவிமிளிர்
கண்ணிணை த னினமெ னத்தேன்
கண்டனுகி யிடைபொரு தெனவுருகு மெழின்மேவு
கன்னியர்க டொழுமுன்றனைக்
கோதைகமழ் மாதர்தங் கொழுநர்பிரி காலையிற்
கொடியதழ லெனவேசுடுங்
குறைநீங்கி யனுதினந் தண்மதி யெனப்பொருவு
குணமருவு சமய மிதுகேள்
சீதமலர் பொழிநறவு கனிகள்பிதிர் சாறொடுஞ்
சேர்ந்துமத கூடு பாயுந்
திருவழுதி நாடனென் குலமதனை விலைகொண்ட
செங்கமலை வாழு மார்பன்
ஆதிமறை தேடரிய சோதிரகு நாதனுட
னம்புலீ யாட வாவே
யல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (சு)

65. மன்னுமெழி லம்பிகையை வாமமதில் வைத்துலவு
வரதனது சென்னி மேவி
வாழ்ந்ததினு நீங்காத வன்பகை தவிர்த்தருளி
வானவர்கள் கண்டு வாழ்த்தத்

தென்னிலங் காபுரியி லுன்னொளி செலுத்திடச்
செய்ததை வியந்துன்னிநீ
செங்கமல வாவியரு கூர்வளைக ளீனுகிறை
செவ்விமிகு தரளந்தனைக்
கன்னல்செறி காவில்வாழ் குருகுதன் சினையெனக்
கருதிமே யடைகிடக்குங்
கவின்மிகுந் தோங்குபுகழ் திருவழுதி நாடனுயர்
கமலா சனன்பரவிடும்
அன்னவுரு வாகிமறை சொன்னநங் கண்ணனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (ரு)

66. பரவைசூ ழுலகினை விளக்குசெங் கதிரவன்
பண்புபெறு மொளியி னழலைப்
பனிநிலவு வீசிஒவப் பாற்றியுஞ் சமர்புகப்
பாசறையில் வாகை சூடி
வருமிளைஞர் புயமதிற் றனமுயங் கப்புணரு
மாதருக் கமுதாகவே
வளமைபற் றும்பயிர்க் குறுதுயர மின்றியே
வளரும் படிக்குதவியு
மிரவிருளை யோட்டியுந் தகைபெற்ற வுன்னையே
யெம்பிரான் கூவ வாரா
திருப்பது பெரும்புக்ழ்க் கொக்குமோ வாதலா
லெழிலா ரசோதை மகவாம்
அரவினணை மருவியுறை பரமபத நாதனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (சா)

67. பார்புகழு மாதவர்கள் தேடரிய பொற்பதப்
பரமனென் றுணருந்ததி
பாண்டனுக் குயர்கதி கொடுத்துமிரு கண்டுமுனி
பாலற்கு நெறியுதவியும்
மாரன்மனை யாளைநகு மெழில்பொருவு பாஞ்சாலி
மருமருவு குழன்மு டிக்க
மாற்றலரை வென்றுமகி ழெம்பிரான் கூவநீ
வந்திடி னுனக்கென் றுமே
சீர்திகழு மீரமுறை சோடச நிறைந்தகலை
சேரவருள் செயுமாதலாற்
செம்பவள முல்லைமலர் வாய்முறுவ லென்னுமத்
தேவகிபெ றம்புதலவனும்
ஆரமொடு மாமகளை மார்பிலணி கண்ணனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (எ)

68. பூரணக் குடமெனப் பொலியும் பயோதரப்
பொற்பிலக சோதை மகவாம்
புங்கவ னுனக்குவரு நந்துத றவிர்த்துப்
பொருந்துகலை யீவ தற்குக்
காரணவு சோலைசெறி நீர்பெருகு வாவிநிறை
கஞ்சமல ரென்ன வொளிருங்
கரதலங் கொண்டுமதி வர்வென் றழைத்திடக்
கருதிவா ராத தென்னே
வாரணத் துரிவையினை மேனியிற் போர்த்தசிவன்
வாணியிறை யும்பர் தலைவன்
வந்தடி தொழக்கருணை யுந்தும் பிரான்கமலை
வாழுமணி மார்ப னெங்கோன்

ஆரணத் துறையுமிங் நாரணக் கடவுளுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (அ)

69. பழமறை தொழும்பரம புருடனென் றறியாது
பண்டுசிசு பால னென்பான்
பகர்கின்ற வசையினுக் ககமுன்னி யவனுடல்
பதைத்துவிழ வேவிடுத்துந்
தழலெரி யெனும்பங்கி யிருள்செறியு மேனிகிமிர்
தானவர்கள் கிளைமுழுவதுந்
தரைப்பட மடித்ததுவு மோர்திகிரி செங்கரந்
தனிலிருப் பதையறிந்தும்
மழவிடை யெனத்திகழு மாயனை வாவென்று
வாயிதழ் மலர்ந்து கூவ
வாரா திருக்கிலக் கூராழி விடுவனென
மனதெண்ணி யிந்நேரமே
அழகுபெறு செங்கமல யுளமருவு கள்வனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (கூ)

70. செந்நெலங் கழனிவள நாடனெங் கோன்மலர்த்
திசைமுகன் வணங்கு தேவன்
தேவகி பெறும்புதல்வன் வாவென் றழைத்திடச்
சீருடன் விரைந்து வந்தால்
முன்னைநீ செய்தவினை யால்வருந் துயரெலா
முற்றவு மகற்றி நாளும்
முழுமதி யெனப்பொருவ வரமீவ னீதன்றி
மூவுலகி னுஞ்செலுத்தத்

துன்னுகிர ணங்கள்செறி செங்கதிர்கள் [எங்குநனி]
தோன்றிய தெனத்திகழ்வுறுந்
தூய்தான நித்தியவி பூதியினு முன்னொளி
துலங்கவருள் செயுமாதலால்
அன்னைதிரு மாதினுள மன்னுநங் கண்ணனுட
னம்புலீ யாட வாவே
அல்லிமகிழ் வைகுந்தை வல்லிமண வாளனுட
னம்புலீ யாட வாவே. (ய)

அம்புலி முற்றும்.

## அ. சிற்றிற் பருவம்.

71\. வானோர் குழுவு மவர்க்கிறையு
மதிசே கரனுந் திசைமுகனும்
மலரா லருச்சித் தடிவணங்கி
மாலே கள்வ வெனத்துதித்து
மேனா ளனைவந் திரந்ததற்காய்
விறல்சேர் மாலி சுமாலிதனை
மேவி யமர்செய் திடக்கருதி
விளங்குங் கருடப் புள்ளேறித்
தானே யெதிர்த்த வரக்கர்தமைச்
சயித்த வுவப்போ வுருக்குமிணி
தனத்தின் முயங்குங் கெருவிதமோ
தகைந்து விளையாட் டழிக்கின்றாய்
கானார் கமல மான்வருடுங்
கழலாற் சிற்றில் சிதையேலே
கந்தங் கமழும் வைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையேலே. (க)

72. வடம்பூண் முலையு நுட்கிடையு
மதிபோல் முகமுஞ் செங்காந்தள்
மலரைப் பொருவுங் கரதலத்தில்
வதிந்த வளையுங் கயல்விழியும்
படமா மெனச்சொல் கடிதடமும்
பாகு போன்ற பனிமொழியும்
பருவ முகிலேனர் குழலுமெனப்
பகரு மெழிலும் பயிர்ப்புநிறை
மடவார் நதியின் கரையருகே
மணலைக் குவித்து மனமுவந்து
வனைந்த விளையாட் டிதைமருவி
மாலே யழித்தல் வழக்கன்று
கடல்சூழ் புவியோர் தினம்பணியுங்
காலாற் சிற்றில் சிதையேலே
கந்தங் கமழும் வைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையேலே. (உ)

73. முருக்கின் மலர்போ லிதழ்க்கனிவாய்
முல்லை முறுவ லாய்ச்சியிரு
முலையி னமுதந் தனையூட்டி
முகத்தோ டணைத்து முத்தமிட்டுப்
புரியு மரைநாண் காப்பணிந்து
பொலன்று திறைத்துத் தாலாட்டும்
பொன்னு சலிற்கண் வளராமற்
புனிற்று நிரைப்பின் போகாமல்
அரியின் குரல்நேர் மொழிமடவா
ரறியாப் பேதை மதியாலே
யமைக்கு மழகார் மாளிகையை
யழிக்கக் கணக்கோ வனுதினமுங்

கருதுந் தவத்தோர் சிரம்பணியுங்
கழலாற் சிற்றில் சிதையேலே
கந்தங் கமழும் வைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையேலே. (௩)

74. வண்டோ கயலோ மரைப்போதோ
வாளோ கணையோ யயில்வேலோ
மானே விடமோ நறுங்குவளை
மலரோ வெனச்சொல் விருவிழியும்
பண்டோ யிசையும் பொருந்துமெழிற்
பாவை மடவார் பலர்கூடிப்
பணிக்கு மணலின் விளையாட்டைப்
பரமா வழித்த லுன்னழகுக்
குண்டோ பெருமை யங்காளி
லுளத்தே குறித்து மதியாமல்
ஒருபோ தினிலுங் கருதாம
லுலவித் திரிந்த பாமரனுங்
கண்டா கனற்குங் கதியளித்த
கண்ணே சிற்றில் சிதையேலே
கந்தங் கமழும் வைகுந்தைக்
கனியே சிற்றில் சிதையேலே. (௪)

75. அல்லைப் பழித்த நிறத்தரக்க
ரடங்க மடியக் கணையேவி
அமரர் துயரந் தனைத்துடைத்த
வடங்காக் களிப்போ மழராமன்
வில்லை வளைத்த பெருந்திறலோ
விரும்பு மறையோ னுளமுவப்ப
வேண்டும் பசுவி னிரையளித்த
மேன்மைப் புகழோ பழவடியார்

தொல்லை வினைக்கட் டறக்குமனத்
துணிவோ திரையார் பொருநைநதித்
துறையின் மடவார் விளையாட்டைத்
துகைப்பே னெனுஞ்சொற் குறிப்பறியேன்
கல்லை யுருவாக் குங்கமலக்
காலாற் சிற்றில் சிதையேலே
கந்தங் கமழும் வைகுந்தைக்
கள்வா சிற்றில் சிதையேலே. (ரு)

76. மானேர் விழிக்கஞ் சனமெழுதி
வதியும் பிறையை நிகர்நுதற்கு
மறப்போற் சாந்துத் திலதமிட்டு
வயங்குங் கனகச் செப்பெனலாய்த்
தானே வளரு மிளமுலைக்குச்
சந்தங் கமழுஞ் சேறணிந்து
தபனன் வருதேர் புரையல்குற்
றடத்தை மறைத்துக் கலையணிந்து
நான்ஞ் செறிந்த குழன்மடவார்
நளினம் பொருந்து நதிக்கரையில்
நனிமா டங்க ளமைத்ததனை
நண்ணி யுதைத்த லுனக்கழகோ
தேனார் துளவத் தார்மார்ப
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செகத்தோர் பரவும் வைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையேலே. (சா)

77. நுகருஞ் சுதையுந் தேனுவையு
நுவலுஞ் சசியுங் கற்பகமும்
நோன்பு பரியிந் திரர்க்குதவி
நோதல் தவிர்த்த பெருமானே

மகர நெடுங்கண் விதுவதன
மடவார் பொருநைத் தடமருவி
மணலைக் குவித்து மணிமுறத்தில்
வாரிப் பரலை யறக்கொழித்து
நிகரில் கனக மரகதமு
நிவந்த மலரு மதிலணிந்து
நிதிபோல் மகவைப் பெற்றெடுத்து
நின்பேர் புனைவே னெனக்கருதிச்
சிகரி யமைத்துக் கரங்கூப்புஞ்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செகத்தோர் பரவும் வைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையேலே. (எ)

78 நிவந்து பணைத்த முலைமடவார்
நேசத் துடனுண் மணற்கொணர்ந்து
நெடிய மாட மெனவனைந்து
நின்னைப் பணிமா ளிகைகண்டாய்
பவள விதழுங் குறுநகையும்
பங்கே ருகம்போ லிருவிழியும்
படைத்த கமலை யடிவருடும்
பணித்தா ளிதனி லுறுத்தாமல்
உவரித் திரைசூழ் புவியனைத்து
மும்பர் கணமு மவர்க்கிறையும்
உயர்மா தவரு மைங்கரனு
முடிவின் பதியுங் குகவேளுஞ்
சிவனு மயனுந் தொழுங்கழலாற்
[சிறியேஞ்] சிற்றில் சிதையேலே
செகத்தோர் பரவும் வைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையேலே. (அ)

79. அனம்போன் மடவார் நதிக்கரையி
னருகே மணற்கொண் டாடரங்கும்
அழகார் மதில்சூழ் வேதிகையு
மமைத்து மலரா லருச்சனைசெய்
துணையே தொழுதாட் செய்வோமற்
றென்றுங் கருதோ மெனவுளத்தில்
உன்னிப் பணிமா ளிகையிதனை
யுதைத்தல் பெருமைக் கழகன்றே
வனையும் பாசந் தனைத்துறந்த
மதியோர் கதிசேர் வதற்குரிய
மறையின் பொருளைத் தமிழ்விரித்த
மாறன் றிருவாய் மொழியுரைத்துத்
தினமுங் கருதுஞ் சேவடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செகத்தோர் பரவும் வைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையேலே. (௯)

80 கரைக்கு ளடங்காப் பெருவெள்ளக்
கடலி னடுவோர் கருமலையிற்
கமலம் பூத்த தெனத்திகழுங்
கவின்கண் டரனு ரிறைஞ்சுதற்குப்
பொரு[த்]தும் போத விழியளித்த
புனிதா மனுவின் குலதிலகா
பொன்மா மேருக் கிணையாகிப்
புடைத்துப் பணைக்கு மிருதனமும்
மரு[த்தாழ்] குழலுஞ் செவ்விதழு
மன்னு மடவார் நதிக்கரையில்
வளமா ளிகைசெய் தலங்கரித்துன்
வனப்பே கருதி யருச்சித்துச்

சிரத்தா லிறைஞ்சித் தினம்பணியுஞ்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செகத்தோர் பரவும் வைகுந்தைத்
தேவே சிற்றில் சிதையேலே. (ல)

அ. சிற்றில் முற்றும்.

---

## கூ. சிறுபறைப்பருவம்.

81 இந்துநுத னந்துமிட றந்துமுலை செந்துவ
ரிதழ்க்கவுரி யென்னு மயிலி
னின்பமுறு சங்கரனு மீரெழு பெரும்புவியை
யீன்றமலர் தந்த வயனுந்
தந்திமுக னுங்குகனு மிந்திரன் முதற்றலைவர்
தாபதர்க ளமர ருடனுஞ்
சந்நிதி நெருங்கியவர் தம்மிரு கரங்கொண்டு
தலைமிசை குவித்து மகிழ
மந்தரக் கிரியுநெடு விந்தமலை யுந்திகழு
மருவுபுய வீர முடையான்
வஞ்சனைக் கஞ்சனொடு நஞ்சினு மிருங்கொடிய
மடநெஞ்சன் மனைவாயிலிற்
சிந்தூரக் களிறட்ட நந்தனருள் பாலனே
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே. (க)

82 நத்தைநிகர் கண்டமுந் தத்தைமொழி யுஞ்செய்ய
நளினமென மருவு கரமு
நறைமலர்க் கோதையுந் திகழெழி லசோதையெனு
நங்கைமடி மீது வைத்துக்

கொத்தலரு மல்லியிரு வாட்சிசிறு சண்பகங்
குல்லைமரு முல்லை யுடனே
கொங்குவிரி பிச்சிகழு நீர்முகை குருக்கத்தி
கொண்டணிய மகிழ்கண்ணனே
நித்தனீ மற்றெவையு நினதே யெனக்கருதி
நெஞ்சிலறி வுற்றெனதெனு
நெடிதான மமதையாங் காரத்தை விட்டுமன
நேசமொடு பணிசெய்யவே
சித்தனக் குரியதெனு முத்தருள நிறைகள்வ
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே. (௨)

83. மரையோர் மருண்டவிழி நறவைப் பொருந்துமொழி
மருவார் செறிந்த குழலாம்
மலையைச் செறுக்குமுலை சிலையைக் கடிந்தநுதன்
மதியைப் பழிக்கு முகமாம்
இரதிக்கு வருகணவ னுருவொத் தியைந்தவிடை
யிரதத்தை யேயல்குலாம்
எழின்மே வசோதைதிரு மனைமேவி விளையாடி
யின்புற்றி ருக்கு மந்நாட்
புரையுற்ற மடநெஞ்ச வஞ்சனைக் கஞ்சன்விடு
போர்மல்லர் தமைமடித்துப்
புங்கமுட னகமகிழு மிங்கித குணலனே
புனிதமறை யோர்க்கு முதலே
திரைமோது முத்தமிரு கரைசேர்ந தித்துறைவ
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே (௩)

84. மலைபோல் வயங்குநெடு புயவீர மண்டுதிறல்
வானரப் படைதிரட்டி
மணியார் திரைக்கடலி னருகே யிருப்பதனை
மருவுவீ டணனறிந்து
கலையோது மறையவ ரருந்தவர்கள் விப்பிரர்கள்
ககனமுறை வோர்புவியுளோர்
கருதியடி தொழுகின்ற மாதுசா னகியின்மேற்
காதலைத் தவிர்தி யென்றே
யலை[வோட] நற்புத்தி சொல்லினுங் கேளா
தகந்திகழு நிருதர் கோவை
யறவிட்டு வந்துனைப் பணியுமவ் வீடணற்
கபயங் கொடுத்த களிறே
சிலைபொருவு நுதலிகவு சலைமகிழு மேகமே
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே. (சு)

85. இக்குவலை யத்திருளை யப்புற மகற்றவோ
ரிரதமிசை வருமிரவியை
யின்சுவை யுறுங்கனிய தாமென மனங்கருதி
யிருவிசும் பூடு பாய்ந்துந்
தக்கமுனி யோகியர்கள் பூசுரர்கள் விப்பிரர்கள்
சாற்றுமறை யின்பொருள்முதல்
தருநவவி யாகரண சகலகலை யினையுமத்
தபனன்மு னடந்து கற்றும்
மிக்க[தொரு] புகழ்பெற்ற மாருதி தனக்குவர
மேன்மையுட னீந்த முகிலே
விண்ணவரு மம்புயனு மாதவனு மைங்கரனு
மேருவில் வளைத்த சிவனுந்

திக்கதிப ரும்புவியின் மக்களு மிறைஞ்சுமுதல்
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே. (ரு)

86. பாதிமதி வேணியான் வாழ்கிரியை வேரொடு
பறித்தநிரு தாதி பதியின்
பத்துமுடி வைத்தகலை யற்றுவிழ வுற்றமரர்
பத்தியொ டிறைஞ்சு பரமா
மேதிபடி வாவியிடை மோதுகயல் கன்றென
விருப்பொடு சுரந்தொ ழுகுபால்
வேகமுட னோடுநதி யாமென விரைந்துவயல்
மேவிவளர் சூழ்கழனியுஞ்
சூதமர மீதுதளிர் கோதுகுயில் கூவியது
துப்பினித ழிந்து வதனத்
தோகைய ரெனக்கருதி யாடவர் வியந்துமருள்
சோலைபு நிறைந்த மிதிலைச்
சீதபுது வைக்கண்வரு கோதையிரு வர்க்கிறைவ
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே. (சா)

87. சண்டவே கப்பவனன் மண்டிமா மேருமுடி
சாய்த்தபே ரோசை யெனவுந்
தராபதியர் பாசறையில் வாகைபுனை வெற்றியைச்
சாற்றுமணி முரச மெனவும்
மண்டல நிறைந்தபுகழ் கொண்டமுதல் வள்ளியோர்
வாயில்கடை முன்றி லெங்கும்
மனமோடு வந்துநிதி தருகுவோ மென்றுரை
வழங்குபே ரிகையென்னவுங்

கொண்டல்க ளொலிப்பதென் றெண்டிசைக டோறுமயில்
கொண்டாடி நடன மிடவுங்
குணபா லுறுங்கிழவன் விரைவோடு பவனிவரு
குஞ்சரக் குமுற லெனவுந்
தெண்டிரை யினார்ப்பெனக் கண்டவர் வியக்கவுஞ்
சிறுபறை முழக்கி யருளே
செந்நெல்சூழ் வைகுந்தை மன்னுநங் குலநாத
சிறுபறை முழக்கி யருளே. (எ)

வேறு

88. அடலுறு புயவலி கொண்டிடு மாவலி
யன்பொ டளித்தபுனல்
அங்கை விழாமுன் னடைத்திட வுன்னியொ
ரளியென வருபுகரின்
கடைசிறு வரிபொரு நெடுவிழி திகழுறு
கருமணி யைச்சிதறிக்
கணமென வுரைநவில் பொழுதினி லிருபுவி
கால்கொ டளந்தவனே
படைபொரு சிலைநுதல் துடியிடை யெனவரு
பாவைய சோதைதரும்
பால னெனுந்திரு நாம மணிந்தகோ
பால னெனும்பொருளே
குடவளை யாழி தரித்த கரங்கொடு
கொட்டுக சிறுபறையே
கோகன கத்துறை மாமகிழ் கள்வா
கொட்டுக சிறுபறையே (அ)

89. இங்கித நயமுறு லீலை விரும்பிய
யிடைதுவள் மங்கையரும்
இரதி முயங்கிய கணவ னெனத்திக
ழெழிலுறு மைந்தர்களுந்

கங்குலி லன்பொடு செய்கல வித்தொழில்
கருதி யுவப்புடனே
கார்தவ ழாமிய மீதி னிருந்து
கரங்கொ டியாழ்நெருடிச்
செங்கனி வாயிதழ் கொண்டு நவின்றிடு
சில்லிசை கேட்டசுணந்
தினமு நெருங்கிய நவமணி மேடை
சிறந்த நகர்க்கதிப
கொங்கவிழ் கோதைய சோதைத னமுதே
கொட்டுக சிறுபறையே
கோகன கத்துறை மாமகிழ் கள்வா
கொட்டுக சிறுபறையே. (கூ)

90. செகதல மருவிய வுயிர்களை வேரொடு
தின்றிடு மாவுரவோர்
சிகையெரி பங்கினர் புகைசொரி கண்ணினர்
செல்லென வார்ப்புடையோர்
அகமொடு வஞ்சனை கொலைபுரி வன்றொழி
லடல்செரு நடலைவிறல்
ஆண்மை பொருந்திய நீல நிறத்தி
னரக்கரை வென்றிடவே
ககனமு றமரர்கள் மனநினை வின்படி
கானக மேவிடுநாள்
கங்கை நதிக்கரை யின்க ணெதிர்ந்திரு
கழலிணை யடிபரவுங்
குகனுட னன்புசெ யிகலரி யேறே
கொட்டுக சிறுபறையே
கோகன கத்துறை மாமகிழ் கள்வா
கொட்டுக சிறுபறையே. (ய)

சிறுபறை முற்றும்

## ௰. சிறுதேர்ப் பருவம்.

91. பாவாரு மின்சொன்மொழி யெழின்மா தசோதைதரு
பாலனென் றவத ரித்துப்
பாண்டவர்கள் தூதனெனு நீண்டபுகழ் கொண்டிலவு
பரவாசு தேவ கண்ண
தாவாத புயவலி பெறுந்திரி புரத்தவுணர்
சண்டவே கத்தி னோடுஞ்
சகலபுவ னமுமுற்று நலிவுசெய் திடுங்கொடியர்
தங்களை மடிப்ப தற்காய்
ஆவாகி வில்லின்விடு மேவாகி யுள்ளத்
தமர்ந்துறையு மீச னாகி
யவ்வமர் முடிக்கப் புராந்தக னெனும்பேரை
யரனுக்க ளித்தருளிய
தேவாதி தேவனெனு மூவா முதற்றலைவ
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்தை நாதகோ பாலநீ
சிறுதே ருருட்டி யருளே. (க)

92. சுந்தர மடந்தைபுவி மானிவர்க ளிருவருந்
துணையடிப் போது வருடத்
துய்யபாற் கடனடுவி லறிதுயி லமர்ந்தது
துறந்துமட மாத சோதை
தந்தசே யெனவந்து கலைபயிலு நாளின்மறை
தனையுரை செய்வித்த சூரவன்
றக்கணைக் காகவவன் மகவினைக் கடல்சென்று
தகைபெற்ற முன்னுருவுடன்
அந்தணற் கீந்துமன வன்றுயர் துடைத்தருளு
மண்ணலே நீல முகிலே
அனுதினமு நின்னடி பணிந்துனது நாமத்தை
யன்புடன் வழுத்தி யேத்தச்

செந்தமி ழெனக்குதவு பைந்துளவ மார்பனே
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்தை நாதகோ பாலனே
சிறுதே ருருட்டி யருளே. (உ)

93. உருத்திரர்க ளாதவர் வசுக்களசு வினியென்னு
மோர்முப் பத்து மூவர்
உவந்துதொழு மம்பொற் றுவாரகையி லின்பமொ
டுருக்குமிணி மாதி னுடனே
மருக்கமழு மலரணை யிருந்துவிளை யாடுநாள்
மனதன் புடன்குசேலன்
வந்துதவு மவலினை யொருக்கா லருந்தியே
வடதிசைக் கதிப னிகராய்ப்
பெருநிதி பெறக்கருணை யருளியவன் வறுமையைப்
பெயர்வித்த கற்ப தருவே
பீதக மணித்திரள்கள் போதுநிரை கரைமருவு
பெட்புமிகு பொருனை நதிசூழ்
திருவழுதி வளநாட கருடன்மிசை வருகண்ண
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்தை நாதகோ பாலனே
சிறுதே ருருட்டி யருளே. (ங)

94. குந்திபெறு மைந்தர்களி லிந்திரன் மகன்சமர்
குறித்திரத மீது நிற்பக்
குணபா லெழுந்துவரு கதிரோ னுவந்துதரு
கொடைமிக்க திறலமன னன்முன்
முந்தைமறை யோனுரு வெடுத்தவ னிடஞ்சென்று
மூவுலகு மிசைநிற்கவே
முற்செய்த நற்பய னனைத்தையுங் கைக்கொண்ட
மூவா முதற்கடவுளே

யிந்துலவு செஞ்சடையு மைந்துமுக முந்திகழு
மீசன்மல ராசனன் முதல்
எவ்வுயிரி னுள்ளுமுறை யாதிபர னீயே
யெனக்கருதி யறிவை யுணர்வோர்
சிந்தைகுடி கொண்டுமகி ழெந்தைகோ விந்தநீ
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்தை நாதகோ பாலநீ
சிறுதே ருருட்டி யருளே. (௪)

95. கஞ்சமலர் மேவுமிறை செங்கதி ருடுக்கள்சசி
கங்கைசடை வைத்த கடவுள்
ககனமுறு தேவர்முத லனைவரையு மோர்பொழுது
கம்பலைசெய் வித்த முனிவன்
விஞ்சைமறை யாகம முதற்கலைகள் சொற்றமுறை
வேள்விசெய வுற்ற பகலில்
மிடுக்குடைய தாடகையை வீழ்த்திச் சுவாகுவினை
விண்ணுலக மீதி லேற்றி
வஞ்சனைக் கொடியமா ரீசனைக் கடலினுண்
மறைந்திடும் படிவெருட்டி
மதில்சூழு மிதிலைப் பதிக்கரசன் மாளிகையில்
வருசனகி தன்பொருட்டுச்
செஞ்சிலை வளைத்தந்த வஞ்சிகை பிடித்தநிதி
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்தை நாதரகு வீரநீ
சிறுதே ருருட்டி யருளே. (௫)

96. தூய்யமறை யோர்மருவு பஞ்சவடி தன்னிலே
தோன்றிமறை யாதிநாளுநன்
றுணைவியைப் பிரிவுசெய வுன்னிவரு நிருதியைத்
துங்கமுள தம்பி கண்டு

நெய்[யிணி] னிறைந்தவுடை வாளுருவி யவளுடைய
நெடியகா திதழி னுடனே
நிமிர்கொங்கை நாசியிவை தமையரிய வக்கொடிய
நீலிசூற் பணகை கதறி
அய்யகோ வென்றலறி யிட்டடி பணிந்தவளை
யன்னைநீ யார்கொ லுரையென்
றம்பவள வாயினிற் புன்முறுவல் கொண்டருளி
யகமகிழு மொருசிங்கமே
செய்யவளை மார்பிலணி துய்யமணி வண்ணநீ
சிறுதேரு ருட்டி யருளே
சீ[தரதென்] வைகுந்தை நாதரகு வீரநீ
சிறுதே ருருட்டி யருளே. (சு)

97. கலைமதி நுதற்சனகி சிறையுறை யிலங்கைநகர்
காணமுந் நீரரசனைக்
கருதியுவ சித்தநிலு மதியா திருந்ததைக்
கண்டுகணை யொன்றேவவே
மலையைநிகர் புயவருண னுளனொந்து நைந்துருகி
வாடியிரு கண்பனித்து
வந்தடி விழக்கருணை யுந்தியப் பகழியினை
மருவுகாந் தார தீவிற்
கொலைநடலை வஞ்சனை செயுங்கொடிய நிருதரின்
குலமறத் திடவிடுத்துக்
கோளரி யெனப்பொருவு மாருதி முதற்றலைவர்
கொண்டுதவு குன்ற மென்னுஞ்
சிலைகொண்டு கடலினை யடைத்துமகிழ் காகுத்த
சிறுதே ருருட்டி யருளே
சீ[தர்தென்] வைகுந்தை நாதரகு வீரநீ
சிறுதே ருருட்டி யருளே. (எ)

98. கார்நிறக் கோதையும் மதிபொருவு வதனமுங்
கச்சடங் காத தனமுங்
கமலவிழி யுங்கொண்ட சனகியுந் தம்பியுங்
கதிரவன் பெறுமதலையும்
ஏருலவு வானரத் தலைவருஞ் சேனையு
மிலங்கையர சன்ற னுடனே
எதிபரத் துவனுறையு மினிதான சாலையினி
லெய்தியவ் வுலமைத்த
வார்கூவையி னேடடிசில் போனக முணக்கருதி
வாய்மடுத் துற்ற பொழுதில்
வந்துதொழு மாருதியை யென்றனுட னுண்ணநீ
வாவென் றழைத்து மகிழுஞ்
சீர்மருவு தாரணி யிராகவ முகுந்தனே
சிறுதே ருருட் டியருளே
சீதரதென் வைகுந்தை நாதரகு வீரனே
சிறுதே ருருட்டி யருளே. (அ)

வேறு.

99. மாகத் தமரும் புத்தேளிர்
மறையோர் தவத்தோர் தமைக்காத்து
மகிழ்வோ டிருத்தக் கருத்திலுன்னி
மனுவின் குலத்தி லவதரித்தே
யூகப் படைகொண் டணைதிருத்தி
யுவரிக் கடலைப் புறமெய்தி
யோங்க னிகர்க்கு மதிலிலங்கை
யுறையு மரக்கர் தமைமடித்து
வேக முடன்புட் பகமெய்தி
மிதிலை மடமான் றன்னுடனே
மேவிப் பதிவந் தரசுரிமை
விருப்புற் றளிக்குங் காகுத்தன்

கோக னகைக்கு மம்புவிக்குங்
கொழுநன் தடந்தே ருருட்டுகவே
குருகை முனிவன் பணிவைகுந்தைக்
குட்டன் தடந்தே ருருட்டுகவே. (௯)

100. பகற்கோன் கிரண மெனத்திகழும்
பச்சைக் கொடிஞ்சி யுருளமைத்துப்
பகரு மறையோர் நான்கினையும்
பரியா யிணைத்துப் பழவடியார்
நிகர்க்குந் ததிய ருளமலரை
நெடிய கயிறாய் வடம்பூட்டி
நேசத் துடனே பிடித்திறைஞ்ச
நிமலா சரண மெனக்கருதி
யக[த்தும்] புற[த்து]ங் களிப்புடனே
யன்பாற் பணிந்து பங்கயனு
ரார தனைசெய் துவந்தேத்த
வரனுர் தொழுது மனமகிழச்
செகத்தோர் செறிந்து கரங்குவிப்பச்
செம்பொற் றடந்தே ருருட்டுகவே
திருமா துறையும் வைகுந்தைச்
செல்வன் தடந்தே ருருட்டுகவே. (ய)

சிறுதேர் முற்றும்

## வாழி

101. திசைமுகன் வணங்குதென் வைகுந்தை நாதனிரு
சேவடிப் போது வாழி
செங்கமல மாதுபுவி மாதுநீளா தேவி
சேனேச னிவர்கள் வாழி
யிசைமருவு தமிழ்வேத நவிலுநா வீறன்முத
லீரைந்து பேர்கள் வாழி
யெங்கள்குடி வழியடிமை கொண்டமெகிழ் சாந்தூர
னிணைமலர்த் தாள்கள் வாழி
யசைவிலா நற்பொருளை வெளியிட்ட பூதூர
னம்பொற் பதங்கள் வாழி
யரிதான முத்திக்கு வித்தான நஞ்சீய
ரழகுபெறு கழல்கள் வாழி
வசையற்ற நோன்புபுரி மாதவர்கள் பூசுரர்கள்
மன்னவர் மனுக்கள் வாழி
மன்னுமணி வண்ணனிசை பன்னுபிள் ளைத்தமிழ்
வழங்குசெந் தமிழ்வாழியே.

திருவைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்

முற்றும்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுளெண்]


அ

அங்கண்விசும் 21
அடலுறுபுய 88
அண்டர்தவ 3
அந்தணர்கள் 35
அல்லைப்பழித் 75
அனம்போன் 79

ஆ

ஆதவனைத் 18
ஆவுருவமைந்து 13

இ

இக்குவலையத் 85
இங்கிதநய 89
இசையுந்திரு 26
இந்துநுத 81

ஈ

ஈரெழு பெரும் 8

உ

உம்பர்தோ 62
உருத்திரர்க 93

எ

எஞ்சலில் 63

ஓ

ஓநமோ 5
ஓராழி பூணி 58

க

கஞ்சமலர் 95
கருமுகின் 56
கரைக்குளடங் 60
கலைசேர் 25
கலைமதி 97

கா

காதுதோய்ந் 64
கார்நிறக் 98
காவிலுறை 16
காவுறைமந்தி 17

கு

குடவளை 46
குந்திபெறு 94
குயினறவு 60

கொ

கொங்குகமழ் 57

ச

சங்கத்தமரர்க் 23
சங்கையில் 45
சண்டவேகப் 87
சந்தனக்காவு 11

சி

சித்தர் புகழ் 42

சீ

சீதச் செழுங் 40
சீதத்திவலை 53
சீர்மருவு 59

சு

சுந்தர மடந்தை 92

செ

செகதல 90
செகமீது 10
செந்நெலங் 70
செம்பொன்னி 1
செய்யதிரு 28
செய்யதேமா 4

த
தண்டாமரைப் 27
தி
திசைமுகன் 101
திருவுயபொன் 6
தினகரனு 41
து
துட்டவல் 43
துய்யமறை 96
தெ
தெண்டிரையி 61
ந
நக்கனவன் 33
நங்கைபெறு 32
நச்சரவென 48
நத்தைநிகர் 82
நந்தன்மனை 15
நா
நான்முகனை 7
நிவந்துபணைத்த 78
நிறையுங்கலை 51
நீர்த்தரங்கப் 44
நு
நுகருஞ்சுதை 77
ப
பகற்கோன் 100
பச்சைபொருந் 30
பஞ்சைநிகர் 31
படவாளரவம் 29
பரவைசூழல 66
பழமறை 69
பா
பாணியமர் 52
பாதிமதி 86
பார்புகழு 67
பாவாருமின் 91
பு
பூமன்னர் 34
பூமாது கருணை 12
பூரணக்குட 68
பூவலயத் 19
ம
மங்கையர் 20
மதியைநிகர்த்த 22
மதிவதன 37
மறையோர்மருண்ட 83
மலைபோல் 84
மன்னுமெழி 65
மன்னுயிர்க 9
மா
மாகத்தமரும் 99
மாசற்ற 36
மானேர்விழிக் 76
மு
முதியோரருந் 54
முப்பருஞ் 2
முருக்கின் 73
முல்லை முறுவல் 24
மூ
மூலமறை 38
மே
மேதினிப்பார 14
வ
வஞ்சியிடை 50
வடம்பூண் 72
வண்டோகய 74
வம்பவிழ் 39
வன்புலநட 55
வார்கெழுமு 47
வானோர்குழு 71
விரதமறை 49

The B. N. Press, Educational Printers, Madras.

ஸ்ரீ:

# திருஞானமுத்திரைப் பிரசுராலயத்தின்

## வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ... | 0 | 4 |
| 2. | ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை ... | 0 | 1 |
| 3. | ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம்: தேவராஜ பாரதிகள் இயற்றிய காவியம் ... | 2 | 0 |
| 4. | ஸ்ரீ ராமாயணம் (பாசுரப்படி): பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்தது ... | இனம் | |
| 5. | துலைவில்லிமங்கலம் தேவர்பிரான் பேரில் சந்திரகலாமாலை ... | 0 | 1 |
| 6. | ஸ்ரீ நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் ... | 0 | 4 |
| 7. | திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்... | 0 | 4 |
| 8. | குருகூர்ப்பள்ளு (ஸ்ரீமான் S. வையாபுரிப் பிள்ளை அவர்களின் முன்னுரையுடன் கூடியது) ... | 0 | 6 |
| 9. | ஆழ்வார்கள் வைபவங்கள்: முதலாழ்வார்கள், பெரியாழ்வார் (வடிவழகிய நம்பிதாஸர் இயற்றிய குருபரம்பரையைச் சார்ந்தது.) ... | 0 | 6 |
| 10. | திருப்பணிமாலைகள் (தென் திருப்பேரை: திருக்கோளூர்) | 0 | 4 |
| 11. | திருவைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் (ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்காரவர்களின் முன்னுரையுடன் கூடியது.) ... | 0 | 8 |

கிடைக்குமிடம்:—

**பெரியன்-வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்**

திருஞானமுத்திரைப் பிரசுராலயம்

ஆழ்வார்திருநகரி.

# திருப்பணி மாலைகள்

நவ திருப்பதிகளுள்

## தென் திருப்பேரை: திருக்கோளூர்:

இவ் விரண்டு திருப்பதிகளையும் பற்றியன

பதிப்பாசிரியர்:

ஆழ்வார் திருநகரி, பெரியன்-வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்

திருஞானமுத்திரைக் கோவை : எண்-10.

தென் திருப்பேரை : திருக்கோளூர் :

இத் திருப்பதிகளைப் பற்றிய

# திருப்பணிமாலைகள்


சென்னை யூனிவர்ஸிட்டி

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.,

பரிசோதித்தது.



பதிப்பாசிரியர் :

பெரியன் - வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

1933

# பதிப்பாளர் முன்னுரை

ஆழ்வார்திருநகரி ஸ்ரீ மலையப்பக் கவிராயரவர்கள் வீட்டி லிருந்து சுவாமி மகர நெடுங்குழைக்காதர் திருப்பணிமாலை யின் ஏட்டுப் பிரதி யொன்று எனக்குச் சில மாதங்கட்குமுன் கிடைத்தது. இத் திருப்பணிமாலையில் முற்காலத்தில் விளங்கிய பெரியோர்களுடைய பக்திச் சிறப்பு வெளியாகின்றது. நமது நாட்டின் சரித்திர வுணர்ச்சிக்கும் இம் மாலை உதவுவதாயுள் ளது. இக்காரணங்களால் இதனை அச்சிட்டு வெளியிடவேண்டு மென்னும் நோக்கமுடையவனா யிருந்தேன். என் குலத்தை வழிவழியாட் கொண்டருளும் சுவாமி தெற்குத் திருவேங் கடமுடையான் திருவருளால் நான் சென்னைக்குப் போக நேரிட்ட ஓர் அமையத்து எனது நண்பர் ஸ்ரீமான் S. வையா புரிப்பிள்ளை யவர்களோடு இந்நூலை அச்சியற்றுதல் விஷய மாகக் கலந்தேன். அவர்களும் அன்புகூர்ந்து எனது வேண்டு கோளுக்கு இணங்கினார்கள். திருக்கோளூர் வைத்தமாநிதியின் திருப்பணிமாலை யொன்று உளதென்றும் அதனையும் சேர்த்து அச்சிடுவது நலமாமென்றும் வற்புறுத்திக் கூறி, இரண்டு திருப்பணிமாலைகளையும் பார்வையிட்டுப் பரிசோதித்து அச் சிற்கு உதவினார்கள். ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி யுரியதாகின்றது.

திருஞான முத்திரைப் பிரசுராலயம்,
ஆழ்வார் திருநகரி.
10—3—'33.

பேரியன்: வே. நா. ஸ்ரீநிவாஸன்,
பதிப்பாசிரியன்.

# குறிப்பு.

குழைக்காதர் திருப்பணிமாலை இயற்றியவர் இரத்தின கவிராயரின் புத்திரராகிய திருமேனி கவிராயரென்பதும் இவர் வடமலையப்ப பிள்ளையன் காலத்தவரென்பதும் இந்நூலால் அறியலாகும். எனவே இத் திருப்பணிமாலை இற்றைக்குச் சுமார் 225 வருடங்களுக்கு முன்னர் இயற்றப் பெற்றதாதல் வேண்டும்.

வைத்தமாநிதி திருப்பணிமாலையின் ஆசிரியர் இன்னா ரென அறியக்கூடவில்லை. ஆனால் வணக்கச் செய்யுளினின் றும் அவர் வானமாமலை ஸ்ரீ பட்டர்பிரான் சுவாமிகளின் சிஷ்யராக இருக்கவேண்டுமென ஊகித்தல்கூடும். இந்த சுவா மிகள் விளங்கிய காலம் சுமார் 100 வருடங்கட்கு முன்பா கும். எனவே இத்திருப்பணிமாலை கி. பி. 19-ம் நூற்றாண் டின் தொடக்கத்தில் இயற்றப்பெற்றதாகும்.

திருப்பணிமாலைகளின் பிரதிகள் மிகப் பிழைபட்டிருந் தமையால் ஒரு சில இடங்கள் எத்துணை முயன்றும் திருத்த மடையக் கூடவில்லை. அனுமானித்துச் சேர்க்கப்பெற்ற எழுத் தும் சொல்லும் இருதலைப் பகரக் குறிகளுள் [ ] அமைக்கப் பட்டுள்ளன. அடியில் வருந் திருத்தங்களைச் செய்துகொள்க.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 3 | மாரிமாருத | வாரிமாருத |
| 2 | 23 | பரதாள் | பரதள |
| 3 | 19 | கொடையுங்குடியுஞ் | குடையுங்கொடியுஞ் |
| 4 | 1 | பேராய்த | பேரால் |
| 5 | 20 | சொன்னவாள் | சொன்னுவால் |
| 8 | 9 | மொயில் | முகில் |
| ,, | 25 | விஜைசயத்தெசமிக்குத் | விசையதெசமிக்குந் |
| 10 | 3 | ணடனமிடும் வன் | ணுடும் வனே |
| ,, | 4 | நிகர்க்குமான் | நிகர்க்குமன் |
| ,, | 10 | கண்டன் | கண்டான் |
| ,, | 11 | கடத்துரைவன் | கடத்துறைவான் |
| 12 | 11 | மண்டமும் | மண்டபமும் |
| 13 | 7 | தூயதுரைச் | தூயதுறைச் |
| 19 | 15 | நம்பாதி | நம்பாது |
| 24 | 19 | வெற்றிலேயின் | வெற்றிலையின் |

# பெயர் அட்டவணை.

எண் : பக்க எண்.


அசைந்தாடு பெருமாள் வங்காரையான் 24
அப்பு ஆழ்வார் பாகவதர் 20
அபிராமன் 4
அய்யங்கார் அப்பன் 17
அழகிய நம்பி 5
அனந்தய்யங்கார் 18, 21, 31
அனந்தயங்கார் சீயப்பரய்யன் 25, 26
ஆட்கொண்டான் 32
ஆதித்தன் 3
ஆழ்வாரய்யங்கார் 19
உறப்பூருக்கதிபன் 18
எல்லார்க்கு நயினான் 16, 17, 18, 22
கச்சித் திருமலைபூபாலன் 11
• கத்தூரி ரங்கன் 10
கருநயினா ரம்மை 19
இட்டணப்பன் 10
குமாரசாமி வேள் 32
குளந்தையான் 5
குற்றாலம் 7
கொற்கைச் செழியன் 3
சங்கணியான் 13
சங்குப் பிள்ளை 7
சடகோப தாதன் 3
சீயப்பரய்யன் 22
சீயப்பன் 25
சீராமய்யன் 6
சுகந்தவனநாதன் 8
சுப்ரமண்யன் 5
செகநாதன் 19, 20, 23, 31
சொக்க நாதன் 32
சொக்கலிங்கம் 7
சொப்ப நயினான் 8
திருக்கோளூர் வல்லி 25
திருமலேந்திரன் 25
திருமலை ராயன் 11
திருமேனி ராயன் 4
திருவஞ்சி விக்கிரமன் 2
திருவடி மன்னன் 28
துரைராய சிங்கம் 3
தோழப்பன் 5
நங்கை 28
நயினாள் 31
நயினான் 8
நயினான் தோழப்பர் 5
நயினான் மாதர் குல திலகம் 29
நரவீரகேரளன் 3
நாயன் குருக்களய்யன் 5
நூற்றெண்மர் 1, 8, 13
பட்டர்பிரான் 15
பாப்பலப்பன் 4
மதுரகவி பாவலர் தம்பிரான் 16
மயிலாழ்வார் 25
மாணிக்கம் 9
மாவை 32
மீனவர்கோ 21
முத்துவீரப்பன் 10
முயிதீன் 4
ராமகிட்டணன் 5, 7
ராமானுச முனிவன் 5, 28
ராமானுசச்சீயங்கார் 21, 30
ரோமசமா முனிவன் 26
வசவப்பன் 28
வஞ்சி 20
வடமலை பூபதி 11, 14, 17, 21, 23, 24, 26, 30, 31
வீரதுங்கராமன் 9
வரகுணமாமங்கைவழுதி 21, 29
வரராமன் 5
வழுதி 27
விசையமால் 19
வீரப்பன் 4
வேங்கடமால் 6
வேங்கடத்துறைவான் 10

ஸ்ரீ

## தென்திருப்பேரை

## சுவாமி மகரநெடுங்குழைக்காதர்

# திருப்பணி மாலை.

---

மருப்பொலியும் நீலமணி வண்ணர்குழைக் காதர்
திருப்பணிமாலைக்கமுதந் [1]தேங்க—விருப்பினால்
மாரிமா றூதபொழின் மாடத் திருக்குருகூர்க்
காரிமா றன்பதமே காப்பு.

கல்விக் கடலைக் கரைகண்ட ரத்னகவி
செல்வக் குமாரன் றிருமேனி—நல்ல
திருப்பணி மாலையிந்தத் தேசமெல்லாம் வாழ்த்த
விருப்பமுடன் செய்தான் விரைந்து.

நூல்.

1. பூமாது வண்மைப் புவிமாது மேவவளர்
மாமால் பவள மணிவாயன்—தாமத்
2. துளவணிந்த தோளாளன் தொல்புவியெல் லாமுண்
டளைநுகர்ந்த வாதி யரங்கன்—வளமைதரும்
3. வீடாளன் முத்தமிழு மீறுந் திருவழுதி
[2]நாடாளன் நூற்றெண்மர் நம்பினேன்—ஏடவிழ்பூந்
4. தண்ணிலஞ்சி மார்பன் சடகோபன் சொற்பாடற்
கண்ணிறைந்து நின்றருளுங் கார்மேக—மெண்ணிறைந்த

---

(பிரதி.) 1. தியங்கவே. 2. நாடாளர்.

5. வல்லசுரர் வேரறுத்து வாலிக்கு மம்புதொட்டு
நல்லரசு வீடணற்கு நல்கினேன்—தொல்லை

6. வரந்திகழ யாவும் வரக்கொணர்ந்து நாளும்
பரவி வருணன் பணிவோன்—திரைகொழிக்கு

7. மாழிநீர் வண்ண னதிரும் வளைக்கையான்
வாழி நிகரில வண்ணனொடு—சூழுமறை

8. வானப் பிரானேன் வருணன் பறைவிடுநாள்
மீனுட் டிமிங்கிலமும் வெல்மீனுந்—தானுந்

9. திகல்புரியுங் கால்வருணன் ஏதென்று நாடி
நிகரில் முகில்போக்கி நிற்பப்—புகலரிய

10. அம்மீ னிரண்டு மருங்குண் டலம்வருணன்
கைம்மீ தளித்ததொரு கைப்பற்றிச்—செம்மை

11. தழைசெவியிற் சாற்றவது தன்னால் மகரக்
குழையனெனுங் காரணப்பேர் கொண்டோன்-மழைவரி

12. வண்டு குடைந்துழுத மாலிகையான் சானகியைக்
கண்டு சிலைவளைத்த காகுத்தன்—மண்டு

13. விழாவொலியும் வேத வொலியுமிகு பிள்ளைக் [யும்
குழாவொலியும்பெருவகை கொண்டோன் - துழாயணி

14. நேய நெடுமால் நிகரில வண்ணனுக்குக்
கோயில் விமானங் குளிர்சிகரம்—நாயகமா

15. மன்னும் படிக்கத்த மண்டபமா மண்டபமு
மின்னும் பிறசெய் தினிதமைத்தான்—தென்னன்

16. பகைவீர வீரன் பரதாள் விபாடன்
செகவீர ராசேந்த்ர சிங்கம்—முகலளிதன்

17. வேந்தன் திருவஞ்சி விக்கிரமன் மேவிரதி
காந்தன் வறிஞர் கலிகோப்பன்—ஏந்துபுகழ்

18. வேரிகமழ் தாலத்தார் வீர னரவீர
கோளனு தித்தன்மணிக் கேயூரன்—பார்புகழ

19. வல்லான் றிருப்பேரை மாமானுக் கேவாழ
வல்லான் விரும்பி வரந்தளித்தான்—தொல்லுலகிற்

20. பாப்பிற் பிறந்துலகிற் பண்ணையான் சொற்படிநன்
மூப்பிற் பிறக்க முயன்றவன்மே—லேப்புற்ற

21. கொற்கைச் செழியன் குலதீபன் கூடலான்
பொற்கைக் கவுரியர்கோன் பூபாலன்—சொற்கருதிப்

22. பக்கமுறும் வேதியரிற் பண்ணையான் சொற்படிநன்
மிக்குளக் காரை விளைப்புரவும்—மைக்கண்வளை

23. செல்லூர் பொழிலுஞ் சிறக்குஞ் செயதுங்க
நல்லூரும் விட்ட நரபாலன்—கொல்லையந்தார்

24. கொண்டல் மகரக் குழைக்காதர் சன்னிதியில்
மண்டபமுந் தூய மடப்பளியுங்—கண்டு

25. கொடிமாமுங் கிட்ணன் குறடுமமைத் தோங்கிப்
படிமிசையு மன்புகழே பாலித்—துடனே

26. கருவேலம் பாடுங் கனபணிதை யும்பொன்
னுருவோடு வெள்ளி யுருவுந்—திருமுடிக்கீழ்

27. வீராபி ஷேகமொடு மிக்ககொடை யுங்குடியுஞ்
சீரார் செழும்பொற் றிருத்தேரும்—நேராய்ச்

28. சடகோப தாதன் சமைத்தமைத்தா னம்பொன்
மடல்வாயுங் காவியந்தார் வள்ளல்—கடல்வா

29. யுலகம் புரக்கு முடையகுல வேந்தர்
திலகன் றுரைராய சிங்கம்—[1] உலகறிய

30. மூன்று குளமுமொன்றாய் முன்னிருத்திச் சாகரம்போல்
தோன்றுமீகடம் பாவெனப்பேர் சொல்லவே—சான்றோர்

---

(பிரதி.) 1. மலவெவுலகரிய.

31. துதிக்குந்தன் பேராய்த் துலங்குமடை மேற்கற்
பதிக்கும் விநாயகனைப் பாலித்—துதிக்கும்
32. இரவிமதி யுள்ளவரை [யீரை]ந்து கோட்டைப்
புரவுநில மும்விட்டெப் போதுந்—திரமாய
33. ரண்டாந் திருமதிலும் [1]ரத்நக்கற் கோபுரமுங்
கண்டான் பெருந்தவமுங் கைக்கொண்டான்—மீண்டுங்
34. கவிராச ராசன் கவிச்சக்ர வர்த்தி
புவிராசர் போற்றும் புலவன்—கவிமாலைச்
35. செந்தே னெவர்க்குஞ் செவித்தாரை யூற்றிருப்ப
நந்தா தரிக்குமொரு நாகரிகன்—பைந்தார்
36. திருமேனி ராயன் றிருப்பேரை வல்லிக்
கருள்மேவு மண்டபமொன் றல்லால்—மருவுதிருக்
37. கோயில் விமானங் குளிர்சிகரஞ் செய்தமைத்தான்
பாயு நடனப் பரிநகுலன்—தூயபுகழ்க்
38. கச்சி நகர்புரக்குங் காவலான் கர்நாடர்
மெச்ச வரும்பெரிய வீரப்ப—னுச்சிதவேள்
39. வாரத்தால் வாசல் மனுவால் மனுநடக்கும்
வீரத்தால் மெய்த்தரும மேன்மையால்—சீர்திகழும்
40. நந்தா மணிக்குழைக்க நாச்சியார் வீற்றிருப்ப
வந்தா தரிக்கும் வளர்துணைவன்—சிந்து
41. திருக்கோது கோயில் சிகரமுஞ்செய் [2]தானன்
புருக்கா தருக்கு முயிதின்—பெருக்குபுகழ்
42. பாப்பலப்பன் கச்சிப் பதியிா னபிராமன்
பூப்பதுமத் தாளிற் பொலியுமால்—சேர்ப்பவிரு
43. தாளிணைக்கி ழொன்று[ர்] சரண்புகவெம் போரில்வடி
வாள்விற்கு முக்ர ம[தி]தீரன்—நாளும்

---

(பிரதி.) 1. நாகநகக். 2. தமைத்தானன்.

44. பணியப் புவனப் படிசட்ட மிட்டு
மணிய துறைசெலுத்து மன்னன்—[அணி]தழைய

45. மெல்லார்க்கு நல்லா னெவர்க்கு முபகாரன்
மல்லார்க்குந் திண்டோ[ள்] வரராமன்—சொல்லரிய

46. எம்பெருமா னார்க்கு மினிதுதிருக் கோயிலமைத்
தும்பரென்மா னுக்குயர்ந் தோங்கினேன்—அம்பொன்னால்

47. ராமா நுசமுனிவன் நங்குழைமால் பொற்சிகர
மாமேரு வென்ன வணிவித்தான்—ராமமே

48. சூழ்வான் புகழ்நயினான்தோழப்ப ரன்[பு]புரிந்
தாழ்வா ரறுவரையுண் டாக்கினான்—ஏழுலகாள்

49. நாயன் குருக்களய்யன் நாடோறு நங்குழைமால்
மாயன் பவனி வருவதற்காத்—தூயவொளிப்

50. பாந்தளைச் செம்பொற் பருவதம்போ லுண்டாக்கிச்
சேர்ந்துலகிற் கீர்த்திபெற்ற செண்பகமால்—வாய்ந்ததமிழ்த்

51. [1]தோழப்பா னிந்த்ரன்ரண துங்கனெனும் ராமகிட்டணன்
வாழக் கருணைகொண்டு [வந்து]லகில்—மீளவரும்

52. முன்பா வலர்பின்போய் மூர்த்திகுழைக் காதருக்கே
யன்பாக ரத்தி னபிஷேகம்—பொன்பாவை

53. யெந்நாளும் வீற்றிங் கிருப்பவிமை யோர்மகிழ்ந்து
சொன்னவாள் வாழ்த்தவென்றே சூட்டினான்-பன்னார்

54. முரசதிருஞ் சேனை முதல்வ னருள்வோன்
பிரசமலர்த் தாள்சுப்ர மண்யன்—வரிசையால்

55. நாடு மழகிய நம்பிசீ ராமன்பர்
தேடுஞ் சரணத் திருமாற்கு—நீடொளிசேர்

56. செண்பகப்பூ மாலைமுதற் செய்யவரை ஞான்விளங்கும்
பண்புறு சீ[ர்த்]தும்பிப் பதக்கமுடன்—அன்பாக

---

(பிரதி.) 1. தோளபபானரசிந்திரளவாரண.

57. கீர்த்திபெறச் [1]செய்தான்மென் கிள்ளைமொழி யார்விரும்பு
பார்த்திபன்சீ ராமய்யன்சொற் பாலனென-வாய்த்த

58. [க]திக்குநவ ரத்னக் கனகாபி ஷேகம்
பதிக்குந்திறல் வேந்தர்குழாம் பண்பாய்-மதிக்குமணித்

59. தண்டிகையுஞ் சூழ்ந்த சதுரங்க சேனையுடன்
அண்ட கடாக மதிர்முரசே—யெண்டிசையுஞ்

60. சீர்பெருமீ றுங்கவுடஞ் [ ]சலர்மகு டங்குமுதப்
பேர்பெறுமா மக்கள்முதற் பேராளர்—பார்பெறவே

61. வந்திறங்குஞ் செம்பொன்மணி வாசலான் கோகனகக்
கொந்தவிழ்பொன் மாதுறையுங் கோயிலான்—சந்ததமும்

62. நீங்கா தருள்தொழிற்செய் நேய கருடன்[றன்]
பாங்காக முன்னுதித்த பாக்கியவான்—கோங்காரு

63. முல்லைநகை மாதர்கண்டு மோகிக்கச் செங்கரும்பின்
வில்லைவளைக் குங்காம [வெல்]வேந்தன்—செல்லைநிகர்

64. கையான் மலர்க்கற்ப காடவியான் சார்ந்தோர்க்குப்
பொய்யா ன[ன]த்துவசப் பூசுரர்கோன்—மையாழி

65. சூழுலகாள் பேரைநகர்த் துங்கன்குழைக் காதனன்பா
யேழுலகத் தோர்கள்பணிந் தேத்தவே—நாளுமுகில்

66. நற்கருணை கொண்டருளும் நங்குழைமால் வீதிவரப்
பொற்கருட சிங்கா சனம்புரிவாய்—வர்க்க

67. மிணங்கு தொட்டிற் றேருக் கினியான் [2]பிரபை
மணங்கமழச் செய்வித்த வள்ளல்—வணங்குமளித்

68. தண்டாள மென்மொழியார் தார்விரும்பும் பார்த்தனருட்
கொண்டல்நிறை ஞானக் கொழுங்கனியான்-மண்டலத்தின்

69. மீது பிறந்துதவ வேங்கடமால் செய்தவத்தின்
போதுமிக வாகவந்த புண்ணியவான்—ஆதரவாய்ச்

(பிரதி.) 1. செய்ததெண்ணீர்மென். 2. பிறவைமுதல்.

70. செம்பவள வாயகனே செய்யசங்குப் பிள்ளையும்வந்
தும்பர் தொழுமாலுக் கன்பாக—அம்புவியிற்
71. சூட்டுவோர்போ லந்தநிறை ...
... ... ... ...
72. வார்குழையில் ரத்ன மணிக்கனக குண்டலங்கண்
டோர்குழையிற் சாத்தமு [டே]தாரவென்-பார்பெறவே
73. செந்தா மரைமுகத்தான் செய்யதமிழ் ராமகிட்ணன்
[பந்தாக] வந்தருள் பூபாலன்—விந்தைதுணை
74. கோகனக மார்பன் குழைக்காத [னல்]வேந்தன்
நாகரிக மாம்பேரை நாரணற்குச்—சீர்பெறவே
75. தந்தச் [1]சிவிகை தலைப்பாவுஞ் சாமரையும்
விந்தைபெற வெங்கும் விளங்கினோன்—முந்தவே
76. கௌத்துமணி யஞ்சுமொரு கொத்தா மணியோசை
நித்தமம ரர்புரம்நி ரம்பவே—இத்தனையு
77. முண்டாக்கி னன்மடல்விண் டேற்றிருக்குந் தேனருந்தி
வண்டார்க்குந் தொங்கல் மணிமார்பன்-எண்டிசைக்கும்
78. எங்கோன் முதலியநா மேத்துங் குலவிளக்கு
மங்கா வளம்படைத்த மானபரன்—இங்கிதவேள்
79. பண்ணுதமிழ்ச் சொக்கலிங்கம் பைம்பொற் றிருத்தேரும்
வண்ணமணிச் செவ்வந்தி மண்டபமுஞ்-சன்னதியில்
80. உண்டாக்கி [2]வைத்திவ் வுலகமெல்லாங் கீர்த்திபெற்ற
வண்டார்க்குந் தொங்கல் மணிமார்பன்—மீண்டுங்
81. காணிக்க ராயன் கவிபெறு கோதண்
டாணிக் கொருசொலரிச் சந்த்ரன்—சொருகுகுழல்
82. மாதர் கிழியெழுது மன்மதவேள் குற்றாலம்
வேத முறையும் விதிதவறான்—ஆதரவாய்ப்

(பிரதி.) 1. சிவிகைரத்நத். 2. வைத்து.

83\. பட்டுருவத் தொட்ட பகழியான் தென்பேரை
பட்டுருவத் தொட்ட பரிபாலன்—வட்டமிடும்

84\. வாம்பரியா னென்றேற்ற வாரந் தவறாத
தேன்படுவைக் காவித் திருமார்பன்—பூம்பொழில்சூழ்

85\. வல்லை யரசன் வரபாலன் வந்தடைந்த
அல்ல லறுக்கு மரசாவான்—செல்விதிகழ்

86\. செந்தா மரைமுகத்தான் செந்தமிழ் [1]சேர்நயினான்
வந்தா தரிக்கும் வளர்துணைவன்—விந்தைதிகழ்

87\. பெற்ற நயினான் பெரும்பார் புரக்குமொரயில்
கற்றபுல வோர்களிரு கண்மணியான்—பொற்றுழாய்

88\. நங்குழைமால் பங்கூனி நாலாந் திருநாட்கு
மங்கள மாக வளர்சிறப்பு—மிங்கிதவேள்

89\. பண்ணுதமிழ்ப் பேரைப் பதிவரும்நூற் றெண்மர்துள
மண்ணு மொருகுருந்து வாகனமும்—பொன்னின்

90\. பரமபத வாசலொடு பார்புகழத் தூய
குருமணிப்பொன் வெள்ளிக் குழுவுந்—திருமருவுங்

91\. கொட்டையுஞ் செம்பொற் கொடிநெடுந்தேர் சப்பரமுங்
கட்டுமொரு கம்பக் [கருங்]களிறுஞ்—சிட்டர்தொழ

92\. .......... ஆடித்திருப் பூரத் திருநாட்குக்
கோதுபட நற்கோணத் தேரோடு—மாதரவாய்ச்

93\. சித்திரைக் கோடைத் திருநாட்குச் சப்பரமும்
பத்திபெறச் செய்து பலன்பெற்றோன்—...

94\. ... ... ... நீட்டுபுகழ்
மன்னன் சுகந்த வனநாதன்—இந்நிலத்தில்

95\. திக்கு விசையத் தெசமிக்குத் தைமாத
மிக்க தொருபாரி வேட்டைக்குந்—தக்கதொரு

---

(பிரதி.) 1. சொப்பநயினான்.

96. சித்திரையிற் சித்திரைக்குந் தென்பேரை வாழ்முகுந்த
னித்தனைக்கு மன்பா யெழுந்தருளி—மொய்த்துநின்று

97. தொண்டர்குழாங் கொண்டாடச் சோலைசூழ் வாய்த்தலையில்
மண்டபத்தைக் கட்டி வளமானேன்—விண்டகதிர்

98. தங்க முருக்கித் தகடிழைத்த [1]நிட்களமாய்ச்
செங்க [2]ணெடுத்த திருவுடம்புக்—கங்கி

99. [3]யமைத்தாள் புளகித்தாள் ஆரந் துவட்சி
சமைத்[த] தன தடமே தாங்கிச்—சுமக்குமிடை

100. சேணிற் பொலியுந் திருவழுதி நன்னாட்டு
மாணிக்க மென்னு மடமாது—நீணிலத்தில்

101. மற்றப் பொலக்கை மடக்குக்கட் டுக்கர்ணம்
பற்றித் திரும்பப் பவுரிகொண்டு—சுற்றித்

102. திருகியெழுந் துள்வீசிச் செக்கணிப்ர பந்த
மருவுமொரு கட்டளைக்கு மார்க்கம்—துருபதமும்

103 வில்வேடு முன்னந்த வீச்சும்பின் னந்தமலாக்
கெல்லாருங் கண்டுமகிழ்ந் தேத்தவே—சொல்லால்முன்

104. னாடினு ளாடி யதற்கிசையச் சங்கீதம்
பாடினாள் பூணார் பளாவென்றே—கூடல்

105. வரதுங்க ராமன் வழங்கினான் செம்பொ
னருள்கொண்டு மீண்டுவரு மந்நாள்—பரிமளிக்குங்

106. கொத்தூர் துளவக் குழைக்காதர்க் கென்றுவயல்
நத்தூர் தருமுரப்ப [நன்]நாடும்—மொய்த்த

107. மணக்கரையுங் கைவிலைக்கு வாங்கிவிடுத் தாள்வாய்ந்
திணக்கம் பெறுபுகழா லெங்கு—மணக்கு

(பிரதி.) 1. நிட்சளமாய். 2. ணெடுத்த. 3. யமைத்தாள் பெற்றாள் புளகித்தாளததனாரந்துகட்சி.

108. [மன]தான சோம னபிராமன் போசன்
மனுநீதி குன்றாத வள்ளல்—வனக

109. வரியரவி னடனமிடும் வன்கழற்கால் நீல
கிரியை நிகர்க்குமான்கிட் ணப்ப—னருள்மதலை

110. கத்தூரி ரங்கன் கமலத் திருமார்பன்
முத்தா பாணன் முகலனிதன்—[1]மெய்த்துணைவன்

111. முத்துவீ ரப்பன் முறைதவறா வுத்தண்டன்
சித்த மலர்பகுதி சிட்டிட்டங்—கொத்தி

112. யிலக்கஞ் செலுத்தி யியல்குறும்பு மாற்றிக்
கலக்கம் பதினிருவர் கண்டன்—மலர்க்குவளைக்

113. கற்பகத்தை நேர்வேங் கடத்துரை வன்ராயன்
வெற்பகத்தில் வைத்த விளக்காகச்—சொற்பனுவல்

114. செந்தமிழ்த்தென் பேரைத் திருமாலுக் கன்பாய
சந்த மணிச்சிவிகைச் சப்பரமும்—விந்தைபெற

115. மாயா புரியால் மணிக்குடையுஞ் செய்வித்து
ஓயா தெவர்க்கு [2]முதவுவோன்—நேயன்

116. மகரக் குழையன் மகிழ்பாலன் கற்றோர்
பகரக் குழைமலர்ப்பா தர்க்கு—நிகரிலக்

117. கண்ணன் சிறுத்தாம்பின் கட்டளைக்கு நற்சிறப்பும்
வுண்ணனென்று பூங்கமல வாகனமும்—எண்ணரிதா

118. யுண்டாக்கி னன்மடல்விண் டேற்றிருக்குந் தேனருந்தி
வண்டார்க்குந் தொங்கல் மணிமார்பன்-எண்டிசைக்கும்

119. பொன்னி கலக்கிப் புகாரைப் புகுந்து புக்திச்
சென்னி [3]யுறங்[கை]த திறைகொண்டு—முன்னடந்த

(பிரதி.) 1. மொய்த்துணைவன். 2. முதவுவோம் - நேயாதத
னம். 3. யுறைந்த.

120. வல்லங் குமுத மருந்தங் குடிவாங்கக்
கொல்லங் கிடாரங் குடைக்கொதுங்கச்—செல்லுங்காற்
121. கப்பங் கொணர்ந்திருதாள் கைகுவித்துத் தங்கள்குறை
செப்புந் திருமுன்றிற் றேவேந்த்ரன்—ஒப்பரிய
122. செய்யதமிழ்க் கச்சித் திருமலைய பூபாலன்
வையமுழு தும்புரக்கு மானபரன்—துய்ய
123. திருமலை ராயன் சிகரமணி மேருப்
பொருபுய னுல்லாச போசன்—அருள்புரியும்
124. புண்ணியமாம் செல்வம் புரக்குங் கரியமுகில்
வண்ணன் கருணை வடமலையான்—எண்ணிய
125. மாறு பரணன் வடமலைப்பூ பாலனறுந்
தேனூர் குவளைத் திருமார்பன்—மானபரன்
126. முன்னோன் ... ...
... ... ...
127. ... ... ...
வடமலை பூலோக மன்னன்—கடலுலக
128. மெல்லாம் பொதுநீக்கி யெங்கணுஞ்செங் கோல்நடத்து
மல்லார் தடந்தோள் வடமலையான்—கல்விக்கு
129. மாறு வளமைக்கு [மன்புக்குங்] கேண்மைக்கு
மாறுபி மான [1]மகிமைக்கும்—சேறு
130. முகத்துக்குஞ் செங்கோல் முறைமைக்கும் நீதி
யகத்துக்குந் தானொருவ னுன்னோன்—செகத்திற்
131. பரக்குங் [2]கலிக்கோடை பற்ற[ற்]று நீங்கத்
துரக்குந் தினதான சூரன்— ...
132. ... ... அபிராமன் போசன்
மனுநீதி குன்றாத வள்ளல்—வனகவுரி

(பிரதி.) 1. மகிள்மைக்கும். 2. கலிக்குடை.

133. ... ... ... ...
.... ... நடனமிடும்—அங்குளகா

134. விண்டடவுஞ் செம்பொன் வியன்மதிலுங் கம்பமுங்கன்
மண்டபமுந் தேரு மகிழ்ந்தமைத்துக்—கொண்டலென

135. நின்ற நாராயண னருள்குளந்தை யானைநமக்
கென்றுநா ராயணனென் றேத்தியே—நன்றி

136. தருமபி ஷேகந் தடந்திருக்கை யங்கி
திருமடப் பள்ளி திருத்தேர்—அருமைத்

137. திருவா பரணந் திருவொட்டி யாண
மொருவாத காவணமு...—திருமாட

138. மாளிகை சூழுமணி மண்டமும் வெள்ளித் தழுகையும்
பாளிதச்சே றூடும் பணைமுலையார்—தாளமுறை

139. யாடல் புரிவரிசை யாடித்திரு நாளுந்தே
ரோடுபங் கூனித் திருநாளுங்—கூடல்

140. வனைத்தழகுங் கண்டுபரி மலராமஞ் சூழ்பொற்
சினைப்பலவும் பூளைச் செறிவுங்—கனைத்துவரி

141. வண்டிமிருங் கோளூரில் வாழ்வைத்த மாநிதிக்கு
விண்டொடுபொற் [1]கோபுர விமானமுதற்—கண்டு

142. நேடித் தொழப்பொலிந்து நின்றநெடு மாயனுக்கே
யாடித் திருநா ளமைப்பித்து—நீடுபுகழ்த்

143. தேசத் தெவருந் தெரிசிப்ப வேசொற்க
வாசற் றிருநாளும் [வைப்பித்துப்]—பேசற்

144. கரியதுழாய்ப் பெம்மா னருஞ்சிகரஞ் சூழ
விரியுமணி மண்டபமும் வெள்ளிப்—பரிகலமு

145. மாடக் கொடியுயர்ந் தக்ரகர முஞ்சிகர
மாடத் திருக்குருகூர் மாநகரில்—கூடவே

(பிரதி.) 1. கோபால.

146. யெல்லா வளமு மியற்றிமறை நான்குமுது
சொல்லா மதுரச் சுவைகனித்து—நல்லார்

147. செவிமடுத் தானந்தந் தேக்கெறிய மூன்னூற்
கவிமதம் பெய்யுங் களிறும்—புவிமீது

148. சங்கத் தவர்தந் தனிக்குறும்பு மாய்த்துடைய
நங்கைக் கொருமகவாம் நாவீறன்—பொங்குமணிச்

149. சங்கணியான் செம்பதுமத் தாள்பரவுந் தூயதுரைச்
சங்கணியா னெங்கள் சடகோப—துங்கமணி

150. [1]கோயிலி னுன விமானங் குளிர்வின்றி
[யேய]தடந்தே ரினிதமைத்துப்—பாயிருள்

151. சீய்க்குந் திருவா பரணமுஞ் செவ்விபல
வாய்க்கும்வட வேங்கட மாலு......மபக்குயந்த

152. தாரணியி[ல்] மெத்[த] தசாவதா ரம்முதலாங்
காரணமெல் லாஞ்செய்து கையமைத்து—...

153. ... ... ... ...
... ... ... —சொல்லரிய

154. வன்னக் கனக வரைமூன்றும் ...
கன்னித் திருமதிலுங் கட்டிவைத்துப்—பன்னுமறை

155. வந்தியா ரிற்கு மறையோர்க் கரசடியிற்
சந்தியா மண்டபமுந் தாபித்துச்—சிந்தைநிகழ்

156. ஆதிமறை நூற்றெண்மர்க் கக்கிரகா ரங்கொடுத்து
நீதியுல கிற்படைத்த நேமியான்—வாதுசொல்லித்

157. தூண்டுஞ் சமர்க்களத்துத் துன்னலர்வெம் போர்முறியத்
தாண்டும் பரிகுலன் சங்க்ராமன்—பூண்டுலகில்

158. மன்னுயிர்கள் யாவு மனுமுறையா னோடோறுந்
தன்னுயிர் போற்புரக்குந் தண்மையால்—இன்னுயிர்

(பிரதி.) 1. கோயிலான.

159. வேறாய் நிலைபிரிந்து விட்டாலுஞ் சொன்னமொழி
மாறா வரிச்சந்த்ரன் மானபரன்—தேறார்

160. பறையளக்கும் நெஞ்சம் பதைபதைப்ப வந்து
திறையளக்குந் தேவேந்த்ர சிங்கம்—முறைதவறா

161. மன்னன் கருணை வடமலைப்பூ பாலன்மகிழ்ந்
திந்நிலத்து [வாழி யினிது.]

தழைக்கா தழகர் திருப்பேரை வல்லியென் றாயரொடும்
பிழைக்காத மங்கல நாணூழி வாழி பிரகரஞ் சூழ்
மழைக்காடு பூத்த திருமேனி வள்ளல் மகரநெடுங்
குழைக்காதர் வாழி யெனவாழி பிள்ளைக் குழாங்களுமே.

தென் திருப்பேரை குழைக்காதர் திருப்பணிமாலை

முற்றும்.

---

‘ நித்தியமும் வந்தோர் நிகழ்ந்திரங்கி வீற்றிடவுஞ்
சித்தமறை யோர்பசியைத் தீர்த்திடவுஞ்—சத்திரத்தை
நல்லதென் கோட்டையில் நன்றாகக் கட்டிவைத்தான்
வல்லவன்சிவசுப்பிரமணியசேந்திரன்பாலர்ாமசாமிமன்னன்றானே’
இது புதிதாகச் சேர்க்கப்பெற்றுள்ளதோர் இதழிற் காணப்பட்டது.

ஸ்ரீ

திருக்கோளூர்

சுவாமி வைத்தமாநிதி

# திருப்பணி மாலை.

வணக்கம்

இட்டவரிச் சுரும்பரடை கிடந்துறங்குந் தண்டுழா
யிளகு தீந்தேன்
மட்டவிழுந் தொடையல்வைத்த மாநிதிக்குத் திருப்பணிப்பா
மாலை பாடச்
சிட்டர்தொழுந் திருஞான தேசிகனே தஞ்சமென்று
சிந்தை கூரும்
பட்டர்பிரான் முனிவனிரு பாதார விந்தமலர்
பரவு வாமே. (1)

நூல்

நீர்புனைந்த மலர்த்தடஞ்சூழ் திருக்கோளூர் வைத்தமா
நிதிக்கன் பாகச்
சீர்புனைந்து விளங்குகெற்பக் கிரகமுகித் துயரநெடுந்
திவ்ய விமான
மேர்புனைந்த நவமணியா லுண்டாக்கிப் பூசைசெய்தா
னெதிர்த்தோ ரஞ்சப்
பேர்புனைந்த பெருந்திறற் குபேரன்வளந் திகழளகை .
புரக்கும் வேந்தே. (2)

இன்னதினிப் பகர்வோமென் றெண்ணறியாப் பழவடியேற்
கிரங்கிக் காக்குஞ்
சன்னதியிற் கருடனையுஞ் சேனையர்கோ னையுமகிழ்ந்து
தானுண் டாக்கிச்

செந்நெல்வயற் புகுமூரர் திருவுளத்தின் படியேப்ர
திட்டை செய்தான்
பொன்னுலவு த[மி]ழளகா பதிகுபே ரன்வடபால்
புரக்கும் வேந்தே. (3)

பொருநடநா டகமகளிர் விளையாடு மணிமேடைப்
புகுமூர் மாயன்
திருநடமா ளிகைநெடிய பத்திவிலா சம்பெறவே
செய்தான் கீர்த்திக்
கருநடர்மா ளுவர்துளுவர் வங்காளர் பப்பரர்கை
முகிழ்த்துப் போற்ற
வருநடநீள் குரதுரகன் [1]எல்லார்க்கு நயினுன்தெம்
மன்ன ரேறே. (4)

கிளைத்தபுகழ் மருவும்வைத்த மாநிதிமால் கெற்பகிர
கத்துக் கேற்க
விளைத்தசுடர் வழங்குமத்த மண்டபத்தை யிலங்கும் ரத்ன
மயத்தாற் செய்தான்
திளைத்தகண்ணி நுண்சிறுத்தாம் பாழ்வார்பொற் சேவடிக்கே
தெரிந்து பாடித்
தளைத்தபுகழ்க் கோளூரில் மதுரகவி பாவலவர்
தம்பி ரானே. (5)

மாயகப்பற் றற்றவர்கள் வணங்குபுகு மூரர்மகா
மண்ட பத்தை
நாயகப்பத் தியுமதனுக் கடுத்தபத் தியுமாக
நன்ருய்ச் செய்தான்
சாயகத்தால் வெல்வோமென் றெதிர்பொருத நிருபர்தலை
சாய்க்குந் தோளுந்
தூயகப்ப மிடவமர்செ யெல்லார்க்கு நயினுனுத்
துங்க வேளே. (6)

---

(பிரதி.) 1. வரகுண மங்கைப் பதியில் வழுதிநாளே.

கையங்கால் தாமரையாம் ஸ்ரீவத்தமா நிதிமாயன்
கலங்கா தன்பு
செய்யுங்கோ யிலிற்பயில்து வாரபா லகரையும்ப்ர
திட்டை செய்தான்
வையங்கா வலரான கள்வர்தமக் களத்தளவு
வளமாய்ச் செய்தோன்
அய்யங்கா ரப்பன்மகிழ் எல்லார்க்கு நயினுன்போ
ராடல் வேளே. (7)

பொய்கைமுத லாழ்வார்க ளனைவரிற்கோ ளூரன்வில்லி
புத்தூர் வேந்தன்
வையகமெல் லாம்புகழு மங்கைமன்னன் இவர்களல்லால்
மற்றுள் ளோரைச்
செய்யமகா மண்டபத்துத் தென்புறத்தி லன்பொடு ப்ர
திட்டை செய்தான்
கைம்தவா ரணங்காத்த வடமலை நராதிபதி
காவை யானே. (8)

தெண்டிரைசூழ் பூமியிலிம் மண்டபம்போ லில்லையெனச்
செகத்து வேந்தர்
கண்டுகண்டு கொண்டாடத் தண்டமிழ்தேர் புகழூரார்
கருத்துக் கொக்க
மண்டபநா யகமாக வயங்குமணி மண்டபத்தை
வளமாய்க் கண்டான்
கொண்டலெனுங் கரபாரி யெல்லார்க்கு நயினுன் பைங்
குவளை யானே. (9)

அருடருஞ்சொற் சுவைபாக மாதரித்திட் டெழுதவொரு
ஆதி. வேதப்
புருடனியற் புகழூரான் சன்னதியின் முன்னழகாய்ப்
பொலிந்து தோன்றுங்

கருடகம்ப முண்டாக்கி யொப்பமிட்டு நாட்டிவைத்தான்
கபட மாகு
மருடரும்புன் பிறப்பறக்கு மனந்தயங்கார் உறப்பூருக்
கதிபன் தானே. (10)

பெருகுநறுந் தண்டுளவ வைத்தமா நிதிக்குமனப்
ப்ரியமாய் ரண்டாந்
திருமதிளு [1]முண்டாக்கிச் சேனையர்கோன் கோயிலையுஞ்
சிறப்பாய்ச் செய்து
கருடனுக்குச் செம்பொன்மணி மண்டபத்திற் கோயிலையுங்
கண்டா ளேடித்
திருகுசினக் கடகளிற்று னெல்லார்க்கு நயினன்போர்த்
தெவ்வ ரேறே. (11)

மதுரகவி யாழ்வார்கோ யிலைத்தொடுத்து மடைப்பள்ளி
வளைக்குண் டான
முதுகனக மண்டபத்தை முகித்துலவும் வெகுசீர்த்தி
முழுதுங் கொண்டான்
சதுரவித ரணசுமுகன் காரைக்காட் டார்மரபிற்
றழைத்த மேகம்
விதுரன்மலர் மகள்கொழுநன் எல்லார்க்கு நயினன்போர்
வேந்தர் வேந்தே. (12)

நாகமடைப் பள்ளியென்ற நவின்றபுகு மூரர்... (13)

வரியரவில் நடனமிடும் வைத்தமா நிதிகோயில்
வளமை யாகப்
பெரியதிரு மதிள்முகி[வி]த் தமரர்பதி யளவினும் ப்ர
காசஞ் செய்தான்
அரியதிசை யெட்டும்நிறைந் தண்டகடா கமும்புகழே
டாடி யெங்கும்

(பிரதி.) 1. முண்டாக்கித்ததுகருட.

விரியநிழல் விரிகுடையான் மீனவர்கோன் புவிபுரக்கும்
விசைய மாலே. (14)

பேய்ச்சியா ருயிர்கவர்ந்து சகடுதைத்த புகழூரெம்
பெருமா னுக்கு
நா[ய்]ச்சியா ரிருவர்கெற்பக் கிரகமர்த்த[மண்டப] நன்
றாகச் செய்து
காச்சியார் பால்மனத்தின் படிமூலப் பிரதிட்டை
கண்டான் செங்கோ
லோச்சியார் கலியுலகு புரந்தசெக நாதனெ[ன்]ன
லார்க ளேறே. (15)

தும்புருநா ரதர்பாட வருள்புகழூர் மால்கருடத்
துசமு லாவு
கம்பமலங் காரமுறச் செப்புபொதிந் துள்ளமிருங்
கவலை தீர்ந்தாள்
நம்பரதி சன்னதிரண் டீரங்குடியார் செய்ததவ
நலத்தால் மேவும்
அம்பனைய கருநெடுங்க ணழகுதிகழ் கருநயினா
ரம்மை யாரே. (16)

[1]பஞ்சலோ கத்திலர விந்தலோ சனரையுமன்
பருக்கன் பாகும்
விஞ்சுபுகழ் நாய்ச்சியா ரிருவருற்ச வவிக்ரகமும்
விரைந்துண் டாக்கி
நெஞ்சுகளி கூர்தரப்ர திட்டைசெய்தார் வந்தடைந்து
நேசித் தோர்க்குத்
தஞ்சமென விரங்குமாழ் வார[ய்]யங் [கார்]ஞான
சமய வேந்தே. (17)

---

(பிரதி.) 1. பஞ்சபோகதிலர.

புல்லியார் தமக்கருளா வைத்தமா நிதிமகிழ்ந்து
பொருந்துங் கோளூர்
வல்லியா ரம்மன்விமா னத்தையலங் காரமுற
மகிழ்ந்து செய்தான்
நல்லிராப் பகல்முழுதும் நாவீ[ற] ருரைத்ததமிழ்
ஞானப் பாடல்
சொல்லியா தரிக்குமப்பு ஆழ்வார்பா கவதர்குலோத்
துங்கன் தானே. (18)

குடக்குக்கூன் மதிநுதலா ளாண்டிலா ளம்மனென்றுங்
குறியாய் வாழும்
வடக்குக்கோ யிற்புதுவி மானம[தி]ல் கள்[யா]வும்
வளர்க்கச் செய்தான்
முடக்குக்கூ டியமனது முரண்செலுத்துந் தெவ்வேந்தர்
மூச்சி டாம
லட[க்கி]க்கா சினிபுரக்குஞ் செகநாத மகிபனட
லரச ரேறே. (19)

வேறு

இந்நி லத்தி லெமக்கருள் வல்லியார்
சன்னி தித்திரு மண்டபந் தான்செய்தான்
பொன்னி லங்கும் புனைமுடி சூடிய
மன்னன் மன்னர் வணங்கிய வஞ்சியே. (20)

வேறு

எந்தைபுகு மூரார்கோ யிற்பிறகோர் கோயிலியல்
பாயுண் டாக்கி
அந்தமில்சிங் கப்பெருமாள் தம்மையும்ப்ர·திட்டைபண்ணி
யமைதி செய்தான்
பைந்தமிழோர் வணங்கியவொன் பதுதிருப்ப திக்குயர்ப்ர
பன்ன ரான

எந்தைவயி னவர்கோன்ரா மாநுசச்சீ யங்கார்வா
தியர்க ளேறே. (21)

தடக்கருணை பொழிபுகழு ராண்டிலா ரம்மனெழுந்
தருளுங் கோயில்
வடக்குமணி மண்டபத்தை வாரம்வைத்து நவமணியால்
மலைபோற் செய்தான்
அடக்குசினப் புலிபோல[வ]டை யலார் [தங்கள்]திறத்
தடுபோர் செய்யுங்
கடக்கரட குஞ்சரத்தான் [1]வடமலைகோன் நராதிபதி
காவை யானே. (22)

நற்பரம தேசிகனைத் தொழுமதுர கவியாழ்வார்
நாக ரீகக்
கெற்பகிர கமுமுடித்துப் புதியவர்த்த மண்டபமுங்
கிளரச் செய்தான்
சொற்பயிலு முபயவே தாந்தமெலா மறிந்துணர்ந்து
தொகுத்துப் பார்த்துச்
சிற்பரத்தி னிலையுணரு [2]மனந்தயங்கார் வயிணவர்கள்
திலகந் தானே. (23)

சோலைமலர்த் தடம்புடைசூழ் புகழூர ரகமகிழத்
தூய்தா மன்ன
சாலைமடைப் பள்ளியுநீள் குடவறையு முண்டாக்கித்
தமிழ்க்கோ ளூரிற்
பாலமதன் மேல்புறத்து நிலமும்விடு வித்துவெகு
பரிவு செய்தான்
வேலையுல கம்புகழும் வரகுணமா மங்கையில்மீ
னவர்கள் கோவே. (24)

(பிரதி.) 1. வடமலைகொழுந். 2. வேங்கடய்யங்கார் கருணை திகழுமாலை.

அல்லார்க்குந் திருமேனிப் புகுழூரர் கோபுரத்திற்
கன்பு கூர்ந்து
கல்லார்க்கும் வானமுத லாதார சிலைவரையுங்
கடிது செய்தான்
வல்லார்க்கு முலையார்மோ கனரூபன் தமிழ்ப்பாண்டி
வளநா டாளன்
எல்லார்க்கு நாயகமாம் எல்லார்க்கு நயினென்போ
ரிக்கு வேளே. (25)

மறைபரவும் புகுழூரன் மணிக்கோயிற் பெரியதிரு
மதிளில் மேவும்
குறைவரியு முடித்ததற்குக் கடைகாலும் கட்டிமணக்
கொழுந்து வீச
நறைகமழும் புதியமலர்த் திருமாலைத் தொட்டியையும்
நயமாய்ச் செய்தான்
அறைகழல்மன் னவர்பரவும் எல்லார்க்கு நயினனென்
னலர்க ளேறே. (26)

நாந்தகஞ்சங் காழிபுனை கோளூரர் கோபுரத்தை
நவமாய்ச் செய்ய
ஏந்துநெடுந் திருநிலைகால் ஒப்பமொடு நாட்டியதற்
கேற்ற தான
சாந்துவே லைக்குறையே யல்லாமற் கற்குறையின்
சரவை தீர்த்தான்
ஆய்ந்துதிரு வாய்மொழிநூ லறிந்துணருஞ் சீயப்ப
ரய்யன் தானே. (27)

எதினாலு மறியவொணு தென்றடியார் தொழும்புகுழூ
ரெங்கோ னுக்குப்
பதினாலு காற்குறட்டு மண்டபத்தை மிகுதிப்ரா
பரித்துச் செய்தான்

விதிநானு முகத்துடனே படைத்தசெக தலமுழுதும்
விரும்பிக் காத்த
வதிஞலே பரிபால மான[1]செக நாதனட
லரச ரேறே. (28)

கருத்தேரும் பிறப்பிலன்ப ரழுந்தாம லருள்புகுமூர்க்
கருணை மாமால்
திருத்தேரு ம[த்]திருத்தே ரேற்ற[மணி] மண்டபமுஞ்
சிறக்கச் செய்தான்
மருத்தேருந் தண்ணிலஞ்சி மாறர்தரும் பெருங்கருணை (29)

* * * (30)

* * * (31)

* * * (32)

நித்தமாய் விளங்குபடாச் சாதனஞ்சாத் திப்புகழை
நிறுத்திக் கொண்டான்
தத்துவாம் பரிநகுலன் வடமலையூ பதியுலகந்
தாங்கு மாலே. (33)

செங்கமல மலர்வாவித் திருக்கோளூர் வந்தருள்தே
வேசன் செங்கை
அங்கிதிருக் கட்டுவடஞ் செழுங்கனகத் தால்முடிப்பித்
தணிந்தான் செங்கோல்
மங்கையர்கள் மடலேற வாசியே றும்பரவுட
மான தீரன்
கங்கைகுலம் வளர்[பெருமான்] வடமலை நராதிபதி
காவை யானே. (34)

(பிரதி.) 1. சொக்கலிங்கனட.

கருமுடிக்கும் பிறப்பறுத்தோர் கண்டுதொழுந் திருக்கோளூர்க்
கருணை மாமால்
திருமுடிக்கோ ரலங்கார மானநெடுங் கனகாபி
ஷேகஞ் செய்தான்
தருமுடிக்குங் கரதலத்தான் வணங்காரை மதமடக்குஞ்
சதுர தீரன்
மருமுடிக்குங் குவளையந்தார் வடமலைபூ பாலனடல்
மன்ன ரேறே. (35)

நத்துலவுந் தடம்புடைசூழ் புகுமூரான் சன்னதியில்
நூதனீகக்
குத்துவிளக் குந்தராப் பஞ்சபாத் திரமுங்கோ
ளூரில் மாயன்
சித்தம்வர முடித்தமணி மண்டபத்து மணியுநன்றாய்த்
தெரிந்து செய்தான்
முத்தநகை யார்மதவே ளெல்லார்க்கு நயினான்முச்
செகத்து வேந்தே. (36)

சுற்றுமணிச் சதங்கைதண்டை கரண்டாக மமுதுசெய்யுஞ்
சுருளுக் கேற்ற
வெற்றிலைபின் மடலிதெலாம் வெள்ளியினு லுண்டாக்கி
மேன்மை செய்தான்
பற்றலர்க ளடுகளத்திற் பயந்தோடத் துரங்கம்விடும்
பாக்ய சாலி
கற்றவர்கள் கொண்டாடு மசைந்தாடு பெருமாள்வங்
காரை யானே. (37)

கொள்ளைப்பால் தயிர்கவரும் புகுமூரா ருவந்ததிருக்
கோலஞ் சாத்த
வெள்ளிப்பா டக்ஞ்சிபா தந்தனக்கேற் றதுவாக்
வியப்பாய்ச் செய்தான்

உள்ளத்தே கபடறியா மயிலாழ்வார் திருமகள்பெற்
றுவந்த மாது
வள்ளத்தா மரைத்தடஞ்சூழ் திருக்கோளூர் சிறக்கவந்த
வல்லி யாரே. (38)

உக்ரநெடுங் கதிராழி வைத்தமா நிதிமாய
னுவந்து சாத்தச்
சக்ரமுகப் பதக்கமொன்று கொடுத்திறைஞ்சி யுளமிகுசந்
தோஷ மானன்
அக்ரம விரோதிகளை யடக்கியா சாருமன
.பாய தீரன்
விக்ரம விவேகிபுகழ் திருமலைநந் திரன்புவியில்
வீர வேளே. (39)

மண்ணும்விண்ணு முண்டளந்த வைத்தமா நிதிபதத்தில்
வாஞ்சை யாகி
எண்ணுமணி யொளிதிகழுஞ் செங்கழுநீர் மாலைமிக
வியல்பாஞ் செம்பொற்
கிண்ணிநுதற் சுட்டிபட்டம் பிறைத்திருவெ லாமுடித்துக்
கீர்த்தி யானன்
அண்ணலறுப் புற்றாரி லனந்தயங்கார் சீயப்ப
ரய்யன் தானே. (40)

கொஞ்சமாய்ச் செய்யவொண்ணு தென்றுவெள்ளிக் கனகக்
குறைவில் லாமல் [குடடுக்
பஞ்சபாத் திரமுமெழிற் கலசப்பா னையுமுடித்துப்
பழவே தாந்தத்
தஞ்சமாய்ப் பொலிந்தபுகழ் வைத்தமா நிதிகருணைச்
சலதி தோய்ந்தான்
கஞ்சநாண் மலர்ச்செழுந்தார் வணைந்தருள்சீ யப்பன்முது
கலைவ லோனே. (41)

தொண்டர்தமக் கருள்புரியும் புகழூரர் கைங்கரியந்
தொடுத்துக் கோலக்
கொண்டைமுத லானவட தேசமெலா நெடுநாளாய்க்
குறித்துக் காத்து
விண்டசுட ரிலகுநவ ரத்னமணிச் சிவிகைகொண்டு
மீண்டான் மாறன்
தண்டமிழ்தே ரனந்தயங்கார் தந்தருள்சீ யப்பணிசை
தழைக்கும் வேந்தே. (42)

எழுதுபச்சை மலையான வைத்தமா நிதிமால்வீற்
றிருக்கும் பைம்பொன்
தழுவுகட்டி லுண்டாக்கி வேடுபறித் திருமுகத்திற்
கனபேர் பெற்றான்
தொழுதுமுத்தி பெறும்வழியின் சூழ்ச்சியறிந் தைம்புலத்திற்
சுழலும் பேத
முழுதுமொத்து நடக்கும்வகை செலுத்துபுகழ் ரோமசமா
முனிவன் தானே. (43)

வைத்தமா நிதிதிருத்தேர் [வளர்]சிலைத் தளபாட
மணிகள் பூட்டித்
தைத்ததையற் பணியாகத் தலையலங்கா ரம்வரைக்கும்
தயவாய்ச் செய்தான்
மித்ரர்பரி பாலனுயர் சத்ருபயங் கரன்கோல
விந்தை மார்பன்
நித்தியகல் யாணகுணன் வடமலைபூ பதிவணங்கா
நிருப ரேறே. (44)

நன்னயஞ்சே ரும்ராச ராசநல்லூ ருட்கிடையில்
நாலு மாவும்
சன்னதிபண் ணையையும் விடுவித்தே தனதடியார்
தம்மைக் காத்துப்

பன்னகத்திற் றுயிலமரும் வைத்தமா நிதிபாதம்
பணிந்தான் தேச
மன்னர்மன்னர் மெச்சுதுரை சந்த்ரகுலோத் துங்கனிகல்
வழுதி தானே. (45)

அருவாராய்ந் தறிந்தாலு மறியவொண்ணுப் புகழூர
ரன்பு கூருந்
திருவாரா தனப்படிக்குத் தென்கோல நிலமுழுதுஞ்
சேர்த்தா னென்மேற்
பொருவாரா ரென்றுடைவா ளுறைகழிக்குஞ் சினமடங்கற்
பூச லாளி
மருவார்கா வித்தொடையான் வெற்றிவே லுடையான்பூ
வலய வேந்தே. (46)

பொறியரவில் நடனமிடு வைத்தமா நிதிமாயன்
பூசைக் கேற்ற
நெறிதருதே மாங்குளத்தில் நேரொருமா முக்காணி
நிலத்தைச் சேர்த்தான்
பிறிவரிய தடந்திரையின் பெருக்கெடுக்கும் வைகைநதிப்
பெருமா னூரும்
அறிவரிய புகழாளன் முதுதமிழ்ப்பாண் டியமரபுக்
கதிபன் தானே. (47)

உளங்கமழும் பெருங்கருணை யுவட்டெறியு மனைத்துலக
முடையா ருக்கு
வளங்கமழும் பழையவல்லைக் குளத்தைவிடு வித்துமன
மயக்கந் தீர்ந்தான்
குளங்கரையி லிளவாளை குதித்துவெடி தாவிவருங்
குளிர்நீர் நாடன்
களங்கமிலா மதிவதனன் மீனவர்கோன் புதுவேப்பங்
கண்ணி யானே. (48)

எம்மையடி மைக்கொளுந்தென் புகுழூரார் திருவுளத்துக்
கேற்ற தாக
வெம்மையகல் புதுக்குறிச்சி நிலத்தைவிடு விச்சுவெகு
மேன்மை செய்தான்
செம்மைபெறப் பொலிதருமொன் பதுதிருப்ப திக்குவளஞ்
சிறக்கச் செய்தோன்
மும்மலமு மடக்கிநிலை நிறுத்தும்ரா மாநுசமா
முனிவன் தானே. (49)

வரைமணக்கும் புயசயிலன் வாளுத ராயன்மன
மகிழச் சொல்லித்
தரைமணக்குந் திருவயிற்றூர் புகுழூரார்க் கிறங்குபடித்
தாங்க ளேறத்
திரைமணக்குந் தடம்புடைசூழ் சிறுமூளிக் கரைநிலத்தைச்
சேர்த்தாள் மோலி [மாம்
நறைமணக்குந் திசைமுகத்தோன் படைத்தபெண்கள் நாயக
நங்கை தானே. (50)

தவளநகை மலர்மாது விரும்பும்வைத்த மாநிதிக்குத்
தயவு கூர்ந்து
குவளைமலர் வாவிவரால் குதிபாய்ந்து வளராப்பை[ங்]
குளத்தைச் சேர்த்தான்
பவளவிதழ்க் கலகவிழிப் பாவையர்சம் பாஷணைசம்
பன்னன் கீர்த்திக்
கவளமத களிற்றுவச வப்பனா பூபதிதென்
கச்சி யானே. (51)

மலைநாட்டு வஞ்சிநகர்த் திருவடிமன் னவன்மனது
மகிழப் பேசி
நிலைநாட்டு புகழ்வேளூர்ப் பற்றிற்பதி னாறுமா
நிலத்தைச் சேர்த்தாள்

அலைநாட்டுந் தடங்கடலி லறிதுயிலும் புகழூரர்க்
கன்பி னாலே
சிலைநாட்டு மிந்துநுதல் திகழ்நயினான் மாதர்குல
திலகந் தானே. (52)

பேட்டைத்தேடிச் சேவலனம் விளையாடும் புகழூரர்
பெருமா னுக்கே
யாட்டைத்திரு நாளான சித்திரையில் திருநாளுண்
டாக்கி னன்போர்க்
கோட்டைத்தரி யலர்பதண மழகழிய விருகடையும்
குழைத்து வாங்கும்
வேட்டத்தடஞ் சிலையபியன் வழுதிகுலோத் தமன்பொதிய
வெற்பி னானே. (53)

உருப்பவித்திர மாகவெனை யாண்டவைத்த மாநிதியுள்
ளுவந்து மேவும்
திருப்பவித்திரத் திருநாளா வணியேகா தசியி[த]னிற்
சிறப்பாய்க் கண்டான்
பொருப்பையொத்த களபமுலைப் பூவையர்தம் மனுபவசம்
போகன் வேழ
மருப்படர்த்த வழுதியர்கோன் வரியளிசூழ் நிம்பமண
மாலை யானே. (54)

பாயிரஞ்சேர் தமிழ்க்கோனூர் வைத்தமா நிதிக்குமகிழ்ப்
ப்ருதி நூல்நா
லாயிரமு முரைசெய்திரு வத்யயனத் திருநாளுண்
டாக்கி னானே
தாயிரங்கு வதுபோலத் தன்னைநம்பு சனங்கள்வருந்
தாத வண்ணம்
மாயிருஞா லங்காக்கு மீனவுன்தென் வரகுணமா
மங்கை யானே. (55)

சித்திரையிற் சித்திரைநாள் திருவவதா ரஞ்செய்யுந்
திருக்கோ ளூரர்க்
கெத்திறமும் புகழ்வளரச் சித்திரையிற் றிருநாளை
யியல்பாக் கண்டான்
வித்துவசெனப் பிரீதிசெய்யும் விதரணிக[ன்] சங்கிராம
வீமன் அன்ன
சத்திரநயச் சோமன்வட மலைமகீ பதியுலகந்
தாங்கு மாலே. (56)

இருப்பதுநா ளடியரிடத் தென்றவைத்த மாநிதிதம்
மிடத்தே யுண்டாம்
விருப்பதினா லையானித் திருநாளுஞ் சிறப்பும்விடு
வித்தான் ஞான
உருப்பதியுந் தமிழ்த்திருவாய் மொழிநூல்கை வந்தவள்ள
லொன்ப தான
திருப்பதிரா மாநுசச்சீ யங்காரைம் புலன்மயக்கந்
தீர்ந்த கோவே. (57)

கற்பகா லம்வரைக்கும் புகுமூரர் கொண்டருளக்
காத லாகி
யற்பசிமாத் தையிலூஞ்சல் திருநாளு முண்டாக்கி
யடர்ந்த நீல
வெற்பனைய கோளூரர் பரமபத வாசலில்
விழாவும் கண்டான்
மற்புயன்தென் காவைநகர் வடமலைபூ பதிசிலைக்கை
மார வேளே. (58)

கூடிவா னவரிறைஞ்சுங் கோதைசூ டிக்கொடுத்த
கொடி புலாவத்
தேடியா தரஞ்செய்தைமா தமுதயாதி திருப்பாவைத்
திருவி ழாவும்

ஆடிமா தம்பெரிய திருப்பூரத் திருநாளும்
அ[தை]டவாய்ச் செய்தான்
நாடியா தரித்தபுகழ் வடமலையூ பதிகாவை
நகரி னேனே. (59)

அசைந்தநீள் கொடியுடையான் வஞ்சிநக ராதிபனுக்
கழகாய்ச் சொல்லி
இசைந்தகா வளம்பழகு புகுமூரார்க் கினிவேணு
மென்றே கோல
வசந்தகா லக்கோடைத் திருநாள்கட் டளைசெய்தாள்
வாரு லாவப்
பசந்தபூண் முலைநயினா ருயர்ந்தரண்டாங் குடியார்தம்
பாவை தானே. (60)

பெருவளஞ்செய் புகுமூரான் விளங்குதிரு நாள்முடிந்த
பின்னே மேவத்
திருவனந்த னுண்டாக்கி யதற்கேற்ற சிறப்புமிகச்
செய்தான் வாச
மருவிருந்த தண்ணிலஞ்சி மாறர்திரு வாய்மொழிநூல்
வழுத்து நேயன்
தருவெனுங்கை யனபாயன் அனந்தய்யங்கா ருறுப்புற்றார்
தழைத்த வேந்தே. (61)

சேணுநிறைப் புகுமூரா மாமாயன் எழுந்தருளும்
திருநாள் தோறும்
வேணுமெனப் பெருகுவிடா யாற்றிநெடுஞ் சிறப்புவிடு
வித்தா னேடி
காணுமிள மந்தியினம் நடுங்கவரால் தாவுகச்சி
நாட்டு வேந்தன்
பூணுலவு மணிமார்பன் செகநாதன் புவிவலயம்
புரக்கு மாலே. (62)

மருவளருந் தண்டுழாய் வைத்தமா நிதிகோயில்
வடகீழ் மூலைத்
திருமதிளின் மிசைபெரிய திருவடியை யன்பொடு ப்ர
திட்டை செய்தான்
அருவிமத களிற்றுதைய ருட்கொண்டான் பாலனுவந்
தனைபோற் க[ா]க்குந்
தருங்குணவ ரன்மாவை [ப் பெரும்பதியில்] வருகுமார
சாமி வேளே. (63)

வேறு

அண்டர் நாயகன் பொன்னுல காளிக்குப்
பண்டி லாததோர் பட்டொன்று நல்கினன்
தண்ட மிழ்ச்சொக்க நாதன் சந்தோஷமாங்
கொண்டல் மாவைக் குமார சுவாமியே. (64)

வேறு

நிறைவாழி திருக்கோளூர் வைத்தமா நிதிவாழி
நீதி வாழி
பொறைவாழி மகிழ்மாறன் பொன்னடிகள் வாழியிந்தப்
பூமி வாழி
முறைவாழி மதுரகவி வாழிதலத் தார்கள்கிளை
முழுதும் வாழி
மறைவாழி வாழிபுகு மூரன்திருப்பணிசெய்வோர்
வாழி தானே. (65)

திருக்கோளூர் வைத்தமாநிதி திருப்பணிமாலை

முற்றும்.

The B. N. Press, Educational Printers, Madras.

ஸ்ரீ:

# திருஞானமுத்திரைப் பிரசுராலயத்தின்

## வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ... | 0 | 4 |
| 2. | ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை ... | 0 | 1 |
| 3. | ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம்: தேவராஜ பாரதிகள் இயற்றிய காவியம் ... | 2 | 0 |
| 4. | ஸ்ரீ ராமாயணம் (பாசுரப்படி): பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்தது ... | இனாம் | |
| 5. | தொலைவில்லிமங்கலம் தேவர்பிரான் பேரில் சந்திரகலாமாலை ... | 0 | 1 |
| 6. | ஸ்ரீ நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் ... | 0 | 4 |
| 7. | திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம் ... | 0 | 4 |
| 8. | குருகூர்ப்பள்ளு (ஸ்ரீமான் S. வையாபுரிப் பிள்ளை அவர்களின் முன்னுரையுடன் கூடியது) ... | 0 | 6 |
| 9. | ஆழ்வார்கள் வைபவங்கள்: முதலாழ்வார்கள், பெரியாழ்வார் (வடிவழகிய நம்பிதாஸர் இயற்றிய குருபரம்பரையைச் சார்ந்தது.) ... | 0 | 6 |
| 10. | திருப்பணிமாலைகள் (தென் திருப்பேரை: திருக்கோளூர்) | 0 | 4 |

கிடைக்குமிடம்:—

**பெரியன்-வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்**

திருஞான முத்திரைப் பிரசுராலயம்

ஆழ்வார்திருநகரி.

திருஞான முத்திரைக்கோவை: எண். 13.

தெய்வச்சிலையார்

# விறலிவிடு தூது

சென்னை ஸர்வகலாசாலை
தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்
**S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L., அவர்களாலும்**
ஆழ்வார்குறிச்சி
**M. P. S. துரைசாமி முதலியார் அவர்களாலும்**
பரிசோதிக்கப் பெற்றது.

பேரியன். வே. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்
பிரசுரகர்த்தர்

திருஞான முத்திரைக்கோவை :. எண். 14.

ஸ்ரீ :

# குமாரசுவாமி யவதானி

இயற்றிய

# தெய்வச்சிலையார் விறலிவிடு தூது

இது

சென்னை சர்வகலாசாலை தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர்

S. வையாபுரிப் பிள்ளையாலும்

ஆழ்வார்குறிச்சி

மேலப்பண்ணை M.P.S. துரைசாமி முதலியாராலும்

பரிசோதிக்கப்பட்டது.

காபிரைட்] 1936 [விலை அணா 6.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS

# முன்னுரை.

நமது நாட்டிலே தமிழையும், தமிழ்ப் புலவரையும், தமிழ்க் கலையையும் போற்றி வந்த பெருமக்கள் எண்ணிறந்தோராவர். அவருள் மிகச் சிலரே சிலாசாஸன வாயிலாகவும் பழந் தமிழ் நூல்கள் வாயிலாகவும் கர்ண பரம்பரை வாயிலாகவும் நமக்குப் புலனாகக்கூடும். சிலாசாஸனங்களிலும் பழந் தமிழ் நூல்களிலும் ஒரு சிலவே வெளிவந்துள்ளனவாதலின், இவற்றின் வாயிலாக உணரலாகும் பெரியோர்களுள் மிகமிகச் சிலரையே நாம் ஒருவாறு அறிந்திருக்கின்றோம். அச் சுருங்கிய கூட்டத்தினும் உட்படாத தமிழ்ப் பெருமக்களுள் ஒருவரைக் குறித்தே இவ் விறவிவிடு தூது எழுதப்பெற்றதாகும்.

இத் தமிழ்ப் பெருமகனைக் குறித்து நாம் பெயர் மாத்திரையேனும் கேள்வியுற்றதில்லை யென்பது உண்மை. ஆனால் அவரது ஆதரவிலே தோன்றிய சிற்ப வேலையோ, நுண்கலை யறிஞர்க்கெல்லாம் இன்னும் பெருவிருந்தாயிருந்து வருகின்றது. திருநெல்வேலிக்குக் கிழக்கே 4 மைல் தூரத்திலுள்ள கிருஷ்ணபுரம் என்னும் சிறு கிராமத்திலே இச் சிற்பவேலை திகழ்கின்றது. நமது நாட்டுக்கு வரும் யாத்திரிகரிற் பெரும்பாலார் இச் சிறு கிராமத்திற்குச் சென்று ஆண்டுள்ள சிற்ப நலனைக்கண்டு வியந்து புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர்.

கிருஷ்ணபுரம் என்று வழங்கும் இச் சிற்றூர் இப்பொழுதுள்ள நிலையிலன்றி முற்காலத்தே பெரியதொரு நகரமாயிருந்தது. பாண்டிய நாட்டிலே, கி. பி. 1564 முதல்

1572 வரை, நாகம நாயக்கர் பௌத்திரனும் விசுவநாத நாயக்கர் புத்திரனும் ஆகிய குமார கிருஷ்ணப்ப நாயக்க ரென்பவர் அரசு புரிந்து வந்தனர். இவரது பெயராலேயே 'கிருஷ்ணபுரம்' நிருமிக்கப்பட்டதெனச் சரித்திரங்கூறும். கி. பி. 1565-ல் இவ்வூர்க்கோயிலிற் பொறிக்கப்பட்ட சிலா சாஸனமொன்று இங்கே கோயில்கொண்டுள்ள திருவேங்கட நாத சுவாமிக்கு ஆறு கிராமங்களும் ஆளிகுடியிற் சில நிலங் களும் தானஞ் செய்யப்பெற்றனவென்று தெரிவிக்கின்றது. கி. பி. 1567ல், திருமலைராயர் மூலமாகக் கிருஷ்ணப்ப நாயக் கர் செய்துகொண்ட வேண்டுகோளுக்கிணங்கி,வீரஸ்ரீ சதாசிவ தேவமகாராயர் பாண்டிய மண்டலத்திற் கீழ் வேம்பு நாட் டில் தாம்ரபர்ணிநதி தீரத்திலுள்ள ஸ்ரீவல்ல மங்கலமென் னும் சாவடியைச் சார்ந்ததும் கிருஷ்ணபுரம் என்னும் பெய ரால் பிரசித்திபெற்று விளங்கியதுமான கிராமத்தை அவ்வூர் வேங்கடேசருக்குச் சர்வமானியமாகக் கொடுத்ததாகக் கிருஷ்ணபுரத்துத் தாமிர சாஸனம்[1] உணர்த்துகின்றது. இவ் வூர்க்கண்ணேயுள்ள வேங்கடேசர் கோயிலையும் பிரணவாகார மா யமைந்த மதிலையும், கோபுரத்தையும், அழகுற்று விளங் கும் ரங்கமண்டபத்தையும், மந்தரமலைபோன்ற தேரொன் றினையும் அமைத்த பெருமை கிருஷ்ணப்ப நாயக்கருக்கே இச்சாஸனம் கொடுக்கின்றது.

ஆனால், கன்னபரம்பரையாகக் கேட்கப்படும் செய்தி சாஸனத்தின் கூற்றிற்கு முற்றுமாறாகவுள்ளது. பிஷப் கால்டு வெல் துரைமகனார் தமது திருநெல்வேலிச் சரிதத்திற் (பக். 59) பின்வருமாறு கூறுகின்றார்:

---

[1] Epigraphia Indica, IX, pp 328-42 = அனுபந்தம் 1.

"நாட்டிலே அமைதி குடிகொள்ளும்படி அரியநாயக முதலியார் செய்ததன் பிற்பாடு, குமார கிருஷ்ணப்பன் என்ற நாயக்கவரசர் பாளையங்கோட்டைக்குக் கிழக்கே புதிய தொரு நகரை நிர்மாணஞ் செய்வதைத் தமது தொழிலாக மேற்கொண்டனர். இந்நகருக்குத் தமது பெயராலேயே கிருஷ்ணபுரமெனப் பெயரிட்டனர். இச்செய்தி அவ்வூரிற் செய்த விசாரணையால் ஆதாரமற்றதாகத் தோன்றுகின்றது. மயிலேறும்பெருமாள் முதலியார் என்பவரால் இக்கிருஷ்ண புரம் நிருமிக்கப்பட்டதெனத் தெரிகின்றது. இவர் முதலில் சைவசமயத்தவரா யிருந்து பின்னர் திருமாலடியவராகிப் பின்பு பக்தி முதிர்ச்சியால் 'தாதர்' என்று பெயர்பூண்டு விளங்கினர்"

இக்கன்னபரம்பரைச்செய்தி சுமார் 50 ஆண்டுகட்கு முன் எழுதப்பெற்றது. இதற்கு ஓர் ஆதாரமாக வுள்ளது இப்போது பதிப்பிக்கப்பெறும் 'தெய்வச்சிலையார் விறலிவிடு தூது.'

தெய்வச் சிலையார், அரியநாயக முதலியாரின் அருமை மருகனாய் விளங்கியவர். இவர் கூவம் - மயிலேறும் பெரு மாள் முதலியார் வமிசத்தில் தோன்றியவரென்பதும் இம் மயிலேறும்பெருமாள் முதலியார் கிருஷ்ணபுரத்தை நிரு மித்து, திருவேங்கடநாதருக்குக் கோயிலொன்று எடுப் பித்து, சுற்றுமதிளும் நிலைக்கோபுரமும் வகுத்து, தேரொன் றும் இயற்றுவித்தனரென்பது பின்வரும் அடிகளால் உணர லாகும்:—

'ஆதிவட வேங்கடவ ராட்கொண் டனுக்கிரிக்க
நீதிகொள்கிட் ணபுரத்தை நிர்மித்து—வீதிகண்டு

வானமுதற் றூவிவரை வாழ்வேங் கடமாயர்க்
கானதொரு கோயி லமைத்தருளி—மேனிமிர்ந்த
சுற்று மதிளுந் தொகுத்தநிலைக் கோபுரமும்
மற்றுமுள்ள தெல்லாம் வகுத்ததற்பின்—கொற்றத்
திருவளரத் தேருஞ் சிறப்புடனுண் டாக்கிப்
பெருமையாய்க் கீர்த்திமுன்பு பெற்ற—முருகுயிர்க்கு
மன்றலந்தார்க் கூவ மயிலேறி வம்சமென்னுங்
குன்றுதனி லிட்ட குலதீபம்' (28-33)

இங்கே மயிலேறி யென்றது கன்னபரம்பரையிற் கேட்கப்படும் மயிலேறும்பெருமாள் முதலியாரே யாதல்வேண்டும். தெய்வச்சிலை முதலியார் அரியநாயக முதலியாரது மருகரென்பது 'முதலியார் மந்திரி யதிகாரம் பார்த்தல்' என்று தலைப்புக்கொண்ட ஓரேட்டிற் காணப்படும் வாக்கியங்களும் வலியுறுத்தும். அவை வருமாறு:

'அரியநாயக முதலியார் கர்த்தா, நபாபு, கர்த்தாக்கள் இந்த மூன்று ராசாக்களுக்கு மேலான மந்திரியாய்...பொன் கற்பமரியாதையாக வாங்கிக்கொண்டு சோளவந்தானி லிருக்கும்போது, அரியநாயகபுரமுங் குடியேற்றிக் கோவில் திருப்பணிகள் செய்தார். ஷை முதலியார் தமையனார் மகன் வீரராகவ முதலியார்....................அவர் தம்பி வேலு முதலியார்....................அவர் மச்சினன் தெய்வச்சிலை முதலியார் செய்துங்க நல்லூருக்கு மேற்கிலிருக்கிற கிட்டிணபுரத்தில் வெகு திரவியஞ் செலவுசெய்து கிட்டிணன் கோவில் உண்டுபண்ணியிருக்கிறார்.'

இறுதி வாக்கியத்தால் உணர்த்தப்படுஞ் செய்தி திருவேங்கடநாதர் கோவிலுக்குத் தெய்வச்சிலையார் செய்த

திருப்பணிகளைக் குறித்ததாகல் வேண்டும். இத் திருப்பணிகள்,

'வெற்பனைய மங்கையில்வாழ் வேங்கடமா யர்க்குவெகு
கற்பணிகள் பொற்பணிகள் கட்டளைகள்—பற்பலவுஞ்
செய்துபுதுத் தேர்வகுத்துத் தெப்பக் குளங்கண்டு
மைதவழ்பூஞ் சோலைசுற்றும் வைப்பித்து—மெய்தந்த
வைகுண்ட லோகமிந்த மங்கைநக ரென்னவளஞ்
செய்கின்ற கீர்த்திச் செயவிசையன்'—(38-40)

என்று இவ் விறலிவிடுதூதிற் கூறப்படுகின்றன. இங்கே 'கற்பணிகள்' என்றது கோயிலுக்கு முன்பாக இப்போது அழிவுற்றுக் காணப்படும் 'ரங்கமண்டபம்' முதலியவற்றைக் குறித்தனவாகலாம்.

மேற் கூறியவற்றால், கிருஷ்ணபுரத்தை நிருமித்துக் கோயில் கண்டவர் மயிலேறும்பெருமாள் முதலியார் என்பதும், பின்னர் கற்பணிகளும், பொற்பணிகளும், புதுத் தேரும், தெப்பக்குளமும் செய்து முடித்தவர், அம் முதலியாரது வழித்தோன்றலாகிய தெய்வச்சிலையார் என்பதும் விளங்கும்.

உண்மை யிவ்வாறிருக்க, கிருஷ்ணப்ப நாயக்கர் தம் பெயரால் நகரமைத்தனரெனவும் கோயிலியற்றின ரெனவும் சாஸனம் கூறுதற்குக் காரணம் விளங்கவில்லை. ஆனால், தெய்வச்சிலையார் தமது அரசரும், தமது குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புடையருமாகிய கிருஷ்ணப்ப நாயக்கரது அநுமதி பெற்றுத் தாம் கருதிய திருப்பணிகளைச் செய்திருக்கலாம். இக்காரணம்பற்றிச் சாஸனம் கூறுவனவற்றை ஒருவாறு அமைத்துக்கொள்ளலாம்.

தெய்வச்சிலையார் காலம் 16-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியாதல் வேண்டும். எனவே இவ் விறலிவிடு தூது இயற்றப் பெற்ற காலமும் அதுவே யாதல் கூறவேண்டா. இந்நூலை இயற்றியவர் குமாரசுவாமி யவதானி யென்பவரென 597-ம் அடிகளியினால் ஊகித்தல் தகும்.

பாட்டுடைத் தலைவரது வமிசாவளி தனியே காட்டப் பட்டுளது.

இந்நூலின் ஏட்டுப் பிரதியொன்று சென்னை அரசாங்கத்துத் தொன்னூல்-நிலயத்திலுள்ளது. அச்சியற்றி முடியுந் தருணத்தில், திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயரவர்களிடமிருந்து இந்நூற் பிரதியொன்று கிடைத்தது. இப்பிரதியாற் பெற்ற பாடபேதங்கள் இப்பதிப்பில் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு ஏட்டுப் பிரதிகளினும் 'தெய்வச்சிலைத் தூதர் பேரில் விறலிவிடு தூது' என்ற தலைப்புக் காணப்படுகின்றது. 'தூதர்' என்று வழங்கியது கொண்டு கால்டுவெல் கூறிய செய்திக்குத் தக்க ஆதாரம் உண்டெனக் கொள்ளலாம்.

இந்நூலைத் தங்கள் திருஞான முத்திரைக்கோவையிலொன்றாகச் சேர்த்துப் பதிப்பித்துதவிய நண்பர் ஆழ்வார் திருநகரி திரு. பெரியன் ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களாவர். இவர்களுக்கும், ஏட்டுப் பிரதியை அன்புடன் கொடுத்துதவிய திரு. அம்பலவாணக் கவிராயரவர்கட்கும், வடமொழி அனுபந்தத்தைச் சரிபார்த்துதவிய டாக்டர் டி. ஆர். சிந்தாமணி, M.A., Ph. D அவர்களுக்கும், எங்கள் மனப் பூர்வமான நன்றி உரித்தாகின்றது.

14-6-36. M. P. S. துரைசாமி முதலியார்.

# பொருளடக்கம்.


1—17. பாட்டுடைத் தலைவன சிறப்பு.
18—28. அரியநயினுன் மருகன்.
29—33. கிருஷ்ணபுரத்துக்கோயில் நிர்மாணம.
34—37. தருமச் செயல்கள்.
38—40. மஙகையில்வாழ் வேஙகடமாயற்குத்திருப்பணி.
41—42. கோயிற் கைங்கரிய முதலியன.
43—58. தசாங்கச் சிறப்பு.
59. ஆசாரிய பக்தி.
60—70. குடும்ப விவரம்.
71—76. தெய்வச்சிலைப்பெருமாள் என்ற நாமச்சிறப்பு.
77—83. உத்யோகச்சிறப்பு.
84—88. தானச் சிறப்பு.
89—91. தெய்வசசிலை சட்டமிடும் நாடு.
92—139. நடலிங்கபட்டன் பூருவசரித்திரம்—விறலியைக் காணும் வரை.
140-144. விறலியிடம் தன் செய்தியைக் கூறுதல்.
145-159. தலவாசம.
160-168. சங்கரநயினர் கோயிலிற் சென்று தரிசனம் செய்தல்.
168-184. தாசியழகில் ஈடுபடுதல்.
185-201. அதிரூப ரத்தினத்தின் வீடு செல்லுதல்.
202-218. தாய்க்கிழவி அனுராகவல்லியின் உபசாரம்.
219-221. தாசி ஸ்நானஞ் செய்து தயாராதல்.
222-225. பள்ளியறை வருணனை.
226-228. தாசி வருகை.
229-238. தாய்க்கிழவியின் வாழ்த்து.
239-271. கலவிவருணனை.
272-273. சன்மானம்.
274-280. பட்டன் ஸ்நானஞ்செய்து உண்ணுதல்.

281-285. திருவிழாக் காலத்தில் வீதியில் தாசி பட்டனைக் கண் சாடை செய்து வசீகரித்தல்.

286-306. பெண்டாக ஏற்பாடு செய்து ஒழுகுதல்.

307-310. கோதண்டன் நட்பு.

311-321. கோதண்டன் மோகவல்லியிடம் தான்பெற்ற அனுபவத்தைக் கூறல்.

322-362. அதிரூபரத்தினத்தைப்பெற்று வளர்த்துத் தாசித் தொழில் கற்பித்தல்.

363-373. அதிரூபரத்தினத்தின் தாசித்திறம்.

374-378. கோதண்டன் புத்தி கூறுதலும் அது வியர்த்தமாதலும்.

379-401. பணம் பிடுங்கியது.

402-417. மருந்தீடு.

418-421. அருவருப்புச் செயல்.

422-444. ஸ்ரீவில்லிப்புத்தூர்த் திருவிழாவுக்கு அழைத்துச்சென்று பணம்பறித்தல்.

445-450. கணக்குப் பார்த்தல்.

451-458. நகைகளை ஈடு வைத்துச் செலவு செய்தல்.

454-483. பணமில்லையென்பது தெரிந்து வெறுப்புக்காட்டல்; கலகம்.

484-516. நடுக்கேட்டல்.

517-526. சந்தனக்காப்பாயி அன்பு; கோதண்டனும் பட்டனும் ஊர்க்குத் திரும்புதல்.

527-536. வியர்த்தச் செலவுக் கிரங்கல்.

537-541. நெல்லை வந்து சேறல்.

542-559. கிட்ணுபுரம் வந்து சேருதல்; திருவிழாச் சேவித்தல்; விடாயாற்று மண்டபத்தில் வேங்கடவர் வீற்றிருத்தல்.

560-587. தெய்வச்சிலைப் பெருமாள் வந்து சேவித்தல்.

588-600. தெய்வச்சிலை தன் திருமாளிகைக்குத் திரும்பிக் கொலுவிருத்தலும் வரிசை செய்தலும்.

601-612. நடலிங்கனும் கோதண்டனும் தெய்வச்சிலையின் முன் சென்று பரிசுபெற்று வழிக்கொள்ளுதல். ஊர்வந்து சேருதல்.

613-618. விறலியைத் தூதுவிடல்.

619-625. தூது பயனெய்திச் சமாதானமுற்று நடலிங்க பட்டனும் அவன் மனைவியும் வாழ்தல்.

# தெய்வச்சிலையார் வமிசாவளி



ஸ்ரீ:

தெய்வச்சிலையார்

# விறலிவிடு தூது

## காப்பு

தென்னவனூ டாளுமங்கைத் தெய்வச் சிலைமீது
சொன்ன விறலிவிடு தூதுக்கு—முன்னிற்பன்
சிந்தைமகிழ் மாறன்மேற் செந்தமிழ்வே தம்பாடு
மெந்தைமகிழ் மாற னிசைந்து.

## நூல்

1. பார்கொண்ட திண்புயத்துப் பச்சைமா லுந்தியினில்
வேர்கொண்ட செங்கமல மென்பொகுட்டில்—நேர்கொண்
2. [1]டுதித்துப் பிரமனொருவ னிருந்து
விதித்துலகெல் லாம்படைக்கு மேனாட்—கதித்ததொரு
3. கற்பகத ருப்படைத்துக் காமதே னுப்படைத்துப்
பற்பநிதி சங்கநிதி யைப்படைத்துப்—பொற்புடைய
4. சிந்தா மணிபடைத்துச் செங்கை பழகியபின்
பிந்தாத வண்மைப் பெருங்கொடையா—லெந்தை
5. யிவன்புரப்பன் வையகத்தை யென்று கருதி
யவன்படைக்க வந்துதித்த வண்ணல்—[2]நிவந்ததொரு
6. பொன்மேரு வுக்குப் புருஷமக மேருவாய்
நன்மேதி னிக்கு [3]ணடுநின்றான்—தொன்மைத்
7. திருமாது வாசல் திறக்கு மொருபோ
தொருபோ தடைக்குமது வொப்போ—இருபோது

(பி - ம்.) 1. டுதித்த. 2. நிவந்துற்ற. 3. நடுநின்றான்.

8. மந்தணர்க்குஞ் சைவர்க்கு மாதுலர்க்குந் தன்னைநம்பி
வந்தவர்க்குஞ் செந்தமிழ்ப்பா வாணர்க்குஞ்—சிந்தை

9. சடையாது நல்குந் தயவினு லென்று
மடையாத வாச லடையன்—சுடர்மணிப்பொற்

10. றண்டிகையுந் தாருமாய்த் தங்காரி [1]யங்கள்சொல்ல
மண்டலிகர் வந்திறங்கு மாளிகையான்—பண்டு செய்த

11. பூசா பலனெவரும் புண்ணியவா னென்றுசொல்ல
வாசா லகனை மானபரன்—பேசு

12. மூலமானம் வேறில்லா வுத்தமனெந் நாளுந்
தவறாத வாய்மையரிச் சந்த்ரன்—எவர்மீது

13. மாறாக் கொடுங்கோபம் வாராது வந்தாலுஞ்
சீறாக் கருணைத் திருமுகத்தான்—பேறுதரு

14. தன்மம் நினைவதல்லாற் சற்று நினும்பிறர்மேல்
வன்மம் நினையா மனத்தினன்—சொன்மதுர

15. சார மிகுந்த தமிழ்நா வலர்க்குளென்மேல்
வார மிகுந்த மனதுங்கன்—போர்வீமன்

16. என்னு ருயிரனையா னென்கண் மணிபோல்வான்
பொன்னு பரணப் புயசயிலன்—தன்னுடனே

17. எந்த மலைவந் தெதிர்த்தாலு மெள்ளளவுஞ்
சிந்தை மலையாத் திடபுருஷன்—அந்தநாள்

18. வாலி முதுகுருவ வாளிதொட்ட செங்கையினாற்
சூலிமுது கில்விருந்து சோறளித்தும்—நீலவிடந்

19. துன்றுமிடற் றெம்பிரான் சோதினைக்குக் கங்குலின்வா
யன்றுமுளை வாரி யமுதிட்டும்—நன்றுபெறு

20. [2] தண்ணென்ற நெஞ்சத் [3] தயவாற் புலைமகனை
யுண்ணென்று தன்கலச்சோ றூட்டியும்—புண்ணமைந்த

(பி - ம்.) 1. யஞ்சொல்ல. 2. தணணென்று. 3. தயவாய்ப்.

21. பாவலர்க்குத் த்யாகமாய்ப் பாம்பின்வாய்க் கைநீட்டிச்
சீவரத்னம் வாங்கிச் செலவிட்டு—நாவலவன்
22. பண்ணு தமிழ்க்குப் பரிசி லடிமையென்று
பண்ணு கிளைக்கெல்லா மாற்றளித்துந்—தன்னுடைய
23. நாணாற் றகிலை நடக்கீறி யாவருக்குங்
காணாத் துடைச்சிலந்தி காட்டியும்—[1]வாணாட்கு
24. வன்பழிசெய் நீலிதன்னால் வந்த படாப்பழிக்குத்
தன்பழியீந் தப்பழியைத் தள்ளியும்—அன்பனிவன்
25 என்னை நிறுத்து மியற்கையா லீசனுக்குத்
[2]தன்னையுரைத் துச்சந்தஞ் சாத்தியும்—நன்கருணை
26. காட்டுகின்ற கீர்த்திவெகு கற்பகா லம்வரைக்கு
நாட்டுகின்ற தொண்டைவள நாட்டரசாய்த்—தீட்டுபுகழ்க்
27. கச்சிவிசு வேந்திரன் [3]கிட்டிணப்பன் காலத்தே
மெச்சுமதி மந்திரியாய் வீற்றிருந்து—முச்செகத்தை
28. யந்நாளி லாண்ட வரியநயி னார்மகிபன்
றன்னா ருயிர்மருகன் றானாகி—யிந்நிலத்தில்
29. ஆதிவட வேங்கடவ ராட்கொண் டனுக்கிரிக்க
நீதிகொள்கிட் ணாபுரத்தை நிர்மித்து—வீதிகண்டு
30. வானமுதற் றாவிவரை [4]வாழ்வேங் கடமாயர்க்
கானதொரு கோயி லமைத்தருளி—மேனிமி[ர்]ந்த
31 சுற்று மதிளுந் தொகுத்தநிலைக் கோபுரமும்
மற்றுமுள்ள தெல்லாம் வகுத்ததற்பின்—கொற்றத்
32. திருவளரத் தேருஞ் சிறப்புடனுண் டாக்கிப்
பெருமையாய்க்கீர்த்திமுனபு [5]பெற்ற-முருகுயிர்க்கு
33. [6]மன்றலந்தார்க் கூவ மயிலேறி வம்சமென்னுங்
குன்றுதனி [7]லிட்ட குலதீபம்—என்றுமென்றாங்

(பி - ம்) 1. வாணாட்கு; வாணாளில். 2. தன்னை யுரைத்த சந்தஞ். 3. கிட்டிணன். 4. வான்வேங். 5. பெற்றான். 6. மன்றலர்ந்தார் மார்பன். 7. ல்வைத்த.

34. தேசமுற்றுங் காக்கவருஞ் செங்கோல் மனுவேந்தர்
வாசலுக்குத் தூண்டா மணிவிளக்கு—வீசுகொடைக்
35. கன்றுவ தாரனுயர் கங்கைமுதற் கன்னிவரை
யின்றுனென் றெங்கு மிலக்கானேன்—தன்றுலே
36. கோடி குடும்பங் குறைதீர்ந்து வாழ்ந்திருக்க
நாடி மிகுந்த நடக்கைபெற்றேன்—நீடியபூஞ்
37. சோலைவைத்த [1]தென்னத் தொலையாப் பெரும்பாதை
சாலைவைத்தெல் லோர்க்குந் தகைதீர்த்தோன்-நீலமணி
38. வெற்பனைய மங்கையில்வாழ் வேங்கடமா யூர்க்குவெகு
கற்பணிகள் பொற்பணிகள் கட்டளைகள்—பற்பலவுஞ்
39. செய்துபுதுத் தேர்வகுத்துத் [2] தெப்பக் குளங்கண்டு
மைதவழ்பூஞ் சோலைசுற்றும் வைப்பித்து—மெய்தந்த
40. வைகுண்ட லோகமிந்த மங்கைநக ரென்னவளம்
செய்கின்ற கீர்த்திச் செயவிசையன்—கைகொண்டு
41. தானே கொடுப்பதன்றித் தானேற்ப தில்லையென்று
மேனுளிற் பூண்ட விரதத்தோன்—ஆனதொரு
42. தெற்ப சயனமுதற் றெய்வத் தலங்கடொறும்
பற்பலக யிங்கிலியம் பண்ணினேன்—பொற்புவிசைச்
43. சேய கமலத் திருவடியி னுலளந்த
மாயனுருப் போல வளர்ந்தோங்கி—யாயவன்
44. கள்ளவிழ்தார் மார்பிற் கவினுமுத்த ரீகமென
வெள்ளருவி பாய்பொதிய வெற்பினேன்—புள்ளுறுச்
45. சோலை [3]யிருமருங்குந் தோன்றநடு வேசென்று
வேலையள வும்புகுந்து மேன்மையால்—ஞாலமகள்
46. கூந்தல் வகிர்ந்த வகுப்பிலே கொத்தணியும்
வாய்ந்தசுட்டி முத்துவட மாலையாய்—வாய்ந்த

(பி - ம்.) 1. தென்றற். 2. தெற்பக். 3. யிருவருகுங்.

47. கருமண லுங்குழல்போற் காட்டும் பொருளைத்
திருநதியோன் மேவலர்கள் சிங்கம்—பெருமையாய்ச்
48. சுற்றுங் கடலாடைத் தொன்னிலமா மாதுக்கு
மற்றுளநா டெல்லாம் வணைகலன்கள்—நெற்றிதனிற்
49. செங்கையாற் றீட்டுந் திலகமிந்தச் சீவல
மங்கைநா டென்னும் வளநாடன்—[1]பொங்குபுகழ்
50. இந்த்ரதருத் தெய்வச் சிலைப்பெருமா ளென்றெங்கும்
வந்து பிறந்த மகிமையால்—முந்திமையோர்
51. பொன்னகரு மாகிப் பொலிந்தசெல்வத் தாலளகை
நன்னகரு மானமங்கை நன்னகரான்—முன்னீர்
52. முழுகுதிரை கீண்டு முளைத்தவெய்யோ னேறி
னெழுகுதிரை யைப்பார்த் திகழ்ந்து—பழுதுங்கள்
53. [2]ஐங்கதியென் காற்கதிக்கொப் பாமோ வெனச்சிரித்து
வெங்கடுப்பாற் காறியுமிழ் வீறுபோற்—றங்குமனு
54. மானமும் வாயில் விலாழியும் வாய்த்ததொரு
பாணிறவே கக்கவனப் பாய்பரியான்—தானே
55. பிறையிரண்டு தாங்கியொரு பெய்முகில்வந் தன்ன
கறையடிவெண் கோட்டுக் களிற்றான்—முறைமுறையே
56. மற்றக் கொடிகள் வணங்கநடு வேவிளங்குங்
கொற்றக் கெருடக் கொடியினான்—கற்றறிந்தோர்
57. சொன்மாலைக் [3]கேற்குந் துணைப்புயத்திற் பூந்துளப
நன்மாலை யும்புனைந்த நாகரிகன்—தன்மைகண்டு
58. தெம்முரசு வாயடங்கத் த்யாகமுரா சாயதிர
மும்முரசு வாய்முழங்கு முன்றிலான்—[4]எம்மறையும்

---

(பி - ம்.) 1. பொங்குகொடை. 2. ஐங்கதிதன். 3. கேற்ற துணைப்புறத்திற். 4. எம்மையும்.

59. பேசாத வுண்மைப் பெருநெறிகாட் டுஞ்சடகோ
பாசாரி யார்பதத்தி னுணையான் —காசினிமேற்
60. றள்ளரும் வாய்மைத் தசரதனார் தம்வயிற்றிற்
பிள்ளையென ராமன் பிறந்ததுபோல்—உள்ளமகிழ்
61. விந்தை மருவுதிரு வேங்கடநா தன்வயிற்றில்
வந்தவதா ரஞ்செய் மகராசன்— கொந்தவிழ்பூந்
62. தாராரு மார்பணிவன் சற்புருஷ னென்றுலகிற்
பேரா மழகப் பிரானுக்கு— மாராயும்
63. பாடலுங் கல்விப் பயிற்சியும் [1]வல்லதனி
ஆடல் மதவே ளனந்தனுக்கு—நாடெல்லாந்
64. தானராசு செய்யச் சமைந்ததொரு கற்பகக்கன்
றுன்திரு வேங்கடத் தப்பனுக்கு—மேனுளிற்
65. பின்னுதித்த மூவருக்கோர் பிராணபத [2]ராமனைப்போல்
முன்னுதித்து வந்த முகில்வண்ணன்—இந்நிலமு
66. நாற்றிசையும் வாழ்த்துதலால் நல்லவனென் றெல்லோரும்
போற்றுமிரா மானுஜ பூபதிக்கும்—ஏற்றமுள்ள
67. மன்னுலகில் மீதுகன வாழ்வுக் களகேச
னன்னதிரு வேங்கடத் தப்பனுக்கும்—பன்னுதமிழ்
68. வாணி புருஷ வடிவான கல்வியுரை
யாணியெனு மெங்களரு ளாளனுக்கும்—வேணதொரு
69. நன்மருகன் பூதலத்தில் நன்மையெல்லாங் கூடியொரு
சென்மமென்று வந்துதித்த சீராளன்—தன்மவான்
70. ராமா னுஜனென்ற வெங்க ளனந்தனெனு
மாமால் வணங்கியநன் மைத்துனவேள்— [3]பூமகள்வா
71. ழெங்கோனிவனேயென் றெவ்வுலகும் வாழ்த்துமொரு
செங்கோன்மைத் தெய்வச் சிலைப்பெருமான்—பைங்கோதை

(பி - ம்.) 1. வல்லதனில். 2. ராமன்போல். 3. பூமகள்பாய்.

72. மோகன மங்கையர்வேள் முத்தமிழ்க்குப் பொன்பொழியுந்
த்யாகமுகில் தெய்வச் சிலைப்பெருமாள்-லோகமெங்கும்
73. பெய்யுமழை போற்சகல பேர்க்கு முபகாரஞ்
செய்யுமொரு தெய்வச் சிலைப்பெருமாள்—மெய்யறிஞர்
74. மும்மையுல கத்தெவர்க்கு முன்னேசொல் லத்தகைய
செம்மைபெறு தெய்வச் சிலைப்பெருமாள்-எம்மைமுகம்
75. பார்த்தவுட னெங்கள் பரதாக மோர் வாக்கால்
தீர்த்தருளுஞ் தெய்வச் சிலைப்பெருமாள்-கீர்த்தியாய்த்
76. தொல்லுலக மெங்குந் துரைத்தனக் கிள்ளாக்கை
செல்லுமெங்கள் தெய்வச் சிலைப்பெருமாள்-நல்லதிரு
77. நெல்வேலி வாசல்நிர் வாகம் முழுதுந்தன்
சொல்வேலிக் குள்ளே தொழிற்படுத்தி—வல்ல
78. பிறிவுக் குடம்பிடிக்கை பேசுவதும் சொன்ன
நெறியிற் பணஞ்செலுத்து நேர்ப்பு—மு[றை]றமைக்
79. கணக்குடனே சீமைக் கனரேகை லெக்கம்
பணக்குறைவா ரீதுகொள்ளும் பண்பும்-[1] இணக்கி
80. விர்வுகள் பார்த்தெழுது மேலோ சனையு
மரமனைக்கோர் தீபரங்க ளாலும்—திரவியங்கள்[பொன்
81. வத்தகற்கோர் வார்த்தைசொல்லி வாங்குவதும் [2]வாங்கிய
தித்திவிக்கும் வல்லமையுந் த்ராணியும்—புத்தியிலே
82. அப்பாசி யூகி [3]சமுத்தி யிவர்களினு
மெய்ப்பான புத்தி விதரணமும்—இப்புவனந்
83. தாங்கு மரசுரிமைத் தாட்டீகம் பெற்றதினால்
ஓங்குநா வாகன யோகமும்—பாங்கி
84. லடுத்த சனங்க ளவாவறிந்து செம்பொன்
கொடுத்து நடத்துங் குணமும்—எடுத்து[ப்]

(பி - ம்.) 1. இணக்கும். 2. வாங்கியபின். 3. யுமயதி.

85. பறுவகா லங்கள்தொறும் பன்னுமறை யோர்கள்
சறுவரும்வந் தேற்குந் தருவாய்[ப்]—பெறலரிய
86. பூதானங் கன்னிய[ர்] தானமுதற் பூசுரர்க்கு
மாதான மெல்லாம் வழங்குவதும்—ஈதன்றி
87. யாசக ரூபமதா யெங்கோன் கனகமணி
வாசலிலே யெத்தனைபேர் வந்தாலும்—பேசி
88. யவரவர்க்குச் செய்தனுப்பு மாதரவுஞ் சற்றுங்
கவலையில்லா வுள்ளக் களிப்பும்—இவனைப்போற்
89. கண்டதில்லை விட்ணு [1]கலையிந்த ரூபமென்று
மண்டலத்தி [2]லெல்லோரும் வாழ்த்தவே—பண்டைத்
90. திருவடி தேசமுற்றுஞ் செங்கோ னடாத்தி
யொருகுடையா லாள [3]வுதித்தோன்-இருபொழுதும்
91. அட்டதிசை யெல்லாந்தன் னாணைக்குப் பண்புசெய்யச்
சட்டமிடும் பாண்டித் தமிழ்நாட்டில்—நெட்டைமுழு
92. மாவகங் கீற வடிவேல் விடுத்தமுழுச்
சேவகன் வாழுந் திருச்செந்தூர்க்—கோவிலுக்கு
93. நம்பிமார் தம்மில் நடலிங்க பட்டனென்போ
னம்புவிகொண் டாடு மறிவாளன்—வம்பவிழ்பூந்
94. தேனேறு தண்சோலைத் தென்றிருப் பேரையூர்க்
கோனேரி பட்டன் குமாரத்தி—யான
95. திருமகளைக் கல்யாணஞ் செய்துசில காலம்
மருமலரும் வாசமும்போல் வாழ்ந்து—பொருவரிய
96. பாலகனைப் பெற்றெடுத்த பக்குவத்தே தானுமந்தக்
கோலமதி வாணுதல்லைங் கோதையுமாய்—நீலநெடு
97. மஞ்சனைய மேனி மகரக் குழைக்காதர்
செஞ்சரணச் சேவையின்மேற் சிந்தனையாய்-நெஞ்சமகிழ்

(பி - ம்.) 1. சிலையிந்த. 2. லுள்ளவர்கள். 3. வுரித்தாய்.

98. மாமனா ரூரகத்தில் வந்திருந்த பின்பொருநாள்
ராமா யணப்ரசங்க மெய்துதலுந்—தாமே

99. ஒருவர்க் கொருவ ருரையிடுமவ் வேளை
இருவர்க்கு மாங்கார மெய்தி—மருமகனைப்

100. பார்த்துநா னெல்லாம் படித்துமறி வில்லாத
தூர்த்தாபோ வென்று துடுக்காக—வார்த்தைசில

101. சொன்னதுண்டு மாமனந்தச் சொல்லைச் சகியாமல்
அன்னநடை மின்னா மறியாமல்—முன்னே

102. நடந்துவிட்டா [1]னப்பொழுது நாயகனைத் தேடி
மடந்தைதிருச் செந்தூர்க்கு வந்தாள்-தொடர்ந்துதொடர்ந்

103. தாள்விட்டுங் காணா ளருந்ததிபோற் கற்புடைய
வாளொத்த கண்ணாள் மலைத்தழுதாள்—நாளிலே

104. மெல்லிடைபோற் றேகம் மெலிந்தாள் புனல்காணா
வல்லியம் பூங்கொடிபோல் வாடினாள்—எல்லையிலா

105. வாதையுடன் றென்னிலங்கை மாநகரிற் போயிருந்த
சீதையினும் பாரச் சிறையானாள்—சோதிநெடு

106. வாளனைய கண்ணிமணா வாளனையே யெண்ணியொரு
நாளொருக மாயிருக்கும் நாளிலே—நீளமழுச்

107. செங்கரனார் கோடித் தினகரனார் போல்விளங்குஞ்
சங்கரனார் கோவிற் றலத்தாரில்—ஐங்கரனார்

108. பின்னுதித்த சண்முகத்தெம் பெம்மான்றன் சீரலைவாய்ச்
சன்னிதிசே விக்குந் தயவினால்—முன்னாலும்

109. பைந்தாம மார்பு மிலங்கப் பழமறையோர்
வந்தார் சிலபேர் வழிப்போக்காய்—முந்தும்

110. விருத்தராய்த் திண்ணையின்கண் வீற்றிருந்தார் தம்மைத்
திருத்தகுநல் லாள்வணக்கஞ் செய்தாள்—வருத்தமென்ன

(பி - ம்.) 1. ன்றன்னுடைய.

111. பெண்ணே யகத்திற் பிராமணனெங் கேயென்றூர்
கண்ணீர் [1]ததும்பக் கவிழ்ந்துநின்று—புண்ணியரே
112. எங்கள் தகப்பனு ரேதோசொன் னூரென்று
தங்கள் மனதிற் சகியாமல்—எங்கேயோ
113. போனூர் வருஷமொன்று யென்று பொருமினாள்
ஆனு லறிவோ மடையாளங்—தேனனையாய்
114. ஒன்று நினைத்தயமே னுன்னு யகன்வருவா
னென்றுகண்ட செய்தி யியம்பினூர்—வென்றிபெறு
115. சங்கரனூர் கோவிலிலே தன்கணவன் போனதுவு
மங்கொருத்தி கையிலகப் பட்டதுவுஞ்—செங்கைத்
116. திரவியத்தை வீணிலே சிந்துவதுங் கேட்டாள்
வரிசைபெற்ற கற்புடைய மங்கை—பரிவுடன் வந்
117. தந்தணரைப் பின்சென் றனுப்பினாள் தன்னுடைய
சிந்தை மறுக்கஞ் சிலதீர்ந்தாள்—மைந்தனுடன்
118. பூங்குழலாள் வீற்றிருக்கும் போது பிறகொருநாள்
தூங்கிசைநல் யாழ்விறலி தோன்றினாள்-[2]பாங்குடனே
119. கேட்டருணீ யென்று கிரணமணி யாழெடுத்து
மூட்டு நரம்பை முறைதிருத்திப்—பாட்டி
120. னிசையும் நரம்பி னிசையும் பழத்தைப்
பிசையுநறும் பால்மதுரம் பில்க—[3]வசையிலாப்
121. பெண்பெருமாள் செங்கை பிடித்த மணவாளன்
பண்புடைய பேரெடுத்துப் பாடினாள்—[4]ஒண்பது[ம]
122. மங்கை முறுவலித்தாள் வாராய் விறலி[யே]
சங்கரனூர் கோயில் தனைப்பாடி—அங்குள்ள
123. தாசிகளைப் பாடியவர் தங்கள் தொழில்பாடிப்
பாசிழையாய் பின்பவரைப் பாடென்றாள்—ஓசைபெறப்

(பி-ம்.) 1. திளும்பக். 2. பாங்கொடம்மா. 3. அசைவிலலாப்.
4. ஒன்பது.

124. பாடுவது மந்தப் படிப்பும் பரிவுடன்கொண்
டாடுவதுங் கேட்டா ளணங்கரசி—வாடிபெண்ணே
125. தோளுமென் கண்ணுந் துணைவ ரெனைப்பிரிந்த
நாளில் வலந்துடிக்க [1]நானுயிர்த்தேன்—காள
126. விடந்துடிக்க மைக்கண் விறலியின் றென்றே
யிடந்துடித்த காரணஞ்சொல் லென்றாள்—உடந்தைபெற்ற
127. நல்வரவிங் கென்வரவு நங்கா யுனைப்பிரிந்த
செல்வர்வரு வாரென்று தேற்றினாள்—வல்லி
128. பரிசில் கொடுக்கப் பயில்யாழ் விறலி
வரிசைகொடு வீதி வரலும்—புரிகுழலை
129. விட்டுநெடு நாளாய் வெறுத்ததறு கண்ணுனைப்
பட்டு மனந்தெளிந்த பான்மையனைத்—தெட்டும்
130. பரத்தையர் மோகமெனும் பாம்பின்வாய் நீங்கிச்
சிரத்தைபெறு திங்களனை யானைக்—கரத்திலவர்
131. சேர்த்துநகம் வைத்த சிறுதழும்பை யுத்தரிகம்
போர்த்து மறைத்த புயத்தானை—ஊர்த்தலைக்கண்
132. வந்தவுட னச்சமு நாணமும் வந்துடற்றச்
சிந்தனைதள் ளாடுஞ் செயலானைச்—சந்த
133. நறைகமழும் பூந்தார் நடலிங்க னைத்தன்
கறைகெழுவேற் [2]கண்ணெதிரே கண்டாள்—விறலியுஞ்
134. சென்றா ளிணையடிமேற் றெண்டனிட்டா ளய்யாநீர்
நன்றாக வந்ததே நன்மையென்றாள்—நின்றா
135. ளகத்திலுள்ள செய்திகளு மங்கே குழந்தை
சுகத்தி லிருப்பதுவுஞ் சொன்னாள்—மிகத்தளர்ந்து
136. நொந்தீர் திருவுடம்பில் நோவுண்டோ வித்தனைநாள்
செந்தூரை விட்டுத் திரிந்தீரோ—[3]தொந்தமில்லாத்

(பி-ம்.) 1. நானிருந்தேன். 2. கண்ணியெதிர். 3. சொந்தமில்லாத்.

137. தேவடியா ராசையெல்லாந் தீர்ந்ததோ யின்னமுண்டோ
சாவடியிற் போம்போம் தகைப்பாற—மேவி
138. [1]நரைக்கோலங் கொண்ட நயனத்தால் நங்கை
சிறைக்கோலம் பாருமினிச் சென்று—மறைக்கோல
139. வள்ளலே யென்றாள் விறலியவள் வார்த்தைகேட்
டுள்ளசெய்தி யெல்லா முரைசெய்தான்—பிள்ளைநீ
140. ஆதலினா லுன்னுடனே யந்தரங்கம் வேணபடி
யோதலா மன்றியதற் கொல்குவதேன்—கோதாய்கேள்
141. வாராத வூழிவிதி வந்து முடிந்ததென்றால்
ஆரிலே கூடி மமைப்பதற்குத்—தோராயம்
142. எந்தப் பழிநடந்த தென்மேகாப முற்கோபம்
அந்தக் குணம்நீ [2]யறியாயோ—செந்தூரில்
143. [3]வாணுதல்நீ கேளாயென் மாமனார்க் கும்மெனக்கும்
வீணிலொரு பேச்சால் வெறுப்புவந்து—ப்ராணபத
144. மைந்தனையு நீத்து மனையாட்டுஞ் சொல்லாமல்
அந்தரங்க மாய்ச்செலவுக் காயிரம்பொன்—சொந்தமாய்ப்
145. பையிலே கொண்டு பயணம்போ யன்றைக்குத்
தையலேசீவைகுண்டஞ் [4]சார்ந்திருந்தேன்-செய்யதமிழ்க்
146. கிட்டு புரமறுநாள் சேர்ந்தேன்கிட் டுபுரம்போற்
பட்டணம்வே றுண்டோவிப் பாருலகிற்—கட்டழகன்
147. சீமா னமிர்தகுணன் தெய்வச் சிலையெனுமெங்
கோமான்செய் தெப்பக் குளச்சிறப்பும்—காமருபூஞ்
148. சோலையுங் கோபுரத்தின் றோற்றமும் வேங்கடவ
ராலயமுங் கண்டங் ககமகிழ்ந்தேன்—மேலோங்கும்
149. காதலுட னேவய்யன் கட்டளையிற் சென்றுசம்பாச்
சாதமும் வாங்கிநன்றாய்ச் சாப்பிட்டேன்—போதுபுக

---

(பி - ம்.) 1. நறைக்கோலங் கண்ட. 2. யறிவாயே. 3. வாணுதலே. 4. சார்ந்தேன்.

150. நெல்லைத் தலத்திலே சென்றே னிமலனுக்குத்
தில்லைத் தலம்போற் சிறந்ததலம்—நல்லதொரு
151. பொற்று மரையிற் புனலாடிப் பண்டைவினை
சற்று மின்றித் தள்ளினேன்—முற்றுதவக்
152. கம்பை நதிக்கவுரி [1]காந்திமதி யம்மனிரு
செம்பொன் மலர்ப்பாதஞ் சேவித்தேன்—நம்பன்
153. திருவா திரைமறுநாள் தெரிசனையுஞ் சேவித்
தொருமாதம் நின்றேனவ் வூரில்—வருவா
154. ரறிந்த மனுஷரென் றவ்வூரை நீங்கிச்
சிறந்த புடைமருதூர்ச் சேர்ந்தேன்—பிறந்திறவாச்
155. சித்தனுக் காகத் திருமேனி சாய்ந்திருந்த
கத்தனைக் கண்டிரண்டு கண்குளிர்ந்தேன்—[2]வித்தகன்
156. தென்பிரம தேசத்தே சென்றுகயி லேசனையும் [வாழ்
அன்பினொடு செம்பொ னடிபணிந்தேன்--[3]பின்புசென்று
157. பாவநா சத்தலத்தைப் பார்த்தானு மாங்கவனைத்
தேவனு கச்செயுந் [4]திவ்யதலம்—மேவி
158. அருவிநீ ராடி [5]யமலனையுஞ் சேவித்
[6]தொருவினையு மில்லா தொழிந்தேன்-இருபொழுதும்
159. ஆங்காரம் [7]வேறின்றி யங்கங்கே சஞ்சரித்துப்
பாங்காய்த் தலவாசம் பண்ணினேன்—ஓங்கும்
160. உருவெழுத வொண்ணு வொருபொருளை யுக்ரப்
பெருவழுதி கண்ட பிரானை—மருவுமன்பர்
161. பேராசைக் கேயிணங்கு பெம்மானைப் புன்னைவனச்
சீராசைக் கேசென்று சேவிப்ப—ஓராசை
162. பற்றி நடந்தேனென் பாக்கியம்போற் சித்திரைக்
[8]கொற்றவிழா வுக்குக் கொடியேறிப்-பொற்றுடிக்கை

(பி - ம்.) 1. காந்திமதியினிரு. 2. பித்தன்வாழ். 3. இன்ப வனைப். 4. தெய்வதலம். 5. யமலனைச் சேவித்தே. 6. னொரு வினையு. 7. வேறன்றி. 8. கொற்ற திருவிழா.

163. யாவுடைய தேவியுமென் னய்யனுமாய் வெள்விடைமேற்
சேவைதரு நாலாந் திருநாளிற்—கோவிலின்முன்
164. சன்னதி வாசலிற்போய்ச் சந்தித்தேன் தெண்டனிட்டேன்
இன்ன லெல்லாந் தீர்ந்துகரை யேறினேன்—முன்
165. வீதிவலம் வந்தருளி மீண்டான் றிருவாசற் [னவனும்
சோதிமணி மண்டபத்தின் சுற்றெல்லாம்—வேதியரும்
166. சைவரும்வே றுள்ள சனங்களுங்கை கூப்பிநிற்குந்
தெய்வச் சபையின் சிறப்பெளிதோ—வெய்ய
167. பிணிமாற மண்கொடுக்கும் பேரருளெங் கோமான்
பணிமாறு காலம் பணிந்தேன்—தணியாத
168. ஆனந்த வெள்ளத் தழுந்தினேன் காமவெள்ளந்
தானந்த வெள்ளத்தைத் தாண்டிவிட—மானேந்து
169. மைவிழியார் தட்டி வளையம் வருதலுமோர் [மவள்
பெய்வளையைக் கண்டுமயற் பேய்கொண்டேன்-தொய்யு
170. சிற்றிடையும்பட்டுடையுஞ்செண்பகப்பூம்பந்துகொண்டு
சுற்றிய கொண்டைச் சொருக்கழகும்-பொற்குழையும்
171. வச்சிரத் தோடுமவள் மாணிக்கப் [1] பூண்முலைமேற்
கச்சு மணிக்கடகக் கைவீச்சுங்—கெச்சமும்
172. பாதத் துணைச்சிலம்பும் பாடகமு மென்னறிவைப்
பேதித்த கோலப் பிடிநடையுஞ்—சோதிமணி
173. மூக்குத்தி முத்து முகந்த திருப்பவள
வாய்க்குட் குறுஞ்சிரிப்பின் மார்க்கமும்-நோக்கத்தால்
174. பார்த்தேன் மிகவும் பரவசமா னேனுடம்பு
வேர்த்தே னுயிர்த்தேன் வெதும்பினேன்-கீர்த்திபெறு
175. மெங்கோனுங் கோயிற் கெழுந்தருளும் வேளையிலே
பைங்கோதை நல்லாளும் பாங்கியரும்—அங்கேயென்

---

(பி - ம்.) 1. பூண்முலையிற்.

176. ஆவியுங் கண்ணு மறிவுமவள் பின்றொடரக்
கோவிலுக்குள் ளேநடந்தாள் கொஞ்சமோ—பாவி

177. மணியிழந்த பாம்புபோல் வாசலிலே நின்றேன்
பணிமொழியாள் தன்வரவு [1]பார்த்தேன்-துணிவென்னும்

178. என்னிரு கண்களுக்கும் ஏதோ சடுதியிலே
கன்னி வருவதுபோற் காண்பிக்கு—மந்நேரஞ்

179. செஞ்சிலம்புங் [2]கேட்டுத் திகிர்திகி ரென்னுநெஞ்சங்
கொஞ்சமல்ல வென்விரகக் கோட்டாலே—வஞ்சியவள்

180. தட்டியுங் கையுமாய்ச் சாய்ந்துநின்ற தூணைப்போய்க்
கட்டி [3]யணைக்கவுங்கை காலெழும்புங்—கெட்டேன்

181. இதுவென்ன மோக மிதுவென்ன தாகம்
இதுவென்ன [4]சோக மெனக்கு—மதுமலர்ப்பூங்

182. கோதையு மத்தறுவாய் கோவிற் றொழின்முடித்தென்
வேதனை தீர வெளிவந்தாள்—மாதரசி

183. சந்த்ரோ தையஞ்சூழ்ந்த தாதியரே நட்செத்ர
மிந்த்ராணி யிந்த்ராணிக் கீடல்ல—பைந்தொடியைக்

184. கண்ட ரிஷீசுரருங் காமிப்பார் நானுசை
கொண்ட தபூர்வமென்று கூறுமோ—ஒண்டொடிதன்

185. பாங்கியரி லேயொருத்தி பற்பமுக வல்லியெனும் [க்கு
பூங்குழலாள் கிட்டமெள்ளப் போயடுத்தேன் - ஈங்கும

186. முன்னே நடக்குமிந்த மோகினியார் பேரேது
பின்னேசொல் லென்று [5]விளம்பினேன்—தன்னுருவுங்

187. கண்[ண]னுருவு மொன்றாக் காட்டிநின்ற சீராசைப்
[6]பண்ணவன்றன் கோயிற் பரிகலத்தில்—எண்ணு

188. முதன்மைக் குடிப்பிறந்த மோகன ரம்பை
மதனுக் கபிஷேக மாலை—யிதமித்த

(பி - ம்:) 1. பார்ப்பேன். 2. கேட்குங். 3. யணைக்கவுமென். 4. சோப. 5. விசாவினேன். 6. பண்ணவனார்.

189. நங்கள் குடிக்கு நடுநா யகமான
திங்கள் வதனத் திருப்பாவை—மங்கைபேர்

190. அந்தணரே கேளு மதிரூப [1]ரத்னமென்றாள்
இந்துநுத லாளுக் கிணங்குமே—தொந்தமங்கே

191. கூட்டுவித்தா லார்தடுத்துக் கொள்வார் சிவன்செயல்நின்
றூட்டுவித்தா லாரொருவ ராடாதார்—கேட்டு

192. மடிவுவா ராமல் வயிரவனுக் கங்கே
நெடியவட மாலைக்கு நேர்ந்தேன்—துடியிடையாள்

193. சன்னதி வீதிவிட்டுச் சந்திக்குத் தென்புறமாய்த்
தென்னமர நிற்குந் தெருவாசல்—அன்னதொரு

194. பாரமனை யுட்புகுந்தாள் பாங்கியெனும் பற்பமுக
நேரிழையாள் மாத்ரமங்கே நின்றுகொண்டாள்—வாரு

195. வேதியரே யெங்கே விடுதியென்றாளென் வரவை[மையா
யாதி முதலா யறிவித்தேன்—பாதியும்நான்

196. சொல்லுமுன்னே யென்கருத்தைக் கண்டாள் சுகக்காரி
வல்லமைபோ லில்லையொரு மாதருக்கு—நல்லதிங்கு

197. நில்லுமென்று போனாள் நினைத்தபடி யேமுடிப்பாள்
இல்லையென்று வாராளென் றெண்ணினேன்—ஒல்லையிலே

198. வந்தா ளவள்பிறகே வந்தொருத்தி கைலாகு
தந்தாள் நடந்தேன் தரிப்பேனோ—[2]முந்தநான்

199. உள்ளுத் தலைவாச லுட்போனே னப்போதோர்
வெள்ளைத் [3]தலைச்சி வெளிவந்தாள்—தள்ளரிய

200. போனார் வந்தீரோ வென்றாள் பிறகொருத்தி
வாருங் கொழுந்தனார் வாருமென்றாள்—ஓர்சிறுபெண்

201. அத்தா னெனவந் தழைத்தா ளவரவருக்
[4]குத்தாரஞ்சொல்லிமனை யுட்புகுந்தேன்-சித்திரப்பூம்

(பி - ம்.) 1. ரத்னமென்றால். 2. முந்தனேள். 3. தலைநாச்சி வெளியில்வந்து - தெள்ளரிய. 4. குத்தரங்கள்.

202. பட்டக சாலையிலே [1]பாய்விரித்தார் போயிருந்தேன்
தட்டுநிறை யச்சுருளுந் தான்பரப்பிப்—பெட்டியிலே
203. [2]கெந்தப் பொடிவைத் தனுப்பினாள் கிஞ்சுகவாய்ப்
பைந்தொடியைப் பெற்ற பழிகாரி—வந்தெதிரே
204. நில்லாளா முள்ளரங்கி [3]லேநின் றுபசாரச்
சொல்லா லுரு[க்]கத் தொடங்கினாள்—கல்லு
205. முருகுமே யன்றைக் கொருநன் னிமித்தங்
கருடன் தரிசனங்கண் டாளாம்—பெரியதின்ணை
206. மூலையிலே சொன்ன முகிழ்த்தக் கெவுளிபொருக்
காலுமில்லை யாம்விடியற் காலத்தே—பால்வார்த்துத்
207. தங்கச்சி சோறுண்ணுந் தாலத்தோ சீனியிலோ
வெங்குக் கிடந்ததோ வெவ்வகையோ—செங்கைக்குள்
208. மஞ்சளகப் பட்டதாம் வந்துதுகல் யாணமிது [தனில்
கொஞ்சமல்ல நன்மையென்று கொண்டாளாம்—நெஞ்சு
209. எண்ணியவா றிங்கே யெழுந்தருளி னீர்நாங்கள்
[4]பண்ணியபூ சாபலத்தின் பாக்யமன்றோ-புண்ணியரே
210. கைந்நிறையப்பொன்கொடுத்துக்கண்ணிறைந்தமாப்பிள்ளை
மெய்ந்நிறையக் கட்ட விதிகண்டீர்—மைந்நிறைந்த [மை
211. கண்ணுளுக் கேற்ற கணவர்நீர் கண்டவுடன்
உண்ணுமற் பூரித்த தென்னுடம்பு—பெண்ணணையீர்
212. ஆரங்கே மெத்தைதட்டிப் போடுங்கோ ஆடரங்கை
வேருங் கொழுந்தும் விதானியுங்கோ—பாருங்கோ
213. குத்து விளக்கையென்றாள் கூறும் வெகுமான
மித்தனையுஞ் சும்மாவந் தெய்துமோ—பத்திவிடு

(பி - ம்.) 1. பாய்விரித்தாள. 2. கெந்தபொடி மேல்வைத். 3. ல் நின்றாளுபசாரச். 4. பண்ணிய பூசா பலனன்றோ.

214. காதிற் கடுக்கனுமென் கைந்நிறைந்த மோதிரமு
[1]மாதிப் பசும்பொன் னரைஞாணும்—கோதி

215. முடிந்த குடுமி முடிப்பூவுங் காதில்
வடிந்த சவாது மணமும்—படிந்தொரு

216. பட்டுக்கை வாளையுமென் பையிற் கலிரென்று
விட்டுக் கிலுங்கும்வெள்ளி வெண்டையமு-மிட்டவரிச்

217. சந்தனமு நானிருக்குந் தந்தியுங் கண்டுவிட்டால்
வந்து விடாதோ மரியாதி—சொந்தமாய்

218. ராச வரிசை நடக்குதல்லால் [2]உன்னுணை
வேசமகள் பாங்கோ விளம்புங்கால்—வாசமலர்க்

219. கோதையும் வெந்நீர்க் குளித்தாளொன் றுங்கொருத்தி
ஓதினுள் மற்றொருத்தி யோடிப்போய்—மாதரசி

220. கட்டுவற்கங் கொண்டுவந்தாள் கண்ணுடியுமுடைமைத்
தட்டு மெடுத்தொருத்தி தாங்கினுள்—திட்டி நுழைந்

221. தத்தனையுங் கொண்டுபோ யாடம் பரஞ்செய்தா
[3]ரெத்தனையுந் திட்டென் றியம்புவேன்—சுத்தரத்ன

222. வல்லியென்றூர் பாங்கியென்னை வாருமென்று கைகொடுத்
[4]மெல்லிநல்லாள் தன்படுக்கை வீட்டிலே—செல்ல [தாள்

223. விடுத்தாளங் கேகிடந்த மெத்தையிலோர் போது
படுத்தாலுந் தீருமே பாவம்—தொடுத்தசையுஞ்

224. சங்கிலியோ தூங்குமஞ்சக் கட்டிலோ சாளரமோ
இங்குலிக வன்னத் தெழிற்கதவோ—வங்காளப்

225. பச்சையும் பஞ்சுமிட்ட பாரத் தழுவணையோ
மெச்சியமேற் [5]கட்டு விதாணிப்போ—இச்சையுடன்

(பி - ம்.) 1. மாணிப். 2. என்னுணை. 3. ரெத்தனையந் தத்தென். 4. மெல்லியலாள். 5. கட்டிவிதானமோ.

226. பார்த்துடம்பு பூரித்தேன் பாங்கியுருந் தானுமா
யார்த்தசிலம் போசைகளீ [1]ரென்றலம்பப்—போர்த்த
227. சலவையுங்குப் பென்ற சவாது மணமுங்
கலவை மணமுங் கமழக்—குலவுபெடை
228. யன்னமென வந்தெ னருகே கவிழ்ந்துநின்று
ளின்னநினைத் தானுமன மேங்குமே—சன்னையாய்ப்
229. பாங்கியரும் போய்மறைந்தார் பையவந்து மாமியா
ரோங்குமதிட் பக்கத் தொதுங்கிநின்று—நீங்களிங்கே
230. வந்ததே பாக்யமப்பா மார்க்கண்டன் போலிருப்பீ
ரிந்தவூர் பொல்லா விடும்பையூர்—அந்தரங்கம்
231. போலப் பழகுவார் பொல்லாப்புண் [2]டாக்குவிப்பார்
காலப்ர மாணக் கலிகண்டீர்—வாலப்
232. பருவமிது தேவடியார் பாசாங்கு செய்வார்
திருவுளமுண் டேயுதவி [3]செய்ய—ஒருவருக்கு
233. மிங்குப் பொறுப்பில்லை யெங்கள் குடியிருப்புச்
சங்கைப்பா [4]டென்னத் தகாதுநீர்—நங்கை
234. சிறியாள் லவலேசந் தேவடியார் மாற்கம்
அறியாள் பசலைப்பெண் ணய்யா—நெறியாய்
235. நடக்கினும்பொல் லாப்பாய் நடந்தாலு முற்றும்
அடைக்கலமாய்க் கைக்கொண் டருளும்—படைக்கிற்
236. பணமேது பாஷாணம் பண்பாய் மனுஷர்
குணமே பணமென்று கொள்வேன்—மணவறையி
237. லின்றுதந்த காட்சிபோ லென்சீவ னுள்ளமட்டுந்
நன்றிபெற வாழ்ந்திருங்கோ ணான்காண—என்று

(பி - ம்.) 1. ரென்றியம்பப். 2. டாக்கிவைப்பார். 3. செய்யும். 4. டெண்ணத்.

238. மகளை யழைத்தாள் மணிமுதுகை நீவி
முகமுந் தடவியுச்சி மோந்தாள்—சுகமே
239. யிருமகளே யென்றனுப்பி யேகினாள் வந்தென்
னருகிலிருந் [1]தாள்பெண் ணரசி—பொருமலைநான்
240. எங்கே யடக்குவே னென்றீ பரத்து முன்னே
அங்கேயு முண்டோ [2]வபிமானஞ்—சிங்கார
241. வாச லடைக்கவில்லை வாடை பரிமளங்கள்
பூசவில்லை பாக்குமுதற் போடவில்லை—பேசுவதென்
242. ஆடை முழுது மவிழ்க்கவில்லை பூண்முலைமேல்
வாண்ட ரவிக்கைமுந்தி வாங்கவில்லை—கூடி
243. [3]எடுத்தே னணைத்தேன் ரதிகேளி யாடத்
தொடுத்தேனி தென்ன துரியம்—படித்த
244. சுகங்கள் மிகுந்து துவண்டு துவண்டு
முகங்கள் முகந்து [4]முயங்கி—நெகிழ்ந்து
245. குலைந்தது கொண்டை [5]குழைந்தது கொங்கை
உலைந்தது செம்பொ னுடம்பு—கலைந்த
246. திலங்கு பசும்பொ னிணங்கு நிதம்ப
மலங்க முகங்க ளலம்பி—நலங்கொள்
247. நறுந்துகி லெங்கும் நனைந்து [நனைந்து]
மறந்திகு சிந்தை மருண்டு—சிறந்த
248. பெருந்துடை யுந்துடை யும்பிரி வின்றி
நெருங்க மருங்கு நெளிந்து வருந்த
249. இதழ்க்குறி தைக்க வெனக்கு மவட்கு
மதத்த களிப்பு [6]மயக்க—இதத்த

---

(பி - ம்.) 1. தாளென்னரசி. 2. அடிமாணம்-சங்கையாய் 3. எடுத்தணைத் தேனரதி கேளிக்கையாடத். 4. முயங்க. 5. குலைந்தது. 6. மயக்கு-மிதத்த.

250. [1]பிடர்க்குளி றக்கு பிறைக்குறி வைக்க
மடற்கமு கெட்டு வகுப்பில்—நடத்து
251. சிறுக்குரல் மிக்க செவிக்கமிர் தொப்ப
[2]வுறிக்கை யிணைக்கை யுடற்குள்—இறுக்க
252. வளைகள் சிதற [3]மழலை பதற
முளைவெண் ணிலவின் முறுவல்—விளைய
253. இருவ ருடலு மிருவ ருயிரு
மிருவர் மனது மிளக—வருகுது
254. போக மெனக்குப் பொருதடா வென்றுசண்ட
வேக [4]முடனெழும்பி மேற்கொண்டாள்—நாகரிகக்
255. காதேபொன் னோலையோ காருண்ய வாண்முகத்தின்
மீதோ டியகோல வேர்வையோ—மாதுநல்லாள்
256. [5]தத்தரமோ வண்டிறுக்கோ தப்பி முறைமயங்கு
முத்தரமோ கூடு மொருமிப்போ—எத்தையென்று
257. சொல்வே னுபரித் தொழிலுக் கவளுடனே
வில்வே ளனுபவிக்க வேண்டாவோ—கொல்வாள்
258. எளிதாய் விடுவாளோ யானுமொரு வாறு
தெளியா துளம்பெலத்து நின்றேன்—களிகூர
259. மெச்சினு ளாடவனீ [6]யாமய்யா வேறொருவர்க்
[7]கிச்சியா துள்ள மினியென்றாள்—சச்சாய்
260. நடந்ததோ சம்போக நாகரிக மாகக்
கிடந்ததோ ராண்டுசெல்லுங் கேட்கக்-[8]கடந்ததொரு
261. காமசல ராசிப்ர வாகம் கரைபுரண்டு
பூமலர் மெத்தைப் புறநனையத்—தாமதஞ்சற்

(பி-ம்.) 1. விடிகுஞ்சிரக்கள்; பிடர்க்குளி றக்கப். 2. வுறுககி. 3. மலைகள். 4. முடனேயெழும்பி. 5. தத்தமே. 6. யாமடா. 7. கிச்சையதுள்ள மினிதென்றாள்-அச்சாய். 8. கிடந்ததொரு.

262. றில்லாது போக மிருபேர்க்கு மொத்திருந்த
சல்லாப [1]போக சமயத்தே—கொல்லாமற்
263. கொல்லவோ வந்தாய் கொலைகாரா வென்றுசற்றே
மெல்ல மழலை மிழற்றினாள்—வல்லியங்கே
264. தன்களையும் வேர்த்த சரீரமுமோர் சோபைதர
என்களப மார்பி னிடைவீழ்ந்தாள்—மின்கொடியை
265. அத்தறுவாய் பார்க்கவெனக் காயிரங்கண் வேண்டாவோ
முத்தியசெவ் வாயும் முகமுமாய்—நித்திரைபோய்
266. அங்கே விடாய்தீர்ந் தெழுந்திருந்தா ளய்யாமற்
றெங்கே துகிலென் றெனைக்கேட்டாள்-செங்கையினால்
267. வாங்கியொரு தட்டுடுத்தாள் மற்றத் துகில்கொடுங்கை
தாங்கினாள் நானுமவள் தானுமாய்—ஆங்கே
268. [2]வெளியில்வந்து நின்று விடாயாறி மீளத்
தளிரணைமேற் சென்ற தறுவாய்—இளமுலையைப்
269. பார்த்தாள் நகக்குறியைக் கண்டாள் பழிகாரா [யினும்
தூர்த்தாவென் றுள்சரிந்தாள் தோளின்மேல்-வார்த்தை
270. பெண்மையினும் சம்போக [3]லீலையினும் பேயரக்கி
உண்மை மனத்தை யுருக்கினாள்—கண்மயங்கு
271. நித்திரையி லேகொடுங்கை நீங்கினா னஞ்சகியாள்
அத்தனையும பொய்யென் றறிவேனோ—சத்தியமாய்
272. உள்ளபடி கொண்டே னுதயகா லத்திலந்தக்
கள்ள நெடுநீலி கையிலே—கொள்ளையாய்
273. எண்பதுபொன் வாரிக் கொடுத்தே னெழுந்திருந்தேன்
தண்புனல்பாய் நாகநகரை தன்னிற்போய்ப்-பண்புடனே
274. சந்திபண்ணி னேன்சோமன் தப்பினேன் தப்புதற்குச்
சிந்தை பொறாது திகைத்துநின்றேன்—முந்தமுந்த

(பி - ம்.) 1. சோக. 2. வெளியில்வந்தேக. 3. லீலையெனும்.

275. மஞ்சள் துவண்ட [1]மணம்படிந்து போவதுதான்
கொஞ்சமோ வுள்ளங் கொதியாதோ—நெஞ்சுமகிழ்ந்
276. தந்தணர்கள் வீதியிலே சென்றேனப் போதொருத்தி
சந்தனக்காப் பாய்ப்பெற்ற தாயைப்போல்-வந்தெனது
277. பிள்ளையைப்போ லேயிருந்தாய் பிள்ளாய்நீ யாரென்றாள்
உள்ளபடி சொன்னேன்பே ரூரெல்லாம்—மெள்ள
278. அகத்திற் கொடுபோனா ளன்புடனே யெல்லாம்
முகத்தில் தெளிந்துகொண்டாள் முற்றும்—மிகத்தயவா
279. யுண்ணப் பழையதிட்டாள் உள்ளிருந்து சாப்பிட்டேன்
எண்ணப் படாதுகறி என்னனை—புண்ணியவதி
280. தேகமிந்தத் தேகநான் செய்ததிலே பாரமில்லை
ஆகிலும் நான் பிள்ளை யவளுக்கே—ஓகைபெறு
281. காலத் திருநாளிற் கண்ணுக் கடங்காதென்
மாலைக் குழலி வருங்காட்சி—லீலைவிளைத்
282. தென்னுடனே ராத்ரி யிருந்து வருந்திவிட்ட
வன்னமுள்ளபொன்னுடம்பின்வாட்டமும்-பின்னுமுன்னுந்
283. தள்ளிநெருங் [2]குந்திருநாட் சந்தடிக்குள் ளேயுமென்மேற்
கள்ளமுடன் போட்ட கடைக்கண்ணும்-பிள்ளும்
284. அதரக் குறியு மதைப்பிறர்கா[3] ணுமல்
பதலப் படுத்திவரும் பண்பும் — இதமாய்ப்
285. [4]பிடரியில்நான் வைத்த பிறைக்குறியுங் கண்டேன்
உடலம்பூ ரித்தே னுடனே—தொடர்பிடியாய்
286. ஆள்விட் டழைத்தாள் அழைத்தவுடன் போய்ப்புகுந்
வாளொத்த கண்ணாள் மனையிலே—நாளிட்டுச் [தேன்

(பி - ம்.) 1. மயம்படிந்து. 2. கித்திருநாட். 3. ணுமல்மறை.
4. பிடரில்நகம்.

287. [1]சோதிடம் சொன்னான் சுகமென்று மாமியார்
காதல் மகளையுமென் கைக்கொடுத்து—மாதரசி
288. சென்மித்தாள் வேண்டியதைத் தேடினா ளும்முடைய
தன்மத்தி லுண்டெல்லாச் சம்பத்தும்—என்மட்டோ
289. நாலு தலைமுறையாய் நாங்க ளொருவன்கீழ்
மாலிமையாய்ப் பெண்டிருந்து வாழ்ந்ததல்லால்-சாலமாய்த்
290. தேடியுண்ண மாட்டோமென் சேயிழையிந் நாள்வரைக்கும்
நாடியது மில்லையொரு நாயகனைக்—கூடிய
291. நேரபல னேவலியச் சொன்ன ளவள்நினைத்த
காரியநான் மீறக் கடவேனோ—நீரிவளைப்
292. பெண்வைத்துக் கொள்ளுமென்று பேசினாள் முற்றுமிவள்
உண்டுநமக் [2]கென்றுநம்பி யொப்பினேன்—பண்டுள்ள
293. மாப்பிள்ளை மாரை மறந்தா ளவளெடுத்த
கோப்பெனக்கு நல்லதோ கூறுங்கால்—சாப்பிடத்தான்
294. நேரமுண்டோ வேறே நினைவுமுண்டோ ஆண்பிள்ளைக்கு
வீரமுண்டோ பெண்மோக மேற்கொண்டால்—பாரமென்
295. வைத்தாள் செலவுக்குமாதவழி நூறுபொன்னும்[மேல்
உத்தார மென்றேன் ஒறுப்பேனோ—முத்துமுத்தாய்ப்
296. பெண்வைத்த மாப்பிள்ளையைப் பேர்சொல்லா ளாமத்தை
கண்டமட்டி லேஒழிப்பாம் கைநெரிப்பாய்-முண்டையவள்
297. அக்காள் கொழுந்தன்மேல் ஆணை கடவாளாம்
சிக்காதோ என்போல்வார் சிந்தனைதான்—எக்காலும்
298. தூக்கமுண்டோ கண்ணுக்குத் தூங்காச் சிவன்ராத்ரி
நீக்கமுண்டோ எங்களுக்கு நித்தமுண்டு—நோக்கமற
299. மாத மொருக்கால் மனைவிலங்கு நாள்மூன்று
மோதுவதேன் மூன்று யுகமன்றோ—வேதனையாய்ப்

(பி - ம்.) 1. சோதிரிஷம். 2. கென்று சொலி.

300. பள்ளி யறைக்குட் படுத்திருப்பே னுலாநாள்
வெள்ளி யுதிக்குமுந்தி மெல்லியல்போய்த்—தெள்ளு
301. புனலாடி வந்தாள் புணர்ச்சியின்றி யெவ்வா
றெனைநீ மறந்திருந்த தென்றாள்—கனவிலே
302. கண்டேனுன் னோடுதினங் கைகலந்தே னென்றுமுத்திக்
கொண்டேனைக் கண்சிவந்து கோவித்தாள்-உண்டாச்சோ
303. நித்திரையுன் கண்களுக்கு நீகனவு காணவென
மெத்த மனம்பொருமி விம்மினாள்—அத்தனையும்
304. சொல்லும் பொழுதெளிதோ தோகைநல்லாள் [1]பாவனையிற்
கல்லுங் குழைந்து கரையாதோ—சொல்லுகின்ற
305. கைப்பொருளை யெண்ணுமோ கன்னியனு போகமே
மெய்ப்பொருளென் றெண்ணினேன் வேறில்லை-யிப்படியே
306. [2]தேனு மதுரித்த தீம்பாலும் போற்கலந்து
நானு மவளும் நடக்குநாள்—மானூர்க்
307. குடியிருந்த வேதியரிற் கோதண்ட னென்போன்
முடியமறை நூலுணர்ந்த முன்னோன்—வடிவிலே
308. கன்னல்வில்வே ளொப்பான் கனகாவி யப்ரசங்கி
யென்னுடனே நட்பாய்வந் தெய்தினான்—பின்னமடு
309. வெங்களிலே யொன்றா யிருந்தோ மவனேயென்
வங்கணத்துக்கேற்றபிள்ளை மாணிக்கம்-அங்கொருநாள்
310. என்செய்தி யைக்கேட்டான் யான்சொன்னே னப்பொழுது
தன்செய்தி யைக்கேளாய் தம்பியென்றான்-முன்செய்த
311. கன்மவினை யாராற் கடக்கப் படுமெனக்குச்
சென்மதல மானூர் சிலகாலம்—நன்மையாய்த்
312. தாதைசொல்லுக் கீழே நடந்தேன் தமையன்கை
மோதிரக் கல்லின் முகாந்திரமாய்—நீதிகெடச்

(பி - ம்.) 1. பாவனைக்குக். 2. தேனுவகதுசித்த; தேனுநதிரித்த.

313. சொல்லாத வம்புதும்பு சொன்னான் பிதாவுமெனைப்
பொல்லாத தூர்ச்சனை பேசவென்றான்—நல்லதென்றே

314. அன்னைகிட்டப் போய்நின் றழுதே னவளுக்கு
மென்னிடத்தில் வார மெளிதல்ல—சன்னையாய்

315. உள்ளுக்குப் போனா ளொருசாவி கையெடுத்தாள்
மெள்ளக் கொடுத்தாள் வெளிவந்து—பிள்ளாய்

316. சதுருடனே போய்வடக்குத் தாண்டிப்போ காமல்
மதுரைமட்டி லேதிரும்பி வாவென்—றுதிர்தடங்கண்

317. நீராலே என்னை நிறையமுழுக் காட்டினாள்
ஆராலே கூடுமிந்த ஆதரவு—தோராயங்

318. தாயா ரடியிணைமேல் தாழ்ந்தேன் விடைகொண்டேன்
பேயான பாவி பிறப்பட்டேன்—போயுலகில்

319. அங்கங்கே சஞ்சரித்தே னப்பாலுன் போலிந்தச்
சங்கரனார் கோவில் தனில்வந்தேன்—உங்கள்

320. அதிரூப ரெத்னமெனு மாயிழைக்கு மூத்த
சதிகாரி மோகவல்லி தன்பால்—விதிகொடுபோய்

321. விட்டதினா லிந்த வெறுமையானேனென் றுண்டோ
பட்டதெல்லாஞ் சொன்னானோர் பாரதம்போல்—மட்

322. முன்பு [1] தலைமகளாய் மோகவல்லி மாத்ரமல்லாற்
பின்பு நெடுநாளாய்ப் பிள்ளையின்றிப்—பொன்பறிக்கும்

323. அத்தையனு ராகவல்லி யம்மையார் நோன்பிருந்து
நித்திய னுாாகசுனை நீராடிச்—சுத்தமாய்

324. உண்டுசிவாலயத்தினுள்ளே [2] தவங்கிடந்து டொடியைப்
கெண்டையங்கண் [3] ணட்கதுவே கெற்பமாய்—லுண்

325. பெற்றா ளதிரூப ரெத்னமென் று பேரிட்டாள்
வற்றாத [4] செல்வம் வளர்த்தியாய்—முற்றினாள்

(பி - ம்.) 1. தலைமகள். 2. தவங்கிடந்தாள். 3. ணுளதுவே. 4. செல்வ.

326. பேதை பெதும்பைபோய்ப் பின்னைத் [1]திரண்டுவிட்டாள்
மாதுபன்னி ரண்டு வயதிலே—கோதைக்குப்
327. புத்திசொன்ன தாய்ப்பாவி பூராயங் கேளென்று
னத்தனையு மெங்கே [2]யறிந்தாளோ—குத்துமுலை
328. பாக்களவு தோன்றும் பருவத்தே தன்மகளை
ஆக்கமுட னுட்கொண் டருகழைத்துப்—பாக்ய
329. மொருவர் வசமோ யுனக்குநல்ல வாலப்
பருவமிது தேடியுண்ணப் பக்வங்—குருவசனந்
330. தப்பினுந் தாய்வார்த்தை தன்னை யுபதேச[பொருள்கள்
மெய்ப்பொருளாய்க் கொள்ளுவதே மேம்பாடு—கைப்
331. உள்ளவரை முற்பணையங் கேளாதே யுள்படுத்துக்
கள்ளவித மெல்லாங்கேள் கண்மணியே—மெள்ள
332. வரவழையுன் வீட்டிலே வந்தா லெதிர்போய்ப்
பரவு வெகுமானம் பண்ணு—தெருவிலே
333. கண்டா லெழுந்திருந்து நில்லு சனமோகங்
கொண்டார்போல மெத்தக் குழைந்துவிடு—பெண்டாக:
334 வைத்தருளும் வேறே மனம்பிடிக்கு தில்லையென்று
சத்தியமாய்ச் சும்மா தலையிலடி—[3]நித்திரையை
335. ஆசைப் படாதே யரைவிளைந்தா லன்றிநம்போல்
வேசைக்கு வெள்ளாண்மை வேறுண்டோ-பேசையிலே
336. வேற்றொருத்தி பேச்செடுக்க வொட்டாதே விம்மியழு
தூற்றுகளக் கண்ணீ ருகுத்துவிடு—தூற்றுங்
337. களவுவெளி வாராமல் கைந்நகத்துக் குள்ளே
மிளகுபொடி வைத்தவளே வேசை—இளநேரம்
338. வீதியிலே வந்துநில்லு வேடிக்கை பண்ணுகொண்டை
கோதி முடிக்குங் குணலம்போல்—டாதேயுன்

(பி - ம்.) 1. திரண்டாளாம். 2. யறிந்தாளோ. 3. நித்திரையில்.

339. னுத்தரிகஞ் சோர வுபயமுலை காட்டிமறை
யத்தனையும் வேசைக் க[டை]டவன்றோ—துத்தாகத்
340. [1]தெட்டித் தொழில்நடத்தும் தேவடியார்க் கல்லவோ
கட்டித் திரவியங்கள் கைசேரும்—சட்டமாய்ச்
341. சஞ்சரிப்போர் வந்தால் [2]தாரதாரத்துக் கேற்றபடி
கொஞ்சி மலரணைமேற் கூடியிரு—மிஞ்சு
342. கடினக்கா ரர்வந்தாற் கைச்சரசத் தோடே
குடிலத்தாற் கொஞ்சிக் குறும்பிப்—[3]பிடிபாடாய்ச்
343. செய்யுந் தொழிலறிந்து செய்து வசப்படுத்தி
மெய்யெங்கு மோடி விரிரென்றாற்—பையவெழுந்
344. தங்நேரங் கூடி யதுகொண்டு பூரையிடு
பொன்னேசும் மாவுடம்பைப் போடாதே—பின்னை
345. மதனூல் படித்து வருவார் சிலபேர்
இதமாகக் கூடி யிருந்தாற்—பதறுமற்
346. கூச்ச மினிப்பொறேன் கொல்லாதே கார்யமெனக்
காச்சுதென்று கட்டி யணைத்தெடுத்து—மூச்சடக்கிக்
347. கன்னத்திற் பூணக் கடித்தா லதுகொண்டு
தன்னைத் தனக்குள்ளே தான்மகிழ்ந்து—பின்னைத்தான்
348. பாராட்டான் விட்டு விடுவான் பழிகாரி
சீராட்டோ காமஞ் செலவிடுதல்—போராட்டாய்த்
349. [4]தம்பனைக்கே தேனு மொன்றைப் பூசித் தழுவவரும்
வம்பரைப்பே யாக்க மருந்துண்டு—செம்பரத்தம்
350. பூவினு [5]மத்தப் புழுப்போட் டரைத்தபொடி
தூவிலங்க னேயடங்குந் தன்மார்க்கம்—நாவலவர்

(பி - ம்.) 1. செட்டித். 2. தாரதலத்துக். 3. பிடிபடாச்.
4. தம்பனத்தே. 5. மத்தம் பொழுப்போட்.

351. வந்தாலுஞ் சும்மா வரச்சொல்லு நாலிரண்டு
தந்தாலு மாதாயந் தக்கினது—விக்தையாய்
352. எப்படித்தான் கூடி யிருப்பினும்பின் வாங்காமல்
அப்படியே கூடி யனுப்பிவிடு—தப்பரையும்
353. பொய்யா சையுமல்லாற் பொன்னே யொருவர்மேல்
மெய்யாசை கொண்டவளும் வேசையோ-கைப்பிடியாய்
354. ஊர்மணியக் கார னழைத்தா லுடனேபோ
பேர்மகிமை கொண்டு பிழைக்கலாம்—ஆர்வரினும்
355. முன்புமடிச் சீலை முடிப்பு நெகிழ்க்கவிட்டுப்
பின்பு [1]நெகிழ்த்துன் பிடைவையைநீ—யன்புபெறச்
356. சல்லித் தனம்பேசுந் தாறுமா றுக்காரக்
[2]குல்லைத் திருடரைநீ கூடாதே—கல்லுக்குள்
357. நாருரிக்கி ஏள்சிறுக்கி நாலாங் குடியாள்தன்
காரியத்தைக் கேட்டாற் கதைகண்டாய்—பேராய்த்
358. தலையெடுக்கு நாளிலொற்றைத் தாலிமுத லில்லை
விலைமதிக்கக் கூடாதென் மின்னே—முலையிலிட்ட
359. முத்துவட மிப்போது முச்சூடும் தேடிலு
ளத்தனையும் பூண்டா லசைவாளோ—இத்தனையும்
360. பெற்றதாய் சொன்ன பிடிப்பின் படிநடந்தோ
மற்றதிலோ சொல்லாய் மகளேநீ—யிற்றைவரை
361. யென்காலம் போக்கினே னேழைப்பெண் மூத்தமகள்
உன்கால மாச்சுதினி யுன்னிச்சை—மின்கொடியே
362. புத்தியுண்டாய் வாழென்று போதித்தாள் வெள்ளரி
வித்திவிடப் பாகல் விளையுமோ—[3]தத்தியமீன்
363 குஞ்சுக்கு நீச்சுக் கொடுத்ததா ரத்தனையும்
வஞ்சிக்குத் தன்படியே வாராதோ—மிஞ்சிப்போய்

(பி - ம்.) 1. நெகிழுன். 2. குல்லத் திருடருடன். 3. தத்திமீன்.

364. அந்தச் சணமே யணிவிளக்கி லேகொளுத்தும்
பந்தத்தைப் போலோடிப் பற்றினுள்—சந்ததமும்

365. அப்படியே யெல்லா மவளுக்கே தேடியிட்டுக்
கைப்பொருளைத் தோற்றுக் கழிவோரு—மைப்படிவேற்

366. கண்ணாள் பொருட்டாற் கடன்காரர் வந்திழுக்க
உண்ணு மறிப்பி லுடைவாரும்—பெண்ணரசி

367. பாரமனை வாசலையே பார்த்தகண்ணும் பூத்துப்போய்த்
தேரடியில் நின்று திகைப்பாரும்—ஒரொருகால்

368. ஆவலுடன் கேட்பாளென் றுனவெள்ளை வெற்றிலையும்
சீவலுமாய்ப் பின்னே திரிவாரும்—ராவெல்லாம்

369. திட்டியரு காகத் [1]தெருமதிலை யொட்டிநின்று
கிட்டியனு போகவிதங் கேட்பாரும்—வட்டமுக

370. வாட்டத்தி னலவள்மேல் வாடைமஞ்ச ளைத்திருநாள்
கூட்டத்திற் போயிழுசிக் கொள்வாருஞ்—சூட்டுமலர்ப்

371. பூங்குழலாள் மேல்வழக்குப் போடலா மென்றுமுதல்
வாங்கியதை டாப்பெழுதி வைப்பாரும்—ஏங்கியுடல்

372. வேர்த்துப்போய் வேறொருவன் மேலே யவள்நோக்கம்
பார்த்துப்பார்த் துள்ளம் பதைப்பாரும்—வார்த்தைக்

373. கடங்குமோ உங்க [2]ளதி ரூபரத்ன மென்னுந்
தடங்கண்ணாள் செய்யுமிந்த்ர சாலம்—இடங்கேடாய்ச்

374. சென்றுசிக்கிக் கொண்டாய் சிறுபிள்ளாய் கண்டசெய்தி [றக்
இன்றுரைத்தே னப்பாலுன் னிச்சையென்றான்·நன்றி பெ

375. கூறுமவன் புத்தியிங்கே கொள்ளுமோ நெட்டிமுளை
பாறையிலே வைத்தறைந்தாற் பாயுமோ—மீறுகின்ற

(மீ - ம்.) 1. திருமதிலை யொண்டி நின்று. 2. ளதிரூபி யென்னுந்.

376. காமப்பேய் கொண்டாரைக் கள்ளுண்டா ரென்பாரே
தாமப்பேய் கொள்ளா தவரன்றோ—சீமாட்டிக்
377. காதியிலே கொண்டகட னத்தனையும் தீர்ந்தொழியப்
பாதியிலே நீங்குமோ பாண்சனியன்—நீதியெல்லாங்
378. கூர்த்தறிந்தும் பட்டறிந்துங் கோதண்டன் புத்திசொன்ன
வார்த்தையெல்லா மங்கே மறந்துவிட்டேன்—பார்த்த
379. பெரியோர் நகைக்கப் [1]பிராமணிக்க மும்மென்
மரியாதை யுஞ்சுருட்டி வைத்தேன்—பரிவாக
380. மன்றலம்பூங் கோதைக்கு மாத வழிச்செலவுக்
கன்றுசொன்ன நூறுபொன்னு மல்லாமற்-குன்றுடையான்
381. செட்டி கடையிலே சில்வான மென்று ரொக்கங்
கட்டிக் கொடுத்தேன் கணக்கேது—குட்டியென்ற
382. பாலிடைச்சி வாங்கினாள் பத்துப்பொன் நெய்க்காரிக்
காலகுட்டிக் கொன்பதுபொன் கைக்கொடுத்தேன்-சீலை
383. எல்லா நிரந்தரமாய்ப் பார்க்கி லிருபதுபொன்
செல்லுமொரு மாத்தைக்குத் [2]திட்டமதா—யல்லாவிலை
384. தொருதினத்தி லேகலவி யுச்சிதங்க ளாகி
யிருவருக்குஞ் சந்தோஷ மெய்தும்—பெருமிதத்தில்
385. என்னையவள் கேட்டாளோ வேதோ பயித்தியமென்
பொன்னரைஞா ணைக்கழற்றிப் பூட்டினேன்-பின்னியகாற்
386. கெச்சமென்று முந்தி யுடையென்றுங் கிண்ணமுலைக்
கச்சென்றுஞ் சொல்லிக் கணக்கிட்டு—நிச்சயமாய்
387. வாங்கினது நாற்பதுபொன் னுண்டொருவன் வல்லமை
தாங்குவதோ வந்த சமுசாரம்—பாங்குடனே [யாய்த்
388. சோற்றுப் புரைமணியஞ் சூரியனென் சொற்படியே
சீற்றப் பிறைநுதலாள் கேட்டவுடன்—ஏற்றமுள்ள

(பி - ம்.) 1. பிராமாணிக்க. 2. திட்டமாய்-நல்ல.

389. கோயிற் பணியார மெல்லாங் கொடுப்பனவ
ளாயிக்கும் பட்ச மதின்மேலே—ஞாயக்
390. கணக்கோவிண் கொள்ளைக் கணக்கெழுதி வாங்கிப்
பணக்கோட்டை கட்டினாள் பாவி—குணக்கேடன்
391. [1] ஆரியமுத தென்பா னவள்தமையன் மீதிலொரு
காரிய மாய்ச்சுமந்த காணிக்கை—சேரப்
392. பிறிவுக்குச் சீட்டிட்டார் பிள்ளைமார்க் கந்த
மறுவற்ற பெண்கொடிமேல் வன்ம—முறியிட்டுத்
393. தந்தபிணைக் காறர் தமைத்தொடர்ந்து காணுமல்
வந்திவளைத் தொல்லையிட்ட மாத்திரத்தே—சிந்தை
394. பொறுக்குமோ மேற்போட்டுக் கொண்டுதண்டல் போக
இறுக்கும்பொன் தொண்ணூறிறுத்தேன்-வெறுக்கரிது
395. தொந்தமுள்ளநாள்வரைக்குந்தோற்றுதுவேறென்றுஞ்
செந்தளிர்க்கை நல்லாள் திரண்டநாள்-வந்துதொட்ட
396. மாடனென்ற தேவதைக்கு வைச்சு வணங்குவளாம்
ஆடுபன்றி கோழியிவை யல்லாமற்—பாடுகின்ற
397. வில்லா முரசாம்கை வெட்டுங் கணியானும்
எல்லா வகைக்கு மெழுபதுபொன்—செல்லுமென்று
398. கேட்ட படிக்குக் கொடுத்தேன் கிழவியவள் [த்தே
பாட்டிவந்து பேய்க்கொடையைப் பாரப்பா-தோட்ட
399. மென்றுளங் கேபோ யிருந்தேன் மதினிமே
லொன்றுன தேவதைவந் துன்னூட்டு—நன்றென்று
400. பேசி விபூதிதந்தாள் பேய்தூரத்து நம்பியான்
பூசினேன் வாங்கியிது போதாதோ—காசுபட்ட
401. பாடுபட்டே தென்கைப் பணமெல்லாம் நட்டுவனுற்
கேடெனக்குக் கொஞ்சமோ கேட்குங்கால்-நாடளக்கும்

(பி - ம்.) 1. ஆரியமுதத னவன்தமையன்.

402. அத்தை யுடனே யவன்பழக்க மாய்மாலக்
குத்திர வித்தைக் குடுக்கையவன்—துத்திவேர்
403. நின்று சிணுங்கி [1]நிலம்பாண்டி நாவடக்கி [றிதரும்
கொன்றைவேர்க் கொல்லங்கோ வைக்கிழங்கு - [2]வென்
404. ஆனை வணங்கி [3]அழிஞ்சில் முறைமசக்கி
பூனை வணங்கி புழுக்கைவேர்—ஏனையுள்ள
405. சீதேவி யார்செங் கழுநீர் திகைப்பூடு
[4]மாதிகரா மான வளக்குவெல்லி—பாதிரிவேர்
406. ஆடையொட்டி யோடே [5]சுவரொட்டி யானதண்டைப்
பூடுசுற்றி மேற்படர்ந்த புல்லுருவி—மூடுகட்டும்
407. வெட்டிவேர் பூலாங் கிழங்குலா மிச்சம்வேர்
தட்டிலாக் கொண்டோ சனைக்கிழங்கு—கிட்டுங்
408. கடைமருந்து குங்குமப்பூ கஸ்தூரி மஞ்சள்
[6]சடைமாஞ்சி நாகணமஞ் சட்டி—அடைவுபெறு
409. செங்கழுநீர்க் கொட்டமொடு தேவதா ரம்மாத்தை
திங்குபச்சைக் கற்பூரஞ் சாதிக்காய்—பொங்கும்
410. அவின்புழுகு சட்டமிவை யத்தனையுங் கூட்டிக்
கவின்பெறத்தூ ளாக்கிக் கலந்து—குவிந்ததொரு
411. புற்றுப் பெருங்கரையான் [7]பூனைகிணம் பாம்புவிஷம்
வற்றிக் கிடந்த மரவட்டை—முற்றிய
412. செவ்வரணை யின்கொழுப்புச் சேரவே யம்மியிலிட்
டொவ்வொரு நாளைக் கொருச்சாமம்—எவ்வமறக்
413. கூட்டியொரு மாத மரைத்துக் குணம்பார்த்து
வாட்டமில்லாச் செண்பகப்பூ மல்லிகைப்பூ—சூட்டுகின்ற

---

(பி - ம்.)—1. நிலம்புரண்டி நாடடக்கி. 2. வென்றிபெறும். 3. அளிஞ்சு. 4. மாதிகரமன் வளக்கும் வெல்லி. 5. சுரோட்டியா மாதண்டைப். 6. சடாமாஞ்சி நாகணஞ்செஞ்சட்டி. 7. பூனைக்கண்.

414. முல்லைப்பூ வோலைப்பூ முற்றுமிதி பாகற்பூ
வில்லைப்பூ வாச மிகவூட்டி—வல்லதொரு
415. காடேறி [1]யொன்பதுநாள் காளிசிவம் பத்துநாள்
ஈடா மகோர மிருபதுநாள்—நாடுகின்ற
416. மோகினி நாற்பதுநாள் முற்று முருவேற்றி
வாகுபெறக் கூட்டுமவன் வாடையினால்—தோகைநல்லாள்
417. என்னைவசஞ் செய்தா ளிதுவெல்லாங் கோதண்டன்
சொன்னதுண்டு முன்னே சொலமறந்தேன்-பின்னேத்தான்
418. ஆடுதின மொவ்வொன் றடிப்பாள் பழிகாரி
வீடுதினம் பொல்லா வெடிநாறும்—சூடுமலர்ப்
419. பூங்குழலாள் வாயதரப் புத்தமுத பானத்தைத்
தீங்கெனவு மோரொருகாற் சிந்திக்கு—மாங்கிஷத்தின்
420. கோவைமுன்றி லூடென் குடுமியைத்தீண் டக்குனிந்து
போவெனிது போதாதோ பூசுரர்க்குப்—பாவையரிற்
421. கண்டதிலேகேட்டதிலே [2]யுண்டோவக்கள்ளிதன்மேல்
கொண்ட மயக்கமென்ன கொஞ்சமோ-முண்டகத்தின்
422. பூவல்லி [3]யங்கோதைப் பொன்வல்லி வீற்றிருக்குஞ்
சீவில்லி புத்தூர்த் திருவிழா—ஆவலுடன்
423. பார்க்கத் துணிந்து பயணம் புறப்பட்டாள்
ஆர்க்குத் தெரியுமவ ளாட்டமெல்லாஞ்—சேர்க்கையாய்ப்
424. பாங்குடனே நானும் நடந்தேன் பணம்பறிக்கும்
பூங்குழலா ளென்னைவிட்டுப் போவாளோ—ஆங்கே
425. யொருநாள் பகலிலென்னை ஒத்திக்கை பண்ணித்
திருநாட் கடைபார்க்கச் சென்றாள்—பெருமிதமாய்

(பி - ம்.) 1. யெண்பதுநாள் காளிக்குக் கண்பது நாள். 2. புண்டோவவள் தன்மேல். 3. யங்கோவிற்.

426. முத்துவகைவிற்கு முதலிசெட்டி தன்கடையில்[தெனப்
கொத்துவட மொன்றெடுத்துக் கொங்கையின்மேல்-ஒத்த
427. போட்டாளெனைப்பார்த்துப் பொங்கமோ சொல்லுமென்று
கேட்டா ளதைமதினி கேட்டுநின்று—கோட்டாலை
428. கொள்ளுவதேன் மீளக் கொடுத்துவிடென் றுளதற்கு
வள்ளமுலை மாதுமுகம் வாடிநின்றாள்—உள்ளபடி
429. சொல்லு கிரையமென்றேன் தொண்ணூறு பொன்னென்
நல்லதென்று ரொக்கமாய் நல்கினேன்—னெல்லாங் [றான்
430. கதைகாண் பவளக் கடையிலே சென்றாள்
இதைவாங்கு மென்று ளெடுத்தாள்—அதுவுமவள்
431. கைக்கட்டுக் கேற்ற கனத்த வுருட்டைத்தான்
ஓக்கிட்டா[1] னந்த வுருட்சியாய்—மைக்கட்
432. புரிகுழலாள் கேட்டாள் பொறுக்குமோ நெஞ்சும்
பரிவுடனே செட்டிதனைப் பார்த்தேன்—தெரியவிலை
433. கேட்டேன்பொன் முப்பதென்றான் கீழ்ப்படச்சொன் [னேன் குறைக்க
மாட்டோமென் றான்கொடுத்து வாங்கினேன்—பேட்
434. சவுளிக் கடைக்காரன் சங்குமுத்து செட்டி [டைச்
யிவளுக்கு மச்சாவி யென்று—ளவள்தமக்கை
435. மோகவல்லி மாப்பிள்ளையா முன்னு ளவன்வசத்தில்
நாகரிக மாம்பெரிய நார்ணவன்ன—மேகாங்கிப் [யிட்ட
436. பொன்னெழுத்துச் சேலையொன்று பொற்சரிகை வேலை
வன்ன ரவிக்கையொன் றுவாங்கியபின்—இன்னமொரு
437. வீரவா ழிப்பட்டு வேணுமென்றாள் சொன்னபடி
சேர விலைபார்த்துத் திட்டமா—யோர்முடிப்பாய்

(பி - ம்.) 1. னேந்த.

438. முத்திரைபோட் டெண்பதுபொ னீந்தேன்முதல்கொடுத்து
வைத்த கடக்காரி வாங்காளோ—குத்துவிளக்
439. குண்ணவொருதாலமுயர்ந்தகொட்டிக்கூடையெண்ணெய்க்
கிண்ணமிது வல்லாமற் கெண்டியொன்று—வண்ணப்
440. படிக்கமொன்று செம்பொன்று பைந்தொடிபால் வார்த்துக்
குடிக்க வொருசின்னக் கும்பா—நொடிக்குமுந்திப்
441. பன்னிரண்டு பொன்னளித்துக் கொண்டேனப் பாதகிமட்
டென்னிரண்டு கைக்கு மெனும்புண்டோ-பின்னிரண்டு
442. பாதிபசுக்கள் வாங்கினதும் பத்துப்பொன் பசுவைநல்லாட்
கேற்றசப்ர மஞ்ச மிருபதுபொன்—மேற்படியாள்
443. ஒப்புடனே யித்தனையு மூருக் கனுப்பினாள்
தெப்பமறு நாளிருந்து சேவித்துக்—கொப்பிலகு
444. காதாளும் பாங்கியரும் கன்னிதனைப் பெற்றெடுத்த
மாதாவு [1]மூத்தவரி கண்டிமாய்—நீதியுள்ள
445. சங்கரனார் கோவிலிலே வந்தோர் தனித்தொருநாள்
புங்கவனார் கோபுரத்திற் போயிருந்து—மங்கைநல்லாள்
446. கூடிய சித்திரை மாத்தைக் குறிப்புமுத
லாடிவரைக் குள்ளசெல வத்தனையும்—நாடி
447. யெழுதினே னெல்லா மிரண்டுமாத் தைக்குப்
பழுதிலையென் [2]னுத்தியெனப் பார்த்தேன்—முழுது
448. மறங்கிளர்வேற் கண்ணியொருமாத்தையிற்கைக்கொண்
வெறுங்கை முழுமிடுமோ மீள—நொறுங்கவே [டாள்
449. நின்றுநின்றால் குன்றுந் தொலையாதோ நீலிகிட்ட [ன்ற
வென்றுசென்றேன் அன்றுமுத லென்கையினாற்—செ

(பி - ம்.) 1. விரிகண்டியும். 2. னுஸ்தியெல்லாம்.

450. செலவல்லா லாதாயத் தேட்டுண்டோ பஞ்சிப்
பலவெல்லாஞ் சொல்லியென்ன பாவங்—குலவு

451. கனந்தருமென் காதிற் கடுக்கனெல்லா நல்லூ
ரனந்தபட்டன் வைத்த அடகு—தினந்தோறு

452. மொன்றொன்றாய் விற்றேன் ஒருமாதந் தாங்கினேன்
நன்றன்றோ [1]நானடந்த நாகரிகம்—என்றென்றும்

453. பொய்வாய்மை சொல்வேனோ போக்கற்றேன் தோராயங்
கைவாளை வெண்டயத்திற் கைவைத்தேன்—மைவிழியாள்

454. இத்தனையும் நாள்வழியே கண்டா ளிவனுக்கெள்
ளத்தனையு மில்லை யவகாசம்—வைத்தினிமேற்

455. [2]றள்ளவென்றேற் றிட்டாள் சயனத் தலத்திலொரு
கள்ளநித்திரை யுண்டாச்சு கண்களுக்கு—மெள்ளமெள்ள

456. வார்த்தைசொல்வதும்போட்டாள்மார்போடெடுத்தணைத்துச்
சேர்த்தளவில் வைது சிணுங்குவாள்—பார்த்திருக்க

457. முற்றுமோ கெட்டேன் முகந்திருப்பி முத்தமிட்டாற்
சற்றுமோ வாய்திறவாள் சாதிப்பாள்—நெற்றிதனைக்

458. கையாற் பிடித்துக் கடினத் தலைவலிபோற்
பொய்யாய்க் கிடந்து புலம்புவாள்—பைய

459. உடைநெகிழ்க்கக் கைவைத்தா லுள்வளைந்து கொண்டு
துடைநெருக்கிக் கொள்ளத் தொடுத்தாள்—இடையில்

460. வலிமையா லோரொருகால் [3]மல்லுப்பிடித்துக்
கல்விநான் செய்தாலும் கள்ளி—மலர்முகத்தைச்

---

(பி - ம்.) 1. தானடந்த. 2. தள்ளவெனத் தேற்றிட்டாள். 3. மல்பிடித்துத் தீராக்.

461. சுண்டி வயிற்றைச் [1]சுருக்கி வலிக்குதென்பாள்
கண்டிதமாய்க் கூடிவிட்ட காலத்தே—பெண்டிருந்து
462. நான்பெற்ற பேறுமெத்த நன்றாச்சு நில்லையோ
தான்செத் துலகாள்வார் தானுண்டோ—ஊன்வற்றி
463. யுன்னாலே கெட்ட வுடம்பலவோ வேசையுடம்
பென்னாளுங் கல்லா யிருக்குமோ—சொன்னாலுங்
464. கேளாய் விடுபோ கெடுவாயென் [2]பாளிதுவும்
நாளா சிறுதியிலே நான்கண்டேன்—மீளவுநான்
465. அஞ்சாறு நாட்டிரிந்தே னப்பா லொளித்தொளித்துச்
சஞ்சாரம் வேறாய்த் தலைப்பட்டாள்—நெஞ்சு
466. தரியா தொருநாள் தலைமயிரைப் பற்றி
எரியாத சிந்தை யெரியப்—பெரியகட்டிற்
467. காலுடனே சேர்த்தெனது காலா லுதைத்திட்டேன்
கோலமதி வாணுதலாள் கூவென்றாள்—நீலிதனைப்
468. பெற்றதா யோடிவந்தாள் பேய்கொண்ட பார்ப்பானீ
மற்றவள்போ லெண்ணாதே வம்பிநான்—[3]முற்றுமுற்றும்
469. வைத்து நடத்திவந்த மாப்பிளையோ வென்மகள்கா
னத்தனைக்கு வெள்ளாட்டி யானாளோ—புத்திகெட்டுப்
470. போமோகைக் கில்லையென்றாற் [4]போய்க்களைந்து போ
லாமோ வுனக்கிங் கடிபிடியோ—தாமதமேன் [காம
471. பிச்சைக்கு வந்தவனீ பெண்ணுக்கு மாப்பிளையோ
இச்சைப் படியே யெழுந்திருந்து—சச்சைவரு
472. முன்னே நடவென்றாள் மும்மடங்கு நானவளைச்
சொன்னேன் விடுவேனோ சொல்லாமல்—அந்நேர
473. மூத்தமக ளோடிவந்து முந்திதொட்டா ளோரறைநான்
தீத்தெறிக்க வைத்தென் செவியோடே—சூத்திரி

(பி - ம்.) 1. சுருட்டி. 2. ளாளிதெலாம். 3. முற்றமுற்ற.
4. போய்க்கழிந்து.

474. லஞ்சாறு பேர்வந் தவர்களையு மென்னையுங்கை
மிஞ்சா திடையே விலக்கினார்—பஞ்சாரத்
475. தாய்மாரும் [1]பெண்களுமாய்த் தாசிகளைக் கூட்டமிட்டார்
மாய்மாலக் காரியார் மாமியார்—ஞாயமின்றித்
476. தூர்த்தத் தனம்பேசுந் [2]தோழ்ப்பாடி வித்தையிலோர்
வார்த்தைப் பசப்பியார் மாமியார்—சேர்த்திறுகத்
477. தைச்சாலும் வாயைத் தமக்கிளைய பேரைமுதல்
மச்சாவி யென்றழைக்கு மாமியார்—அச்சுமழிந்
478. தோடை யெனப்பல்போ யுட்குழிந்த கன்னத்தை
வாடைமஞ்ச ளால்மினுக்கு மாமியார்—கூடுமெங்கள்
479. பூசலைக்கேட் டுப்பறைய [3]பொங்காரந் தீராமல்
வாசலையெட் டிப்பார்க்கு மாமியார்—தூசதனைத்
480. தம்பலச்சாற் றூல்நனைத்துத்தான்விலக்கம் [4]வந்தவர்போல்
வம்பில் தலைநனைக்கு மாமியார்—சொம்புகெட்டுக்
481. கொக்கிறகு போல்வெளுத்த கூந்தலுக்குக் கப்பேற்றி
மைக்குழல்போ லொக்கிடுவார் மாமியார்—ஒக்கநின்ற
482. தாசிகளுந் தானுமாய்ச் சந்தியில்நின் றங்கங்கே
யாசையுள்ள மாப்பிளைமார்க் காள்விட்டாள்—பேசவொரு
483. பின்னுமுன்னு மில்லாமற்பேய்கொண்டாற் [5]போல்விழிக்கு
மென்னையிழுத் தம்பலத்தே யேற்றினாள்—மன்னவரே
484. நாயன்மா ரேகேளும் நன்றி நடுவிலையோ
மாயமாய்ப் பொல்லா மருந்தையிட்டுப்—பேய்மகளை
485. நிந்தனைக்குள் ளாக்கிநல்ல நெல்லுக்குக் கீழ்க்களைபோல்
வந்தடுத்த நாலாறு மாதமாய்த்—தந்ததிலே
486. ஆறுநா றுண்டோ அசல்வீ டறியாதோ
தாறுமா றெங்கே தலைசெய்யும்—வீறுகளேன்

(பி - ம்.) 1. மக்களுமாய். 2. தோள்ப்பாடி. 3. பூங்காரம். 4. ஆனவர்போல். 5. போலவிழித்து.

487. தாலிகட்டிக் கொண்டானோ தாசி மகளையிவன்
வேலிகட்டிக் காக்க விதியுண்டோ—வாலிபத்தே
488. தாசிமகள் வீட்டில் தகப்பன்கீழ்ப் பிள்ளையாய்
ராசியமாய்ப் போய்வருவார் [1]ராச்சியத்திற்—பேசியிவ
489. னம்பலத் தேசென் றளப்பளந்தா லென்னைமுழு
வம்பியென்று சொல்லாரோ மற்றப்பேர்—தம்பி
490. தமைய னொருவீட்டிற் சஞ்சரிப்பா ருண்டே
அமையுமோ வென்வீட்டி லய்யா—சுமைதலையாய்ச்
491. சாடிசொல்லு வான்மறுநாள் சண்டைகளுண்டாக்குவிப்
தேடியுண்பா ரில்லையோ சீமையிலே-நாடியொரு [பான்
492. பெண்ணொன்று மாப்பிள்ளைமார் பேசிவந்தா லுங்கிரந்தி
புண்ணென்று தான்முதலே போதிப்பான்-மண்ணறுவான்
493. வந்தபணை யத்தை வரவொட்டான் தான்கொடுத்த
முந்திரிகைக் காசாலே முற்றுமோ—அந்திபகல்
494. சஞ்சாரம் பண்ணுமிவன் தந்துதர வேண்டியது
அஞ்சாறோ உண்டா மதைக்கேட்டுக்—கெஞ்சினள்
495. தந்தானோ சோற்றுக்குத் தட்டழிவு கொஞ்சமல்ல
வந்தா ரறிந்த மனுஷரொன்று—பைந்தொடியாள்
496. போவென்றா ளென்றவளைப் போட்டுமிதித் தானமூது
கூவென்றாள் கைசலிக்கக் குத்தினன்—சாவாளோ
497. ஏதோ கிடக்கிறா ளென்னுடைய மூத்தமகள்
சூதோ டறைந்தானென் கண்காணப்—போதுமினிக்
498. கேட்டாலே கேளுங்கோ கேளா திருந்துவிட்டால்
நாட்டா ரெலாமறிய நான்போறேன்—சேதட்டுணும்
499. எங்கள் குடியிருப்பு மின்னு ளிவளென்ற [கைதட்டிச்
சங்கையெல்லாம் போச்சுதென்று தாய்க்கிழவி—செங்

---

(பி - ம்.) 1. இல்லையோ.

500. சொன்னாள் சிவனேயுத்தோதகத்தி வார்த்தைமுன்னே
என்னாகு மக்கோ மென்வார்த்தை—பின்னாகக்[வுமென்
501. கூச்சமென்னைத் தள்ளவு மென் கோபமுன்னே தள்ள
பேச்சைநடு வர்க்கறியப் பேசினேன்—பூச்சியத்தோ
502. டங்குநான் சென்றதுவு மப்பா லவள்வீட்டிற்
பொங்குபே ராசையினாற் போனதுவும்-மங்கைநல்லாள்
503. வைப்பென் றிருந்ததுவும் வைப்பா யிருக்கையிலே
தப்பாய்நடந்ததுவுங் [1] தான்சொன்னேன்--கைப்பொருள்க
504. ளெல்லா மிவள்மகட்கே யீந்தே னவளொருத்தி
யல்லாம லென்மே லசூகையுண்டோ—நல்முழுப்
505. பூசணிக்காய் சோற்றிற் புதைக்கிறாள் கள்ளியுங்கள்
யோசனைக்குத் தோற்றாத தொன்றில்லை-ரோஷமில்லாத்
506. தாய்க்கிழவி சொன்ன சமத்தெல்லாம் நீர்கேட்டும்
வாய்க்கணக்காய்ச் சொல்லவென்றால் மட்டேது—பே
[ய்க்குணத்தால்
507. கொள்ளை [2] கொடுத்ததற்குங்கொண்டுவந்தகைமுதற்கும்
உள்ள படிகணக்கிங் குண்டென்று—மெள்ள
508. எடுத்தே னடுக்கேளு மெப்படியு மென்று
கொடுத்தேனன் றள்ளிட்டுக் கொண்டார்—கெடுத்தீர்
509. இரும்பு குடித்ததண்ணீ ரெப்படியு மீளத்
திரும்புமென்றோ தேவரீர் சித்தம்—விரும்பிமுன்னாள்
510. ஆசைப்பட் டாலவளுக் காயிரந்தான் செய்தாலும்
வேசைக்குப் போனபொருள் மீளுமோ - யோசனையில்
511. ஏதுவிவ காரமென்றா ரென்றளவில் மூத்தமகள்
காதி லடி [3] கொணர்ந்து காட்டினாள்—மாதுநல்லாட

---

(பி-ம்)—1. தான் சொல்லிக். 2. கொடுத்ததுவும். 3. கொண்டு வந்து.

512. கத்தனைபே ருங்கூடி யாளுக்கோர் வார்த்தைசொன்னு
லெத்தனைபேர்க்கென் றெதிர்கிற்பேன்-மொய்த்துவருங்
513. காகபந்துக் கூட்டாகக் கண்டவனும் நின்றவனும்
ஏகபந்துக் கட்டாளு லென்செய்வேன்—ஆகிலுநீர்
514. செய்யாத காரியத்தைச் செய்தீர் விலைமகளைக்
கையா லடிக்கக் கணக்குண்டோ—அய்யாமுன்
515. பட்டசள மெல்லாம் பழையகோ தண்டனதோ
கிட்டநிற்கி ருனவனைக் கேட்டீரோ—விட்டொழிந்து
516. போவதே தன்மமென்ருர் புத்தியற்ருல் மற்றவரை
நோவதே னென்னூரை நோக்கினேன்—ஜீவுடையாள்
517. [1]சன்னதியில்தெண்டனிட்டேன் தாயே யடியேன்கைப்
பொன்னையெல்லாங் கையாடிப் போவென்று-சொன்னவ
518. ளீக்கிரத்திற் கேட்டாலே தெய்வமீ யென்றெனது [ளைச்
வாய்க்குவந்த தெல்லாம்நான் வாழ்த்தினேன்-ஆக்கமுடன்
519. சங்கரரைத்தெண்டனிட்டேன்சன்னதியில்வந்தேனைப்
பங்கமிவை யெல்லாம் படுத்தினீர்—எங்கணுநீர்
520. பிச்சை யெடுத்துண்ணும் பேறெனக்குத் தந்தருளி
வைச்ச துமக்கே வரிசையென்றேன்—இச்சையுள்ள
521. தாயினுமன் பாய்வளர்த்துத் தாபரித்த சந்தனக்காப்
பாயிமுன்போயென்பொருமலாறினேன்-வாயமர்த்திப்
522. புத்தியிது வோமகனே பொன்னைநீ தேடினையோ
சித்திரமாய்ப் பொன்னுன்னைத் தேடினதோ—சத்தியமாய்ச்
523. சொன்னே[னே]யின்றனதுதோஷமெல்லாம் போச்சுதினி
முன்னே நடந்ததினு மும்மடங்கு—பொன்னுண்டாய்க்
524. கட்டாக வாழ்ந்திருநீ யென்று கலங்கழுவி
யிட்டாள்நான் சாப்பிடுமவ் வேளையிலே—விட்டாளே

(பி - ம்.) 1. சன்னதியைத்.

525. [1]மானூரிற் கோதண்டன் வந்தானுன் செய்தியென்ன
நானூர்க்கு நாளைப் பயணமென்றான்—ஏனடா
526. தாமதமே னின்னமென்றான் தன்னந் தனியேநான்
போமளவிற் கூடப் புறப்பட்டான்—சீமானீ[யெல்லாம்
527. சொன்னபுத்தி கேளாது தோற்றேன்கைப் பொன்னை
என்னபுத்தி யாயிருந்த தென்புத்தி—முன்னாளென்
528. தானைதினந் தோறுந் தலையாற் சுமடெடுத்து
சீதமிகுங் கேரள தேசத்தே—பாதை
529. மலையேறித் தேடிவைத்த வைப்பெல்லாங் கள்ளி
முலையேறிப் போக்கடித்தேன் முற்றும்—தொலையாக்
530. குலுக்கைநெல்விற் றெங்களன்னை கூட்டியுதை நீலி
[2]துலுக்குநடைக் கேமுழுதுந் தோற்றேன்—விலக்கரிய
531. [3]தானத்தைத் தேடுந் தனத்தை யவளதர
பானத்தை நம்பிப் பறிகொடுத்தேன்—மேனாளில்
532. மாமனார் செய்த [4]வரிசையெல்லா மிப்போது
காமனார் கொள்ளையிலே கைமறந்தேன்—[5]போமுன்
533. பசிக்குச் சமைத்திட்ட பாப்பாத்தி வைத்துப்
பொசிக்கக் கொடுத்தேனோ போத—வசைக்குமுற்றும்
534. பேரான தல்லாற் பிராமணர்கை யிற்கொடுத்துத்
தீராத பண்டைவிதி தீர்த்தேனோ—தோராய
535. முய்யும் [6]படியோர்ந் துணர்ந்து சிவாலயத்தே.
செய்யுந் திருப்பணியைச் செய்தேனோ—அய்யோ
536. பொதுவே பணத்தையெல்லாம் போக்கடித் தேனென்
றிதுவே பலநினைவா யெண்ணி—யதுவே

(பி - ம்.) 1. மானூருக். 2 துலக்கு நடைக். 3. தானத்தில். 4. வரிசையிலே வந்ததெல்லாங். 5. போமென். 6. படிதோர்ந்.

537. கருத்தா யிருபேருங் கண்ணுறக்க மின்றித்
தரித்தோம் நடுவழியில் தங்கிச்—சிரித்தாற
538. வேணுமினி யென்மனந்தான் மெத்தவுந்தா னேழைமனம்
வாணுதலாள் மேல்கிடந்த வன்மம்போய்—நாணுமின்றித்
539. தாயுந் தமக்கையும்போற் [1]றான்வழக்கில் வாராத
சேயுந் தனைநினைந்து நெட்டுயிர்த்தேன்—சாய
540. மெடுத்துமினி யந்தநினை வெண்ணுவதே னென்று
தடுத்ததொரு புத்தி [2]தனியே—படுத்திருந்து
541. காணும் பொழுதி லெழுந்து கழைவனத்தில்
தாணுவுறை நெல்லைத் தலஞ்சேர்ந்தோம்—பேணளந்த
542. தேங்கமழ்பூஞ் சோலைசுற்றுஞ் [3]செந்தமிழ்க்கிட்ணபுரத்தில்
வேங்கடமா யர்க்கு வியப்பாக—ஓங்குதனிச்
543. செங்கோல் மனுபதியாந் தெய்வச் சிலைராயன்
நங்கோன் சிறப்பாய் நடத்திவைக்கப்—பொங்கு
544. பெருநா கரிகமெல்லாம் பெற்றபுரட் டாசித்
திருநா ளெனக்கேட்டோஞ் செய்தி—யிருபேரும்
545. ஆவ லுடன்சென்றோ மன்றைத் தினங்கருட
சேவை கிடைத்துத் தெரிசித்தோம்—பூவுலகில்
546. எத்தலத்தும் வேண திருநாளுண் டித்திருநாட்
கொத்திருக்கு மென்றுரைக்க வொண்ணுமோ—[4]நித்திய [லும்
547. வந்த பிராமணர்க்கு மற்றச் சனங்களுக்குஞ்
செந்தமிழ்த் தெய்வச் சிலைராயன்—சந்ததமு
548. மன்னசொன்ன முங்கொடுக்குமவ்வூரிற்சென்றவர்க்குப்
பின்னையும் வேறார் பிடிக்குமோ—கன்னனென்று

(பி - ம்) 1. றான்வளவில். 2. தனையே. 3. சேர்ந்தகிட்.
4. நித்தநித்தம்

549\. கேட்டிருப்ப தல்லாமற் கீர்த்திமா னிங்கிவன்போல்
நாட்டினுககுள் ளேகொடுப்போர் நாயகாேனும்-தாட்டீகர்

550\. [1]தம்பிமா ரொவ்வொருத்தர் சற்குணங்கள் பார்க்குங்கால்
அம்புவிமே லுண்டோ அவர்க்குவமை-சொம்புபெறக்

551\. கண்ணுக்குத்தந்தபெருங் காட்சியெல்லாங்கண்டோம்விண்
மண்ணுக்கு மொன்ருய் [2]வளர்ந்துநின்ரேன் — பெண்ணுக்
[கோர்

552\. கல்லுருவந் தீர்த்தபொற்றாட் கண்ணனெழுந்தருளுஞ்
சில்வி நெடுங்கொடிஞ்சித் தேர்ப்பவுஞ்சு—மல்லாது

553\. தெப்பமீ தேறுந் திருப்பவிஞ்சுஞ் சேவித்தோம்
ஒப்புவே றுண்டோ வுலகத்தே—யிப்படியே

554\. சிங்கார மானதொரு தெய்வத் திருவிழாக்
கொங்கார் துழாய்யாயர் கொண்டருளி—யங்கொருநாள்

555\. த்யாகநிதி தெய்வச் சிலைப்பெருமாள் பின்னுதித்த
போக னழகப் பிரானனந்த—ஞகவிவர்

556\. முன்புவந்த மூவருக்கோர் மோகனமுத் தாமென்னப்
பின்புவந்த தம்பிப் பெருந்துணைவ—னன்பும்

557\. பொறையு முதாரமும் [3]புத்திதயவு
நிறைகுணமும் பெற்ற நிபுணன் —நறைகமழுந்

558\. தேனொழுகு வார்த்தைத் திருவேங் கடத்தப்பன்
மானபரன் கண்டபுது மண்டபத்தே—ஆனதொரு

559\. வேங்கடவர் வந்து விடாயாறி வீற்றிருக்கப்
பாங்குபெறு கற்பகப்பூம் பந்தரின்கீழ்—ஓங்குகுடைக்

560\. கன்னன் திருவேங் கடத்தப்பன் தந்ததிந்தப்
பொன்னின் சிவிகையின்மேற் போந்ததற்பின் —மன்னும்

561\. வரைகளி லேற்றமுள்ள மாமேருப் போலத்
துரைகளி லேற்றமுள்ள தூயோன் —தரைபுகழும்

(பி - ம்.) 1. தம்பியர்களோ ரொருத்தர். 2. வளர்ந்து நின்ற
3. புத்தியந்தயவு.

562. வாக னனபாயன் மார்க்கண்டன் போலவச்ர
தேகனெங்கள் தெய்வச் சிலைப்பெருமாள்—நாகரிக
563. தண்டிகை மேலுபய சாமரை நின்றிரட்ட
எண்டிசையு மேள மெழுந்தார்ப்ப—மண்டலிகர்
564. பல்லக்கு மாற்றப் பவிஞ்சு தொடர்ந்துவர
வல்லொக்கும் கொங்கை மடமாதர்—மெல்லப்
565. பரதவித கேளிக்கை பாராட்டத் தாள
சுருதியிசை பாகவதாள் சுற்ற— இருபுறத்தும்
566. பஞ்சவன்னப் பாவாடை வீசப் பாராசர்
தஞ்சமென வந்து சரணபுகுதக்—[1]கொஞ்சி
567. வருகுதிரைக் காரரெல்லாம் வந்துசலாஞ் செய்து
[2]பொருபுலிபோ லேமருங்கு போற்ற—அருவிகட்டும்
568. வல்லயக் காரர்முதல் மாலுதா [3]ரக்காரர்
வில்லுமுத லானபடை வீரர்களும்—நல்வரிசை
569. யூழியக் கார ருடன்வேவு காரருமத்
தாழ்வில காளாஞ்சி தாங்கினரும்—சூழுகின்ற
570. கட்டியக் காரருடன் கைகட்டி வாய்புதைத்துக்
கிட்டி ரகசியங்கள் கேட்போரும்—மட்டில்லா
571. வத்தகருங் கோடிதுரை மக்களும் யாசகரும்
முத்தமிழ் தேர்ந்த முதியோரும்—புத்திவல்ல
572. மந்திரி மாரும் வரிசைக் கணக்கருஞ்
சந்திரருந் தாரா கணமும்போல்—அந்த
573. முறைமுறையே செல்ல முகமண் டலத்தில்
நிறைகருணை பொங்கி நிரம்பத்—திறைகொணர்ந்த
574. வங்கர் தெலுங்கர் மராட ரிலாடர்கள்
கொங்கர் கலிங்கர் குருநாடர்—சிங்களர்.

---

(பி - ம்.) 1. கொஞ்சு. 2. பொருபுலிகள் போல்மருங்கு போத. 3. ரிக்காரர்.

575. ஈழூர் மகத ரியாழ்ப்பாணர் கொச்சிமலை
யாளர் குருகுதரே யாதியாய்ச்—சூழ்கவிகை
576. மன்ன வரும்ரங்கோன் வந்தான்வந் தானென்று
சின்ன மிருமருங்குஞ் சேவிப்பத்—தன்னுடைய
577. மெய்த்ததுணைத் தம்பிமார் மிக்கான தேசிகள்மேல்
கொத்துமுத்து வட்டக் குடைநிழற்கீழ்—ஒத்திருக்கும்
578. சீவக ரூபமுள்ள சிங்கத்தின் கன்றுகள்போல்
மூவருந் தண்டிகைக்கு முன்செல்லப்—பூவுலகு
579. முற்றத்தன் செங்கோல் முறைசெலுத்துமெங்கோமான்
சுற்றத்தா ரெல்லோருஞ் சூழ்ந்துவரக்—கொற்றப்
580. பரிசை யிரண்டுமிரு பக்கங் கவிப்ப
வரிசையுடன் மண்டபத்தில் வந்தான்—தெரிசிக்க
581. வேளை [1]முக்த்து விசையி பவாவென்று
காளமுகி லன்னான்முன் கைவிரித்தோம்--நாளமலர்க்
582. கஞ்ச மனையதடக் கையமைத்த மாத்திரத்தே
[2]நெஞ்ச முறுகவலை நீங்கினேன்—கொஞ்சமோ
583. மாக மளாவு மகமேரு வைச்சார்ந்த
காகமென லாகிக் கலிதீர்ந்தோம்—தோகையர்கள்
584. ஆடலும் பாடலும் அச்சுதனர் வீற்றிருப்பும்
கோடி வயிணவர்கள் கூட்டமும்—தேடரிய
585. தம்பி திருவேங் கடத்தப்பன் தான்கண்ட
செம்பொன்மணி மண்டபத்தின் செய்சிறப்பும்--வம்பமணி
586. வாய்க்கு ளிளமுறுவல் வந்தரும்பக் கண்டிதுநம்
பாக்கியமென் றுள்ளமொருபட்சமுற-நோக்குதொறும்
587. பூரித்து வேங்கடவர் பொற்றாள் பணிந்தெழுந்து
வேரித் துழாயர் விடைகொடுக்கப்—பாரித்த

(பி - ம்.) 1. கிடை[க்க]. 2. நெஞ்சிலுறுகவலை.

588. மிக்கமண்ணித் தண்டிகையின் மீதுசென் றேறியிரு
பக்கமு மன்னர் பவிஞ்சுவரத்—தக்க
589. திருமா [1]ளிகைபுகுந்து தெய்வச் சிலை[யெம்]
பெருமாள் பெரியகொலு வாகி—யருமையுள்ள
590. தம்பிமார் மூவருந் தந்தம் முறைமையுடன்
எம்பெருமான் பக்கத் [2]தினிதிருப்பச்—செம்பொன்
591. [3]வடமேரு வொன்றதனை மற்றமலை யெல்லாம்
புடைசூழ்ந் திருந்ததன்மை போலும்—கடலில்
592. வலம்புரி யாதியாய் மற்றுளசங் கெல்லாம்
சலஞ்சலத்தைச் சூழ்ந்ததன்மை போலும்-நிலம்புரக்கும்
593. மன்னவ ராதியாய் மற்றச் சனங்களெல்லாம்
தன்னைமுறை சூழ்ந்த சமுகத்தே--பொன்னிதழ்ப்பூஞ்
594. செந்திருவாழ் மார்பனெங்கள் தெய்வச் சிலையாயன்
[4]இந்திர னைப்போ லிருந்தளிக்கச்—சந்தமலர்ச்
595. சேக்கைதனி லந்தத் திருமா லமுதுசெய்த
பாக்கிலையெல் லோர்க்கும் பகுந்தளித்துப்-பூக்கமழுஞ்
596. சந்தனந் துப்பட்டி சாலுவை வேண்டியதும்
வந்தவர்க் கெல்லாம் வழங்கினான்—செந்தமிழைச்
597. சூட்டுங் குமார சுவாமி யவதானி
பாட்டும் படிப்பும் [5]பகுத்தறிந்து—நாட்டமுடன்
598. வேணுமென்ற ரொக்கமு மேலான சாலுவையும்
பூணு நவரெத்னப் பூஷணமுந்—தோணிறைந்த
599. சீனச் சரப்பளியுந் த்யாகங் கொடுத்துவெகு
மானத் துடனே வரிசைசெய்தான்—தானே

(பி - ம்.) 1. ளிகைபுகுந்த. 2. தினிதிருந்தார். 3. வடமேருப் போன்றதனை. 4. இந்திரன் போல்வீற் றெழுந்தருளி. 5. [பகுத்]தருளி.

600. வருஷம் பொழிவதுபோல் மாமறையோர்க் கெல்லாம்
[1]பெருகுங் கனகமழை பெய்தா—னிருபேரும்
601. அவ்வேளை சென்றோ மனகா வகளங்கா
செவ்வே ளனைய திறல்வீரா—கவ்வையெல்லாம்
602. மாற்றியெம்மை வாழ்விக்கும் வள்ளலே மண்டலிகர்
போற்றிசெயு மாஸ்த்தான போசனே—சாற்றும்
603. வடநூற்ப்ர சங்கமுமெம் வாக்கினால் கேட்டெம்
இடர்தீர்த்[2] தருளுநீயென்றே[ம்]-[3]புடையிருத்திக்
604. கேட்டருளும் போதுவிட் ணுகீர்த்தனத்தைச்சங்கீதப்
பாட்டுடனேப்ரசங்கம்பண்ணினோம்—தோட்டுமலர்ச்
605. செங்கமலம் போலுந் திருநயனத் தால்நோக்கி
யுங்கள் [4]மெலிவே துரைசெய்யு—மிங்குநம்பால்
606. வந்ததென்ன சொல்லுமென்ற மாத்திரத்தே [5]காரியத்
யந்தரங்க மாக வறிக்கையிட்டோம்—[6]முந்தச் [தை
607. செலவழிந்த துக்கதிகஞ் செம்பொன் வழங்கிச்
[7]சலவையும் பாக்கிலையுந் தந்து—சொலவென்றும்
608. நல்வாய்மை சொல்லி யனுப்பினான் நாங்களுமவ்
வில்வே ளனை வியந்தேத்திச்—[8]செல்வம்
609. பதினாறும் பெற்றிருநீ பாக்கியவா னென்று
துதிநாவால் மங்களமுஞ் சொல்லி—நிதியஞ்
610. செகராசர் நித்யந் திறையளக்க மேலு
மகராச னாகநன்றாய் வாழென்—றகமகிழ்ந்தந்
611. காசிபல கூறியெம் மைய [9]னனுக்கை பெற்று
வாசமுட னூர்க்கு வழிகொண்டோம்—[10]நேசமாய்க்

---

(பி - ம்) 1. பெருகக். 2. தருள்வதுநீ. 3. புடையிருந்து
4. மெலிவையுரைசெய்யு. 5. செய்திதன்னை. 6. முந்திச்
7. சலுவையும். 8. செல்வா. 9. னிருக்கைபெற்று.
10. நேசமுடன்.

612. கூடியிருந்த நண்பன் கோதண்டன் மானூர்க்கு
நாடிநடந் தான்வந்தே னானிங்கே—பாடினிகேள்
613. கூட்டுவிக்கும் நாள்விதியே கூட்டுவிப்ப தன்றிமற்றோர்
மூட்டுவிப்ப தாலே முடியுமோ—கோட்டி
614. பிடித்தலைந்தகாரியத்தைப்பேசுவதேனெல்லாம்[கைத்
படித்தவனான் [1]பட்டசனம்பார்க்கில்—தொடித்தளிர்க்
615. தாசிக ளாசை தனையினிமேல் நம்புமோ
சீசியதை [2]நன்றாகத் தேர்ந்தொழிந்தேன்—பேசியபா
616. டெல்லா மறிந்தனைநீ யிப்படிநி னன்னைமுன்போய்ச்
சொல்லா தொருவிதமாய்ச் சொல்லியே—வல்ல
617. குறைகளெல்லா மென்மேற் குறித்துநெடு நாளாய்ச்
சிறையிருந்தாள் தன்னைத் திருத்த—விறலிநீ
618. பேர்வென்றான் தூதிவளும் போனா ளவளிவளை
வாவென்றாள் திவ்யவஸ்து வந்ததென்றாள்-[3]தாவென்றாள்
619. வாசலிலே யெங்களய்யர் வந்தாரென் றாளவளும்
பூசனுட னுள்ளரங்கிற் போய்ப்புகுந்தாள்—பேசவல்ல
620. உத்தரமெல் லாம்பேசி யொக்கிட்டா ளப்பொழுதிற்
சித்த மிரங்கித் திருமகளும்—புத்ரனுடன்
621. வந்தாள் தெருவில் மணவாள னைத்தொழுதாள் [வும்
செந்தா மரைத்தாள்மேல் தெண்டனிட்டாள்-ஐந்தரு
622. தேனுவும்போல் நல்குகொடைத் தெய்வச் சிலைராயன்
தானுதவும் வேண்டியசம் பத்தினால்—வானவர்கள்
623. போற்றுகும ரேசனைப் பூசிக்கும் வேளையினும் [சர்
[4]யேற்றமுள்ள சந்திபண்ணு மெல்லையினும்-வேற்றர
624. .சிங்கமெனுந் தெய்வச் சிலைரா யனைவாழ்த்தி
நங்கையுடன் கூடி[யெந் நாளுமே]—பங்கயப்பூம்
625. பெண்மயிலும் மாலும் பிரியாமல் வாழ்வதுபோல்
வண்மையுடன் வாழ்ந்தார் மகிழ்ந்து.

**தெய்வச்சிலையார் விறலிவிடுதூது முற்றும்.**

---

(பி - ம்)—1. பட்டசனம். 2. நன்றாய்த் தெளிந்தொழிந்தேன்.
3. ஆவென்றாள். 4. யேற்ற சந்தி பண்ணுமவ் வேளையினும்.

அநுபந்தம் 1.

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌪𑍁𑌰𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌶𑌾𑌸𑌨𑌮𑍍

श्रीगणाधिपतये नमः

---

नमस्तुङ्गशिरश्चुम्बिचन्द्रचामरचारवे ।
त्रैलोक्यनगरारम्भमूलस्तम्भाय शम्भवे ॥ १

हरेर्लीलावराहस्य दंष्ट्रादण्डस्स पातु वः ।
हेमाद्रिकलशा यत्र धात्रीच्छत्रश्रियं दधौ ॥ २

कल्याणायास्तु तद्धाम प्रत्यूहतिमिरापहम् ।
यद्गजोऽप्यगजोद्भूतं हरिणापि च पूज्यते ॥ ३

अस्ति क्षीरमयाद्देवैर्मथ्यमानान्महाम्बुधेः ।
नवनीतमिवोद्भूतमपनीततमो महः ॥ ४

तस्यासीत्तनयस्तपोभिरतुलैरन्वर्थनामा बुधः
पुण्यैरस्य पुरूरवा भुजबलैरायुर्द्विषां निघ्नतः ।
तस्यायुर्नहुषोऽस्य तस्य पुरुषो युद्धे ययातिः क्षितौ
ख्यातस्तस्य तु तुर्वसुर्वसुनिभः श्रीदेवयानीपतेः ॥ ५

तद्वंशे देवकीजानिर्दिदीपे तिम्मभूपतिः ।
यशस्वी तुळुवेन्द्रेषु यदोः कृष्ण इवान्वये ॥ ६

ततोऽभूद्बुक्कमांजानिरीश्वरः क्षितिपालकः ।
अत्रासमगुणभ्रंशं मौलिरत्नं महीभुजाम् ॥ ७

सरसादुदभूत्तस्मान्नरसावनिपालकः ।
देवकीनन्दनात्कामो देवकीनन्दनादिव ॥ ८

विविधसुकृतोद्दामे रामेश्वरप्रमुखे मुहु-
मुदितहृदयस्थाने स्थाने व्यधत्त यथाविधि ।
बुधपरिवृतो नानादानानि यो भुवि षोडश
त्रिभुवनजनोद्गीतं स्फीतं यशः पुनरुक्तयन् ॥ ९

कावेरीमाशु बद्ध्वा बहळजलरयां तां विलङ्घ्यैव शत्रुं
जीवग्राहं गृहीत्वा समिति भुजबलात्तं च राज्यं तदीयम् ।
कृत्वा श्रीरङ्गपूर्वं तदपि निजवशे पट्टणं यो बभासे
कीर्तिस्तम्भं निखाय त्रिभुवनभवनस्तूयमानापदानः ॥ १०

चेरं चोळं च पाण्ड्यं तमपि च मधुरावल्लभं मानभूषं
वीर्योदग्रं तुरुष्कं गजपतिनृपतिं चापि जित्वा तथान्यान् ।
आ गङ्गातीरलङ्काप्रथमचरमभूभृत्तटान्तं नितान्तं
ख्यातः क्षोणीपतीनां स्रजमिव शिरसां शासनं यो व्यतानीत् ॥

तिप्पाजीनागलादेव्योः कौसल्याश्रीसुमित्रयोः ।
देव्योरिव नृसिंहेन्द्रात्तस्मात्पङ्क्तिरथादिव ॥ १२

वीरौ विनयिनौ रामलक्ष्मणाविव नन्दनौ ।
जातौ वीरनृसिंहेन्द्रकृष्णरायमहीपती ॥ १३

रङ्गक्षितीन्द्राच्युतदेवरायौ रक्षाधुरीणाविव नन्दसूनू ।
ओबाम्बिकायां नरसक्षितीन्द्रादुभावभूतामुरगेन्द्रसारौ ॥ १४

वीरश्रीनारसिंहस्स विजयनगरे रत्नसिंहासनस्थः
कीर्त्या नीत्या निरस्यन्नृगनलनहुषानप्यवन्यामथान्यान् ।
आ सेतोरा सुमेरोरवनिसुरनुतः स्वैरमा चोदयाद्रे-
रा पाश्चात्याचलान्तादखिलहृदयमावर्ज्य राज्यं शशास ॥ १५

नानादानान्यकार्षीत्कनकसदसि यः श्रीविरूपाक्षदेव-
स्थाने श्रीकाळहस्तीशितुरपि नगरे वेङ्कटाद्रौ च काञ्च्याम् ।
श्रीशैले शोणशैले महति हरिहरेऽहोबळे संगमे च
श्रीरङ्गे कुम्भकोणे हततमसि महानन्दितीर्थे निवृत्तौ ॥ १६

गोकर्णे रामसेतौ जगति तदितरेष्वप्यशेषेषु पुण्य-
स्थानेष्वारब्धनानाविधबहळमहादानवारिप्रवाहैः ।
यस्योदञ्चत्तुरङ्गप्रकरखुररजःशुष्यदम्भोधिमग्न-
क्ष्माभृत्पक्षच्छिदोद्यत्करकुलिशधरोत्कण्ठिता कुण्ठिताभूत् ॥ १७

ब्रह्माण्डं विश्वचक्रं घटमुदितमहाभूतकं रत्नधेनुं
सप्ताम्भोधींश्च कल्पक्षितिरुहलतिके काञ्चनीं कामधेनुम् ।
स्वर्णक्ष्मां यो हिरण्याश्वरथमपि तुलापूरुषं गोसहस्रं
हेमाश्वं हेमगर्भं कनककरिरथं पञ्चलाङ्गल्यतानीत् ॥ १८

प्राज्यं प्रशास्य निर्विघ्नं राज्यं द्यामिव शासितुम् ।
तस्मिन् गुणेन विख्याते क्षितेरिन्द्रे दिवं गते ॥ १९

ततोऽप्यवार्यवीर्यः श्रीकृष्णरायमहीपतिः ।
बिभर्ति मणिकेयूरनिर्विशेषं महीं भुजे ॥ २०

कीर्त्या यस्य समन्ततः प्रसृतया विश्वं रुचैक्यं व्रजे-
दित्याशङ्क्य पुरा पुरारिरभवद्भालेक्षणः प्रायशः ।
पद्माक्षोऽपि चतुर्भुजोऽजनि चतुर्वक्त्रोऽभवत्पद्मभूः
काळी खड्गमधाद्रमा च कमलं वीणां च वाणी करे ॥ २१

शत्रूणां वासमेते ददत इति रुषा किं नु सप्ताम्बुराशी-
न्नानासेनातुरङ्गत्रुटितवसुमतीधूळिकापाळिकाभिः ।
संशोष्य स्वैरमेतत्प्रतिनिधिजलधिश्रेणिका यो विधत्ते
ब्रह्माण्डस्वर्णमेरुप्रमुखनिजमहादानतोयैरमेयैः ॥ २२

स्तुत्यौदार्यस्सुधीभिस्स विजयनगरे रत्नसिंहासनस्थः
क्ष्मापालान्कृष्णरायक्षितिपतिरधरीकृत्य नीत्या नृगादीन् ।
आ पूर्वाद्रेरथास्तक्षितिधरकटकादा च हेमाचलान्ता-
दा सेतोरर्थिसार्थश्रियमिह बहळीकृत्य कीर्त्या बभासे ॥ २३

कृतवति सुरलोकं कृष्णराये निजांशं
तदनु तदनुजन्मा पुण्यकर्माच्युतेन्द्रः ।
अखिलमवनिलोकं स्वांशमेत्यारिजेता
विलसति हरिचेता विद्वदिष्टप्रदाता ॥ २४

अम्भोदेन निपीयमानसलिलोऽगस्त्येन पीतोज्झित-
स्तप्तो राघवसायकाग्निशिखया संतप्यमानः सदा ।

अन्तस्स्थैर्वडवामुखानलशिखाजालैर्विशुष्को ध्रुवं
यद्दानाम्बुघनाम्बुरम्बुधिरयं पूर्णः समुद्द्योतते ॥ २५

समजनि नरपालस्सत्यधर्मप्रतिष्ठो
विजयनगरराजद्रत्नसिंहासनस्थः ।
नृगनलनहुषादीन्नीचयन् राजनीत्या
निरुपमभुजवीर्यौदार्यभूरच्युतेन्द्रः ॥ २६

क्षितिप्रतिष्ठापितकीर्तिदेहे प्राप्ते पदं वैष्णवमच्युतेन्द्रे ।
अध्यास्य भद्रासनमस्य सूनुर्वीरो बभौ वेङ्कटदेवरायः ॥ २७

प्रशास्य राज्यं प्रसवास्त्ररूपे विद्वन्निधौ वेङ्कटरायभूपे ।
अभागधेयादचिरात्प्रजानामाखण्डलावासमथाधिरूढे ॥ २८

तिम्माम्बावरगर्भमौक्तिकमणी रङ्गक्षितीन्द्रात्मजः
क्षत्रालङ्करणेन पालितमहाकर्णाटराज्यश्रिया ।
शौर्यौदार्यदयावता स्वभगिनीभर्त्रा जगत्त्रायिणा
रामक्ष्मापतिनाप्यमात्यतिलकैः क्लृप्ताभिषेकक्रमः ॥ २९

श्रीविद्यानगरीललामनि महासाम्राज्यसिंहासने
सन्तानद्रुरिव स्फुरन् सुरगिरौ संहृत्य विद्वेषिणः ।
आ सेतोरपि चा हिमाद्रि रचयन् राज्ञो निजाज्ञाकरान्
सर्वां पालयते सदाशिवमहारायश्चिराय क्षमाम् ॥ ३०

विख्यातविक्रान्तिनयस्य यस्य
पट्टाभिषेके नियतं प्रजानाम् ।

आनन्दबाष्पैरभिषिच्यमाना
देवीपदं दर्शयते धरित्री ॥ ३१

गोत्रोद्धारविशारदं कुवलयापीडापहारोद्धुरं
सत्यायत्तमतिं समस्तसुमनस्स्तोमावनैकायनम् ।
संजातस्मृतिभूरुचिं सविजयं सन्नन्दकश्रीभरं
यं शंसन्ति यशोदयाश्रितगुणं कृष्णावतारं बुधाः ॥ ३२

विख्यातं बहुभोगश‍ृङ्गविभवैरुद्दामदानोद्धुरं
धर्मेण स्मृतिमात्रतोऽपि भुवने दक्षं प्रजारक्षणे ।
प्राप्तां यस्य भुजं भुजङ्गमहिभृद्दिग्दन्तिकूर्मोपमं
पातिव्रत्यपताकिकेति धरणीं जानन्तु सर्वे जनाः ॥ ३३

यत्सेनाधूळिपाळीशकमशकसमुच्चाटने धूमरेखा
रोमाळी कीर्तिवध्वा इव भुवनमिदं सर्वमन्तर्वहन्त्याः ।
वेणी नाणीयसीव प्रकटितविहृतेर्वीरलक्ष्म्या रणाग्रे
शान्त्यै जीमूतपङ्क्तिः किल सकलखलस्तोमदावानलानाम् ॥ ३४

तुङ्गामेव दयां पदाम्बुजयुगं शोणं च कृष्णां तनुं
रक्तां नीलसितां त्रिवेणिमनघां वीक्षां गिरं नर्मदाम् ।
तीर्थानीति समावहत्यवयवैः शेषाद्रिवासी विभुः
प्रायो यस्य विशेषभक्तिमुदितः पट्टाभिषेकश्रिये ॥ ३५

ओषधिपत्युपमायितगण्डस्तोषणरूपजितासमकाण्डः ।
भाषेगे तप्पुवरायरगण्डः पोषणनिर्भरभूनवखण्डः ॥ ३६

राजाधिराजबिरुदो राजराजसमांहृतिः ।
स्वाराजराजमानश्रीः श्रीराजपरमेश्वरः ॥ ३७

मूरुरायरगण्डाङ्को मेरुलङ्घियशोभरः ।
शरणागतमन्दारः परराजभयंकरः ॥ ३८

करदाखिलभूपालः परदारसहोदरः ।
हिन्दुरायसुरत्राणः सिन्धुराजगभीरधीः ॥ ३९

विष्टपत्रयविख्यातो दुष्टशार्दूलमर्दनः ।
अरीभगण्डभेरुण्डो हरिभक्तिसुधानिधिः ॥ ४०

वर्धमानापदानश्रीरर्द्धनारीनटेश्वरः ।
इत्यादिबिरुदैर्वन्दितत्या नित्यमभिष्टुतः ॥ ४१

काम्बोजभोजकालिङ्गकरहाटादिपार्थिवैः ।
सौविदल्लपदं प्राप्तैस्संदर्शितनृपोपदः ॥ ४२

सोऽयं नीतिविशारदः सुरतरुस्पर्द्धालुविश्राणनः
सर्वोर्वीशनतस्सदाशिवमहारायक्षमानायकः ।
बाहावङ्गदनिर्विशेषमखिलां सर्वंसहामुद्वहन्
विद्वत्त्राणपरायणो विजयते वीरप्रतापोन्नतः ॥ ४३

निधिवारणवेदेन्दुगणिते शकवत्सरे ।
प्रभवे वत्सरे मासि पौषे मकरसंक्रमे ॥ ४४

कृष्णपक्षे च पुण्यायांममायां सोमवासरे ।
कावेर्याः पावने तीरे रङ्गनाथस्य संनिधौ ॥ ४५

काश्यपान्वयरत्नेन शाश्वतातुलकीर्तिना ।
शश्वदाराधनाहृष्टविश्वनाथार्पितश्रिया ॥ ४६

धर्ममर्मविदा त्राणकर्मठेन मनीषिणा ।
दुर्मदारिमहीपालशर्मदारिभुजौजसा ॥ ४७

सत्यादृतान्तरङ्गेण सत्कृत्याश्रयशोभिना ।
सहितेनाधिकं भूत्या सर्वज्ञगुणशालिना ॥ ४८

श्रीमत्काञ्चीपुरवराधीश्वराङ्कोपशोभिना ।
मोकालिपट्टवर्द्धनविख्यातबिरुदश्रिया ॥ ४९

समयद्रोहरगण्डख्यातिना मनुनीतिना ।
प्रख्यातसमयकोलाहलचिह्नेन भास्वता ॥ ५०

ऐलावलीपुरवराधीश्वराङ्केन धीमता ।
मायातिरुवटिक्ष्मापसप्ताङ्गहरणौजसा ॥ ५१

यशस्विना पाण्ड्यकुलस्थापनाचार्यकीर्तिना ।
मान्येन दक्षिणमहासमुद्राधीश्वरेण च ॥ ५२

नागमक्ष्मापपौत्रेण नळनाभागकीर्तिना ।
श्रीविश्वनाथभूपालसिन्धुशीतळभानुना ॥ ५३

सुशीलनागमागर्भशुक्तिमुक्ताफलात्मना ।
कृष्णभूपतिना पुण्यकीर्तिना करुणाब्धिना ॥ ५४

परितः प्रणवाकारप्रकारवलयाञ्चितम् ।
कमनीयशिलास्तम्भकदम्बोत्तम्भितां वरम् ॥ ५५

विशङ्कटविटङ्काळीविराजद्रङ्गमण्टपम् ।
विधाय विपुलोत्तुङ्गगोपुरं देवमन्दिरम् ॥ ५६

विशालां रथवीथीं च स्यन्दनं मन्दरोपमम् ।
तत्र प्रतिष्ठितार्यश्रीतारकब्रह्मरूपिणे ॥ ५७

करुणारसकल्लोलवरुणालयचक्षुषे ।
शरणागतगीर्वाणभरणाधीनचेतसे ॥ ५८

कालचक्रघंटीयन्त्रकल्पनाशिल्पकारिणे ।
कैवल्यकल्पलतिकाकन्दळोपघ्नकीर्तये ॥ ५९

कौस्तुभारुणपाथोजपार्श्वे लीनाळिमालया ।
वनमालिकया चारुवक्षसे हतरक्षसे ॥ ६०

इन्दिराया जगन्मातुर्मन्दिरायितवक्षसे ।
छन्दसामादिकन्दाय चम्पकद्युतिवाससे ॥ ६१

शरण्याय सतामिन्दुतरण्याकारचक्षुषे ।
हिरण्यासुरसंहर्त्रे धरण्या गृहमेधिने ॥ ६२

कंसादिविबुधारातिहिंसाविधपटीयसे ।
संसारसागरौर्वाय पुंसामानमतां सताम् ॥ ६३

नवनीतमुषे नन्दरमणीशिक्षणीयताम् ।
अभिनीतवते शश्वदपनीतनतार्तये ॥ ६४

निरलीकवचोमूलमुरळीमधुरारवैः ।
तरलीकुर्वते गोपीः स्मरलीलापराङ्मुखीः ॥ ६५

अस्मिन्कृष्णापुरे पूर्णसान्निध्यं समुपेयुषे ।
तिरुवेङ्कटनाथाय विष्णवे प्रभविष्णवे ॥ ६६

धूपदीपसुधाहारनानापूपनिवेदनैः ।
नानापुष्पोपहारैश्च नैकदीपप्रदीपनैः ॥ ६७

नृत्तगीतमहावाद्यच्छत्रचामरवैभवैः ।
नित्यनैमित्तिकानन्तपूजां कर्तुं विशेषतः ॥ ६८

प्रतिवर्षसमारब्धरथोत्सवसमृद्धये ।
ग्रीष्मप्लवोत्सवायापि रम्ययात्रोत्सवाय च ॥ ६९

श्रीकीळवेम्पुनाडौ च प्रख्यातं पाण्ड्यमण्डले ।
ताम्रपर्णिनदीतीरे पावने वासमाश्रितम् ७०

श्रीवल्लमङ्गलख्यातश्चावटावपि विश्रुतम् ।
ख्याताद्धतिन्त्रिणीवृक्षादिमार्गैशान्यंतां श्रितम् ॥ ७१

धर्माद्विलमरायस्य ख्यातादपि नेडुंकुलात् ।
प्राच्यं श्रीशवळक्कारंकुळसीमाञ्चलादपि ॥ ७२

पुळियंकुळोडैक्कुलप्पिरायन्कुलतोऽपि च ।
भूसुरतटागसीमाञ्चलादाग्नेयतां श्रितम् ॥ ७३

श्रीमत्कळ्ळिक्कुळग्रामसीमान्तादपि दक्षिणम् ।
श्रीवेलंकुळकुल्याया नैर्ऋतीं दिशमाश्रितम् ॥ ७४

सुन्दरश्रीपाण्डयपूतुकुल्यायाश्चापि पश्चिमम् ।
ऐयनाकुळसीमान्ताद्वायवीमाश्रितं दिशम् ॥ ७५

श्रीकुळैयारुपेयालंकुळसीमाञ्चलोत्तरम् ।
कोक्कंतांपारपनयं कुळयोरुभयोरपि ॥ ७६

अपि मुत्तुमलाभिख्यगिरेरीशान्यतां श्रितम् ।
पुत्तनेरिग्रामकेण ख्यातारियकुळेन च ॥ ७७

कोटिक्कुळग्रामकेण कुत्तुक्कल्ग्रामकेण च ।
मुत्तूरुग्रामकेणापि श्रीमद्रामंकुळेन च ॥ ७८

ईत्तंपाट्टुग्रामकेण शिरियालंकुळेन च ।
युक्तं पाटैक्कुळेनापि संयुतं सस्यशोभितम् ॥ ७९

मुरप्पुनाडाळिकुटिभूत्रयोदशमान्वितम् ।
श्रीकृष्णापुरनामानं प्रख्यातं ग्राममुत्तमम् ॥ ८०

सर्वमान्यं चतुःसीमासंयुतं च समन्ततः ।
निधिनिक्षेपपाषाणसिद्धसाद्ध्यजलान्वितम् ॥ ८१

अक्षिण्यागामिसंयुक्तं देवभोग्यं समूरुहम् ।
वापीकूपतटाकैश्च कच्छारामैश्च संयुतम् ॥ ८२

अनेन वेङ्कटेशेन भोग्यमाचन्द्रतारकम् ।
दानाधमनविक्रीतियोग्यं विनिमयोचितम् ॥ ८३

शीतांशोर्वंशरत्नं समजनि नृपतिर्नन्दनामाथ जज्ञे
तत्सन्तत्यां चलिक्कक्षितिपतिरभवत्तत्कुले बिज्जलेन्द्रः ।
तद्वंशं सोमिदेवोऽलमकृत विमतासप्तदुर्गाणि हृत्वा
पौत्रस्तस्यार्रवीटीपुरपतिरुदभूत् पिंनमक्षोणिपालः ॥ ८४

भूकल्पशाखी प्रथितारवीटिबुक्कक्ष्मापोऽभवदस्य सूनुः ।
बल्लाम्बिका तस्य बभूव पत्नी पुरन्दरस्येव पुलोमकन्या ॥ ८५

अस्मादशेषभुवनावनवारिजाक्षा-
च्छृङ्गाररराजवदजायत रामराजः ।
लक्ष्मीसमानचरिता ललनामतल्ली
लक्काम्बिका रतिरिवाजनि तस्य देवी ॥ ८६

तस्याधिकैस्समभवत्तनयस्तपोभिः
श्रीरङ्गराजनृपतिः शशिवंशदीपः ।

आसंज्वलत्सु भुजधामसु यस्य चित्रं
नेत्राणि वैरिसुदृशां च निरञ्जनानि ॥ ८७

सतीं तिरुमलाम्बिकां चरितलीलयारुन्धती-
प्रथामपि तितिक्षया वसुमतीयशो रुन्धतीम् ।
हिमांशुरिव रोहिणीं हृदयहारिणीं सद्गुणै-
रमोदत सधर्मिणीमयमवाप्य वीराग्रणीः ॥ ८८

स्वैरं सुहृद्भरणजातरुचिः सुवृत्तः
स्वालोकदूरिततमास्तनयस्तदीयः ।
अत्रासुवृत्तिरवदातगुणानुवर्ती
श्रीरामराजनरपालमणिर्विरेजे ॥ ८९

यस्मिन् प्रशासति महीं जगदेकवीरे
भङ्गो नदीषु पतगेषु च पक्षपातः ।
वल्लीषु पल्लवरुचिर्वनितारतेषु
नीवीविमोचनमभून्नियतं प्रजानाम् ॥ ९०

सत्यानुरक्तेरितरावहेऽस्मिन् संपन्नके संभृतसर्वलोके ।
श्रीरामराजे श्रितसत्त्वशौर्ये शौरेः पदं शाश्वतमभ्युपेदे ॥ ९१

तदनु भुवमशेषां पालयन् राजनीत्या
तपनतनयजेता दानरीत्या महत्या ।

भरतमहिमभूमा भाति तस्यानुजन्मा
वरतिरुमलराजः साहितीभोजराजः ॥ १२

स्वैरं संहृतकण्टकोऽथ सुकृतोत्कृष्टं विधायाखिलं
भूकेदारमुदारदानसलिलासारैः समापूर्य च ।
संबद्धयानघकीर्तिसस्यनिवहं तत्पालिकां विक्रम-
श्रीकान्तां भुजकायमानशिखरे धत्ते हि यस्तेजसा ॥ १३

यस्यानुजन्मा विजयैकनर्मा रामाभिरामोऽतुलबाहुधामा ।
वीरो विरेजे भुवि वेङ्कटाद्रिराजः श्रिया निर्जिताराजराजः ॥ १४

धर्मममर्मविधस्तस्य धरणीकल्पशाखिनः ।
सोमवंशावतंसस्य स्वाधीननयसंपदः ॥ १५

श्रीविश्वनाथभूपालचिरपुण्यफलात्मना ।
कृष्णभूपतिनानेन कृपाकूपारचक्षुषा ॥ १६

विज्ञापितस्य विनयाद्विमतध्वान्तभास्वतः ।
प्राज्यकर्णाटराज्यश्रीस्थापनाचार्यविश्रुतेः ॥ १७

आत्रेयगोत्रपाथोजमार्तण्डस्य मनस्विनः ।
अन्तेम्बवरगण्डस्य सिन्ध्वन्तक्षितिरक्षिणः ॥ १८

वर्णितयशसो नानावर्णश्रीमण्डलीकगण्डस्य ।
एबिरुदरायराहुवेश्यैकभुजगबिरुदभरितस्य ॥ १९

विख्यातबिरुदमन्नियविभाळलीलस्य विजयशीलस्य ।
विश्वम्भराभृतिस्फुटविसृतधरणीवराहबिरुदस्य ॥ १००

कल्याणपुरनाथस्य शल्यारिसमतेजसः ।
वेङ्कत्रिभुवनीमल्ललिङ्गस्थिरयशोनिधेः ॥ १०१

श्रीमत्तिरुमलक्ष्मापशेखरस्य दयाम्बुधेः ।
विनयौदार्यशीलस्य विज्ञप्तिमनुपालयन् ॥ १०२

परीतः प्रयतैः स्निग्धैः पुरोहितपुरोगमैः ।
विविधैर्विबुधैः श्रौतपथिकैरधिकैर्गिरा ॥ १०३

सदाशिवमहारायो माननीयो मनस्विनाम् ।
सहिरण्यपयोधारापूर्वकं दत्तवान् मुदा ॥ १०४

सरससदाशिवरायक्षितिपतिवर्यस्य कीर्तिधुर्यस्य ।
शासनमिदं शरासनदाशरथेरमितहेमदानरतेः ॥ १०५

मृदुपदमिति ताम्रशासनार्थं
महितसदाशिवरायशासनेन ।
अभणदनुगुणं वचोमहिम्ना
सरसतरेण सभापतिस्स्वयम्भूः ॥ १०६

सदाशिवमहारायशासनाद्वीरणात्मजः ।
त्वष्टा श्रीवीरणाचार्यो व्यलिखत्ताम्रशासनम् ॥ १०७

दानपालनयोर्मध्ये दानाच्छ्रेयोऽनुपालनम् ।
दानात् स्वर्गमवाप्नोति पालनादच्युतं पदम् ॥ १०८

स्वदत्ताद्द्विगुणं पुण्यं परदत्तानुपालनम् ।
परदत्तापहारेण स्वदत्तं निष्फलं भवेत् ॥ १०९

स्वदत्तां परदत्तां वा यो हरेत वसुन्धराम् ।
षष्टिं वर्षसहस्राणि विष्ठायां जायते कृमिः ॥ १०१

एकैव भगिनी लोके सर्वेषामेव भूभुजाम् ।
न भोज्या न करग्राह्या देवदत्ता वसुन्धरा ॥ १११

सामान्योऽयं धर्मसेतुर्नृपाणां
काले काले पालनीयो भवद्भिः ।
सर्वानेतान् भाविनः पार्थिवेन्द्रान्
भूयो भूयो याचते रामचन्द्रः ॥ ११२

श्रीविरूपाक्ष

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

## அநுபந்தம். 2.

சுலோகம் — முதல் அநுபந்தத்தின் விஷயம்

1—3. சம்பு விஷ்ணுவின் வராகாவதாரம்: விநாயகர்: இவர்களைக் குறித்துக் காப்பு.

4—5. சந்திரகுலத்தைச் சார்ந்த வம்சமெனக் குறிப்பது.

6—7. துர்வசு பரம்பரையில் தேவகி கணவனான திம்மன் தோன்றியது. திம்மனுக்கு ஈஶ்வரன் பிறந்தது.

8. ஈஶ்வரனுக்கு நரசன் பிறந்தது.

9--10. நரசனுடைய தயாளகுணத்தையும் பெருங்கொடையையும் விவரிப்பது. சோழ நாட்டையும் சீரங்கபட்டணத்தையும் அவன் வெற்றி கொண்டது.

11. சேர சோழ பாண்டியர், துருஷ்கன், கஜபதி முதலியோரை வென்று அவர்களையவன் அடக்கியாண்டது.

12--14. அவனுக்குத் திப்பாஜி, நாகலாதேவியென்னும் இரு மனைவியரிடம் வீரநரசிம்மனும், கிருஷ்ணராயனும், ஓமாம்பிகை யென்பவளிடம் ரங்கக்ஷிதீந்திரனும், அச்சுத தேவராயனும் பிறந்தது.

15. வீர நரசிம்மன் தன் குடிகள் க்ஷேமமுற்றோங்கப் பெருங்கீர்த்தியுடன் விஜயநகரத்தில் அரசாண்டது.

16--18. அவன் புகழ்.

19. வீரநரசிம்மன் மணனுலகை நீத்து விண்ணுலகமடைந்தது.

20. அவனுக்குப் பின் கிருஷ்ணராயன் பட்டத்துக்கு வந்தது.

21--23. கிருஷ்ணராயன் கீர்த்தி.

24. கிருஷ்ணராயனுக்குப் பின் அவன் தம்பி அச்சுதேந்திரன் செங்கோல் செலுத்தியது.

25-26. அச்சுதேந்திரன் புகழ்.

27. அவன் மகன் வேங்கடராயன் பட்டத்துக்கு வந்தது.

28-30. வேங்கடராயனுக்குப் பின், ரங்கக்ஷிதீந்திரன் மகன் சதாசிவராயனை, கர்நாடகதேசத்து அரசன் ராமன் என்பவன் ஸ்ரீ வித்தியாநகரியில் முடி சூட்டியது.

31-43. சதாசிவராயன் புகழ்.

44-45. சகாப்தம் 1489-ல் காவேரி நதிக்கரையில் ஸ்ரீரங்கநாதர் முன்னிலையில் இந்த நன்கொடை அளிக்கப்பெற்றது.

46-57. கிருஷ்ண பூபதியென்பவன் கிருஷ்ணபுரத்தில் பெரிய விஷ்ணுகோயிலும், சுற்று மதிலும், ரங்க மண்டபமுங் கட்டி, வீதிகள் இயற்றித் தேரொன்றும் செய்துகொடுத்தது.

58-66. கிருஷ்ணபுரத்துக் கோயிற் சுவாமிமேற் றுதி.

67-69. அக்கோயிலிலுள்ள திருவேங்கட நாதருக்கு நித்திய நைமித்திக கருமங்களும், ரதம், தெப்பல், யாத்திரை முதலிய உத்சவங்களும், சரிவர நடைபெறும் பொருட்டு.

70-82. ஸ்ரீ கிருஷ்ணபுரமென்னும் ஊரை வேங்கடேசருக்குச் சர்வமான்யமாகக் கொடுப்பது.

96-104. கிருஷ்ணபூபதி வேண்டுகோளுக்கிணங்கித் திருமலைராயன் சதாசிவ ராயனுக்கு விண்ணப்பஞ் செய்ய அதற்கியைந்து சதாசிவராயன் மந்திரி பரிவாரங்களுடன் மனமகிழ்ந்து அளித்தது.

105-106. சபாபதிசுவயம்பு சாசனம் எழுதியதெனக் குறிப்பு.

107. வீரணாச்சாரியன் பதிவு செய்ததெனக் குறிப்பு.
இறுதியில் "ஸ்ரீ விருபாக்ஷ" எனக் கன்னடத்திற் கையொப்பம்.

# திருஞான முத்திரைப் பிரசுராலயத்தின் வெளியீடுகள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ... | 0 | 4 |
| 2. | ஸ்ரீ சடகோபன் சந்திர கலாமாலை ... | 0 | 6 |
| 3. | ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம்: தேவராஜ பாரதிகள் இயற்றிய காவியம் ... | 2 | 0 |
| 4. | ஸ்ரீ ராமாயணம் (பாசுரப்படி) பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்தது | இரு | |
| 5. | துலைவில்லி மங்கலம் தேவர்பிரான் பேரில் சந்திர கலாமாலை ... | 0 | |
| 6. | ஸ்ரீ நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் ... | 0 | 4 |
| 7. | திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம் ... | 0 | 4 |
| 8. | குருகூர்ப்பள்ளு ... | 0 | |
| 9. | ஆழ்வார்கள் வைபவம் (முதலாழ்வார், பெரியாழ்வார்) ... | 0 | |
| 10. | திருப்பணிமாலைகள் ... | 0 | |
| 13. | தெய்வச்சிலையார் விறலிவிடு தூது ... | 0 | 10 |